

# மீள்பார்வைக் கலண்டர் - 2019

தற்போது பரபரப்பான விற்பனையில்
பிரதிகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்





## நாட்டு நடப்புகளை சரியாகக் கணிக்க முடியுமான ஒரு சிவில் சமூகம் வேண்டும்

07

உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர்
- முன்னாள் அமீர், இலங்கை ஜமாஅதே இஸ்லாமி






# மீள்பார்வை


மීල්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/93/NEWS/2018 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 408 • 07 டிசம்பர் 2018 வெள்ளிக்கிழமை • ரபீஉல் அவ்வல் 1440 • விலை 40.00







# முஸ்லிம் கட்சிகள் முன்வைக்கும் தீர்வு என்ன?

ஜனநாயக விரோத அரசுக்காக ஒன்று திரண்ட சக்திகள் அனைத்தும் கூட்டணி அமைத்துச் செயற்படுவதற்கான முஸ் தீபுகளில் இறங்கியுள்ளன. ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து செயற்படுகின்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸோடு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பும் இந்தக் கூட்டணியில் இணை ந்து கொள்வதற்கான இணக்கத்தைத் தெரிவித்துள்ளது. இந்தக் கூட்டணிக்கான கொள்கை யாப்பு வரையும் வேலைகள் ஆரம்பித்திருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரொருவர் தகவல் தெரிவித்தார்.

இந்த நிலையில் இந்தக் கூட்டணியில் இணைவதன் ஊடாக தமிழரின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான உடன்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு எட்டியிருக்கிறது. (பக். 15)



அரச நிருவாகத் துறையின் உயர்ந்த பதவிக்கு மேலதிக தேர்தல் ஆணையாளராகக் கடமையாற்றி எம்.எம். முஹம்மத் பதவி உயர்வு பெற்றுள்ளார். நவம்பர் 29 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் அவர் தேர்தல்கள் பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றுவார்.

## பிணைமுறி விவகாரத்தின்போது ஏன் தலையிடவில்லை ?



தனியார் துறை தொழிலதிபர்கள் ஜனாதிபதி சிரிசேனவை இந்தவாரம் சந்தித்து அரசியல் நெருக்கடியினால் நாட்டில் ஏற்பட்டிருக்கும் சமூக-பொரு ளாதாரத் தாக்கங்கள் பற்றி விளக்கமளித்துள்ளனர். அரசியல் நெருக்கடியின் தாக்கங்கள் பற்றிய பட்டியலொன்றை இவர்கள் முன்வைத்த பொழுது ஜனாதிபதி காது தாழ்த்திக் கேட்டுள்ளார். (பக். 15)

## தமிழர் பிரச்சினைக்கான தீர்வை முன்வைத்தே ஐதேமு உடன் இணக்கம்



தமிழ் மக்களின் இனப் பிரச்சனைக் கான தீர்வுத் திட்டத்தை உள்ளடக்கிய வகை யில் வரையப்பட்டுள்ள அரசியலமைப்பு வரைபை எதிர்வரும் பெப்ரவரி மாதம் நான்காம் தேதிக்கு முன்னர் நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்க ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணக்கம் காணப்பட் டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிக்கின்றது.

ஐக்கிய தேசிய முன்னணியுடன் காணப் பட்டுள்ள இணக்கத்தை எழுத்து மூலம் இரு தரப்பினரும் பரிமாற்றிக் கொள்ள இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா பிபிசிக்கு தெரிவித் துள்ளார். (பக். 15)



## கோட்டாவுக்கு எதிரான வழக்கு விசாரணை ஜனவரியில் இருந்து ஒவ்வொரு நாளும்


பாதுகாப்புச் செயலாளராக இருந்த வேளை யில் ஈடுபட்டதாகக் கூறப்படும் பல்வேறு குற்றச் சாட்டுகள் தொடர்பிலும் விசாரணைகள் நடத்தப் படாத நிலையில், மெதமுலனையிலுள்ள, டி.ஏ. ராஜபக்ஷ ஞாபகார்த்த அருங்காட்சியக நிர்மா ணத்தின் போது ரூபா 33.9 மில்லியன் அரசாங்க நிதி முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளதாக சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இந்த வாரம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. (பக். 02)

## கமரைத் தீவிரவாதியாக்கும் முயற்சி: அவுஸ்திரேலியரின் சதி

ஐஎஸ் அமைப்புடன் தொடர்புடைய தாகக் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட கமர் நிஸாம்தீனை தீவிர வாதியாகச் சித்திரிப்பதில் அவுஸ்திரேலிய கிரிக்கட் வீரர் உஸ்மான் கவாஜாவின் சகோதரர் ஈடுபட்டுள்ளார் என்ற குற்றச் சாட்டில் அவுஸ்திரேலியப் பொலிசார் அவரைக் கைதுசெய்துள்ளனர். (பக். 14)



## பிட்சும் இலங்கையைத் தரமிறக்கியது




நீண்ட கால அந்நியச் செலா வணி விநியோகத் தரப்படுத்த லில் (IDR) இலங்கையை B+ தரத்திலிருந்து B தரத்துக்கு பிட்ச் (Fitch) தரப்படுத்தல் தரமிறக்கி யுள்ளது. மூடியின் தரமிறக்கலுக்கு அடுத்ததாக இலங்கை யைத் தரமிறக்கிய இரண்டாவது நிலையம் இதுவாகும். கடனைத் திருப்பிச் செலுத்துவதில் காணப்படும் அபாய நேர்வின் (Risk) அதிகரிப்பும், தீர்வின்றித் தொடரும் (பக். 15)

## சதொசவில் புலமை மோசடி

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் (சதொச) பதவி தாங்குநர்களில் சிலர் பொய்யான கல்விச் சான்றிதழ்களுடன் பதவி களைப் பெற்றிருப்பதாகத் தற்பொ ழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் மட்டு மன்றி வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களதும் கல்விச் சான்றிதழ்களைப் போலியாகச் சமர்ப்பித்து இவர்களால் பதவிகள் பெறப்பட்டுள்ளன. வரையறுக்கப்பட்ட லங்கா சதொசவின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு இது தொடர் பில் குறித்த பல்கலைக்கழகங்களை (பக். 15)

## அரசியல் பிரிவின் மௌனம் ஏன்?



இலங்கை நாடு முன்னெப்போதுமில்லாத அளவு அரசியல் ரீதியாகக் குழம்பிப் போயுள்ள நிலையில் பிரஜைகள் அனைவரும் தத்தமது சமூகத்திடம் இருந்து தெளிவுகளையும் வழிகாட்டல் களையும் எதிர்பார்த்து வருகின்றன. சில வேளைகளில் சிவில் சமூகச் செயற்பாடுகளில் ஈடுபட்டு மக்கள் எழுச்சியைத் தூண்டும் வகையிலும் மக்களுக்கு வழிகாட்டல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. (பக். 15)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# துருக்கி தூதரகமும் முஸ்லிம் மீடியா போரமும் இணைந்து நடத்தும்

## கட்டுரைப் போட்டி - 2018

கொழும்பிலுள்ள துருக்கி தூதரகம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்துடன் இணைந்து ஊடகவியலாளர்கள் மற்றும் எதிர்கலாத்தில் ஊடகவியலாளர்களாக வர எதிர்பார்ப்பவர்களின் சர்வதேச உறவுகள் தொடர்பான அறிவை விருத்தி செய்யும் நோக்கத்தின் ஓர் அங்கமாக கட்டுரைப் போட்டி ஒன்றை நடாத்தத் தீர்மானித்துள்ளது.

ஊடகவியலாளர்களாகப் பணிபுரிபவர்கள் மற்றும் ஊடகவியல் கல்வியைத் தொடரும் மாணவர்கள் இந்தக் கட்டுரைப் போட்டியில் கலந்துகொள்ள முடியும்.

''பிராந்திய சக்தியாக உலகிலும் பிராந்தியத்திலும்; துருக்கியும் அதன் வகிபாகமும்'' (Turkey and her role in the region and the world as a regional power) எனும் தலைப்பில் இந்தக் கட்டுரை அமைய வேண்டும். கட்டுரைகள் ஆங்கிலத்தில் மாத்திரம் எழுதப்பட வேண்டும் என்பதுடன் 750 மற்றும் 1000 சொற்களுக்குள் அமைய வேண்டும்.

ஊடகவியலாளராயின் தான் ஊடகவியலாளர் என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்களையும் ஊடக கற்கைகளை மேற்கொள்ளும் மாணவர்களாயின் அதனை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களையும் தங்களால் எழுதப்பட்ட கட்டுரைகளுடன் இணைத்து 2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்துக்கு தபால் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

அனுப்பவேண்டிய தபால் முகவரி: இல. 41/2, விஜித்த வீதி, நதிமால, தெஹிவளை.

அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் : muslimmediaforum@gmail.com (மின்னஞ்சல் மூலமாக அனுப்புவார்கள் மின்னஞ்ஜலில் ‹Subject› பகுதியில் «Essay Competition & 2018›› என டைப் செய்து உங்கள் பெயருடன் அனுப்ப வேண்டும்)

வெற்றியாளர்களுக்கு துருக்கி தூதரகம் பின்வரும் பரிசில்களை வழங்கவுள்ளது.

- முதல் பரிசு : மடிக்கணினி மற்றும் கமெரா
- 2ம் பரிசு : மடிக்கணினி
- 3ம் பரிசு : கமெரா




சமூக வலைத்தளங்களில் அலசப்படுபவை

## கோபம் வருமா? வராதா?



பொலன்னறுவையில் விவசாயம் பார்த்துக் கொண்டு தினமும் பராக்கிரம சமுத்திரத்தில் நீராடி விட்டு மனைவி ஜயந்த்தி கையால் சமைத்து வாழையிலையில் பரிமாறப்பட்ட சிவப்பு அரிசிச் சோறும் தெப்பலி மீனும் சாப்பிட்டுக் கொண்டு, பகுதிநேர வேலையாக கிராம சேவகர் தொழிலைப் பார்த்துக் கொண்டிருந்த பிரப்பிலேயே மிகவும் கோபக்காரரான கமராலவை கொழும்புக்குக்கு அழைத்து வந்து ஜனாதிபதி ஆனத்தில் அமர வைத்து சுற்றிவர ரோயல் காலேஜ் நண்பர்கள் சகிதம் புஸ்புஸ்ஸுன்னு ஒன்னுமே பிரியாத இங்கலீஷ்ல பேசினால் கோபம் வருமா? வராதா?

-ஸஹ்ரான் கரீம்

## குரு பிரதீபா பிரபா விருது - 2018



கல்வி அமைச்சினால் வருடா வருடம் நாட்டில் உள்ள சிறந்த ஆசிரியர்களைத் தெரிவுசெய்து கௌரவிக்கும் 'குரு பிரதீபா பிரபா -2018' விருது அதிபர் ஜனாப் எஸ்.ஐ. பைசல் இப்றாஹீமிற்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வு உலக ஆசிரியர் தினமன்று கொழும்பு BMICH மண்டபத்தில் கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்டது.

இவர் அக்கரைப்பற்றுக் கல்வி வலயத்தின் அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலையான கமு/மக்/இசங்கணிச்சீமை அல் கமர் வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றுகிறார். மேலும் இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் விவசாய அபிவிருத்தி அதிகார சபை (பொத்துவில் தொகுதி விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உத்தியோகத்தர்) ஆகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர் அக்கரைப்பற்று அந்-நூர் சமூக சேவை நிறுவனத்திலும் கடமையாற்றி வருகின்றார். இவர் கல்வி முதுமானி பட்டதாரி என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கோட்டாவுக்கு...

(01 ஆம் பக்கத் தொடர்)

லேண்ட் ரிக்லமேஷன் அன்ட் டெவலப்மன்ட் கோபரேஷனுக்கு (LRDC)ச் சொந்தமான நிதியை தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பிலேயே பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் கோதாபய ராஜபக்ஷவுக்கும் மேலும் அறுவருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு சம்பத் அபேகோன், சம்பத் விஜயரத்ன, சம்பா ஜானகி ராஜரத்ன ஆகிய மூவர் கொண்ட நீதிபதிகளின் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் ஜனவரி 22 ஆம் திகதிக்கு ஒத்திப் போடப்பட்டுள்ளதோடு, அன்றிலிருந்து ஒவ்வொரு நாளும் இந்த வழக்கு விசாரணை நடைபெறும் எனவும் விஷேட மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

## 2019 இல் இலங்கைக் கல்வி?



அடுத்த வருட இலவச புதிய பாடத் திட்ட பாடநூல்கள் சீருடை கல்விக்கான நிதி ஒதுக்கீடு எல்லாமே அரசியலால் கிடப்பில் வீசப்பட்டுள்ளன.

- பிஸ்தாமி அஹமட்

# எவரஸ்ட்டில் கால்பதித்த முதல் இலங்கை முஸ்லிம்!

# இன்ஸமாம்

• அனஸ் அப்பாஸ்

நேபாள நாட்டின் சாகர்மா பகுதியில் உள்ள இமய மலை, உலகில் மிகவும் உயரமான மலை என்பதுடன், கடல் மட்டத்தில் இருந்து 29,029 அடி உயரமானது. இம்மலையிலுள்ள எவரஸ்ட் சிகரத்தின் உச்சிக்கு முதலாவது இலங்கையராக ஜெயந்தி குருஉதும்பல எனும் மலையேறும் பெண் 2016 ஆம் ஆண்டு ஏறி சாதனை படைத்திருந்தார். நான்கு முகாம்களில் பயிற்சிகளை மேற்கொண்டு, நான்கு கட்டங்களாக இச்சாதனையை இவர் நிலைநாட்டியிருந்தார். இதே ஆண்டில் இவருடன் பயணித்து ஒட்சிசன் கசிவு ஏற்பட்டதில் சாதனையை நிலைநாட்ட முடியாது போன யொஹான் பீரிஸ் கடுமையாக முயன்று இவ்வாண்டு (2018 இல்) எவரஸ்ட் உச்சத்தை அடைந்து சாதனை புரிந்தார்.



எவரஸ்ட் மலை சிகரத்தைத் தொட முயற்சி செய்து தோல்வியுற்றவர்கள் பலர் இருக்கிறார்கள். இந்த முயற்சியின் போது வலு விழந்து பின்வாங்கியவர்கள் பலர், விடா முயற்சியுடன் முன்னேறி உயிரை இழந்தவர்கள் பலர். மேலும், 200 இற்கும் மேற்பட்ட பிணங்களை தன்னுள் அடக்கி வைத்திருக்கிறது எவரஸ்ட் சிகரம். இப்போது இந்த பிணங்கள் எல்லாம் உச்சியை நோக்கி மேலே ஏறி செல்வோருக்கும் ஒரு வழித்தடமாக மாறி இருக்கின்றன.

இலங்கையின் வடமேல் மாகாணத்தின் பன்னல- எலபடகம முஸ்லிம் பிரதேசத்தைச் சேர்ந்த கமால்தீன் முஹம்மத் பாருக் - பாத்திமா ஜெஸ்மியா ஜவ்பர் தம்பதிகளின் அன்புப் புதல்வர் முஹம்மத் இன்ஸமாம் (23) தற்போது இந்த சவாலை எவ்வாறு எதிர் கொண்டார் என்பதையே இவ்வாக்கம் பேசுகின்றது.

க.பொ.த. உயர்தரம் வரை எலபடகம அல்-அமீன் மத்திய கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்த இன்ஸமாம், நீர்கொழும்பு- போருதோட்டை அல்-கமா ஸலப் குர்ஆன் மத்ரஸாவில் 2 வருடங்கள் வதிவிட ஹிப்ழ் கற்கையை மேற்கொண்டவர். 23 வயதேயான இவர் மலேசியா, ஸைபர்ஜாயாவிலுள்ள FTMC கல்லூரியில் கணணி விஞ்ஞான டிப்ளோமா பாடநெறியை கற்று வந்தார். மேலும், இலங்கையில் நவரசரிரி எனும் சமையல் சரக்குப் பொதி செய்யும் தொழில் முயற்சியையும் தனது நண்பர், சகோதரர் உதவியுடன் ஆரம்பித்துள்ளார்.

### எவரஸ்ட்டில் திகில் அனுபவம்

தான் கற்று வரும் FTMC கல்லூரியின் கற்கைநெறிகள் தொடர்பில் பிற நாட்டு மாணவர்களுக்கு அறிமுக கருத்தரங்குகளை நடாத்தச் செல்லும் வாய்ப்பு இவருக்கு கிட்டியது. அதன்படி, இவர் இந்தோனேசியா, தாய்லாந்து, இந்தியா, சிங்கப்பூர் என பல நாடுகளுக்கு பயணம் செய்திருக்கின்றார். இறுதியாக, இவர் சென்ற நாடு நேபாளம். அங்கு நிகழ்ச்சிகளை நடாத்திக்கொண்டிருந்த நிலையிலேயே அங்கிருக்கும் எவரஸ்ட் சிகரத்தை ஏற வேண்டும் என்ற ஆர்வம் இவரைத் தொற்றிக் கொண்டது.

எவரஸ்ட் தொடர்பில் நிறையவே தேடினார். தற்போது உலகம் எதிர்கொண்டிருக்கும் காலநிலை மாற்றம் காரணமாக இந்த சிகரத்தில் ஏற அனுமதிக்கப்படுவதில்லை என்று அறிந்துகொண்டார். இருந்தாலும், இந்த சந்தர்ப்பத்தைத் தவற விட அவரது மனம் இடம் தரவில்லை. வரலாற்றுக் குறிப்புகள் மூலம் அறியப்படும் தகவல் யாதெனில், எவரஸ்ட் மலை சிகரத்தில் ஏறும் நூறு பேரில் நால்வர் இறந்துவிடுகிறார்கள் என்பதாகும். எவரஸ்ட் மலையை ஏற உடல் பலம் மட்டும் போதாது, மன பலமும் தேவை.

இந்த அபாயகரமான சூழ்நிலையில் பல பேர் குழுக்களாக மலையேறும் நிலையில், தான் மட்டும் தனியாக, தற்போது (2018 நவம்பர்) ஏறும் ஒரேயொரு ஆசிய குடிமகன் என்ற திகிலுடன் தனக்குத் தேவையான பொருட்களுடன் நடையை ஆரம்பித்தார் இன்ஸமாம். சிறு வயது முதலே தான் எண்ணியதை அடைவதை சபதமாகக் கொள்ளும் இவர், தொடர்ந்து ஒன்பது நாட்கள் சலிப்பின்றி காடுகள் பலதையும் கடந்து நடந்தார். கொண்டு சென்ற உணவுப் பொருட்களும் வழியிலேயே தீர்ந்துவிட, பாதையில் அகப்பட்ட பறவைகள், விலங்குகளின் முட்டைகளை, அது என்ன வகையானவை என்பது கூட அறியாது உண்ணும் பதத்துக்கு எடுத்து பசி தீர்த்துக் கொண்டார். பனிச் சறுக்கல்களையும், பாதைச் சறுக்கல்களையும் எதிர்கொண்டதுடன், இரவில் உறங்குவதற்கான தற்காலிக கூடாரங்களையும் பல நாட்கள் அமைக்க வேண்டி ஏற்பட்ட அனுபவமும் அவருக்குப் புதிது.

வெப்பநிலை -20 அல்லது -10, தாங்க முடியாத கடும் குளிரிலும் இவரது பயணம் தொடர்ந்தது. Base Camp பகுதியை அடைய முன்னர் ஒரு பகுதியில் திடீரென சூழ்ந்த பனி மூட்டம், பனிச் சறுக்கல்கள் இந்தப் பயணத்தை அன்றே இடைநிறுத்தும் நிலைக்குக் கொண்டு வந்தன. அன்று அவ்விடத்திலேயே உறங்குமாறும், மேலே செல்ல வேண்டாம் எனவும் நேபாள அரசு திடீர் அறிவிப்பை மேற்கொண்டது. பல நாட்கள் துஆ அவ்ராதுகளுடன் பயத்துடனேயே உறக்கத்துக்குச் சென்றிருக்கின்றார். அதிகாலையை காணச் செய்யாத திடீர் நெஞ்சு இறுகல்கள் திடீர் குளிர் நிலவரங்களும் இப்பகுதிகளில் ஏற்பட்டிருக்கின்றன.

சூரிய மின்சக்தி மூலமான தொடர்பாடல் வசதி மூலமாக தினமும் வீடியோ தொடர்பாடலும் இவருக்கும் வீட்டுக்கும் இடையில் காணப்பட்டதால், அடுத்த நாள் காலையே அங்கிருந்து இறங்கும்படி வீட்டார் வற்புறுத்தினர். கீழிறங்க ஹெலிகொப்டர் வசதியையும் செலவுகள் பல செய்து வீட்டார் மேற்கொள்ள எத்தனித்தபோதும், அடுத்த நாள் காலை பனி மூட்டம் தணிந்ததால் வீட்டார் அனுமதியுடன் பயணத்தை மேலும் தொடர ஆரம்பித்தார் இன்ஸமாம்.



ஒரு ஆராய்ச்சிக் குறிப்பு, எவரஸ்ட் சிகரம் வருடத்திற்கு நான்கு சென்டிமீட்டர்கள் வரை வளர்கிறது எனக் கண்டறிந்துள்ளது. புவி அடுக்குகள் நகர்ந்து கொண்டிருப்பதால் இதன் உயரம் கூடிக்கொண்டே போகிறது. மூச்சு விடுவதற்கே அவதிப்படும் அந்த உயரங்களில், கருப்பு நிற மலைச் சிலந்திகள் மற்ற இடங்களில் இருந்து காற்றில் பறந்து வரும் சிறு பூச்சிகள் போன்ற உயிரினங்களை உண்டு உயிர் வாழ்கின்றன.

''அவன் எத்தகையவன் என்றால் அவனே பூமியை விரித்து, அதில் உறுதியான மலைகளையும் ஆறுகளையும் உண்டாக்கினான்; இன்னும் அதில் ஒவ்வொரு கனி வர்க்கத்திலிருந்தும் இரண்டு இரண்டாக ஜோடிகளை உண்டாக்கினான்; அவனே இரவைப் பகலால் மூடுகிறான் - நிச்சயமாக இவற்றில் சிந்திக்கும் மக்களுக்குப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன'' (அல்குர்ஆன்)

விண்ணோடு உரசி விளையாடும் பிரமிக்க வைக்கும் 8848 மீட்டர் உயரத்தில் உலகிலேயே மிக உயரமான எவரஸ்ட் உச்சிக்கு முன்னர் உள்ள Base Camp பகுதியில் 6700 மீட்டர்கள் வரை சென்ற இவரது பயணம் திருப்தியுடன் நிறைவு கண்டது. அதற்கு மேல் பயணிப்பதானால், அதற்கே உரிய பிரத்தியேக ஆடை, பூட் சப்பாத்துக்கள் (Boots), ஒக்சிஜன் சிலிண்டர்கள் தேவைப்படும். அதற்கான வசதிகள் இவருக்கு தற்போது இல்லாத நிலையிலும், இந்த திடீர் பயணமே ஒரு வெற்றிதான் என்று இன்ஸமாமின் சாச்சா (தந்தையின் தம்பி) உணர்ச்சி பொங்கக் குறிப்பிடுகின்றார். இருந்தாலும், Base Camp ஐ இள வயதில் அடைந்த முதல் இலங்கை வீரர் என்ற பெருமை இவரைச் சாரும்.

ஒருவர் எவரஸ்ட் மலை சிகரத்தை ஏறி தொட்டு திரும்ப வேண்டும் என்றால் மொத்தம் 65,000 அமெரிக்க டாலர்கள் செலவாகும் என கணக்கிடப்படுகிறது. இலங்கையில் வெல்டிங் தொழில் செய்யும் தனது தந்தையின் உந்துதலால் இக்கட்டான நிலையில் மலேசியா சென்று கற்று வந்த இன்ஸமாம், அடுத்து கனடா அல்கோமா பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை (Degree) மேற்கொள்ளச் செல்ல இருக்கும் நிலையில், எவரஸ்ட் உச்சியைத் தொடத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்யவும் முடியவில்லை. அடுத்த தனது நேபாள பயணத்தில், எவரஸ்ட் மலை உச்சியைத் தொட்ட முதல் இலங்கை முஸ்லிம் என்ற சாதனையை நிலைநாட்ட உறுதி கொண்டிருக்கின்றார் இன்ஸமாம்.

''புகழனைத்தும் இறைவனுக்கே, அல்ஹம்துலில்லாஹ்! எந்தவொரு நல்ல நகர்வுக்கும் தட்டிக்கொடுத்து அனுமதிக்கும் பெற்றோர்க்கும், ஆலோசனை நல்கும் குடும்பத்தார்க்கும், கைகொடுக்கும் நண்பர்களுக்கும் நன்றி'' கூறுகின்றார்.

7-8 நாட்கள் மேலும் நடந்து மலையடிவாரத்தை வந்தடைந்திருக்கும் இன்ஸமாமின் இலங்கை வருகைக்கான கோலாகல ஏற்பாடுகளுடன் எலபடகம கிராமமே ஆவலுடன் காத்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பாடுகளின் தேசம்

• பியாஸ் முஹம்மத்

இலங்கையின் அரசியல் பரப்பு இந்த வாரம் முக்கியத்துவம் வாய்ந்தது. ஐந்து வாரங்களுக்கு மேலாக நீடித்த இலங்கையின் அரசியல் கலவரம் இந்நேரம் முடிவுக்கு வந்திருக்க முடியும். இருந்த போதிலும் குமுறி ஓய்ந்து போன எரிமலையின் சாம்பல்கள் பல பீனிக்ஸ்களை உருவாக்கியிருப்பதையும் அவதானிக்க முடியும்.

அதில் முக்கியமானது தான் இலங்கையின் அரசியல் அமைப்பு முழுமைப்படுத்தப்படாத ஒன்றாக தற்பொழுது உணரப்பட்டிருப்பது. யாப்பில் கொண்டுவரப்பட்ட திருத்தங்களும் இன்னும் பல படிகளைத் தாண்ட வேண்டிய அளவில் -குறிப்பாக 19 ஆவது திருத்தம்- இருப்பது அவதானிக்கப்பட்டது.

இலங்கையில் இலங்கை நாட்டை நேசிக்கின்ற தலைமைகளின் வெற்றிடத்தையும் இந்த அரசியல் கலவரம் எடுத்துக்காட்டியது. வெறும் அதிகாரப் போட்டி தான் நாட்டுத் தலைவர்களிடம் இருப்பதே ஒழிய யாருமே நாட்டை முன்னேற்றுவதற்கான முன்னெடுப்பொன்றை இதுவரை செய்திருக்கவில்லை என்ற உண்மையை அரசியல் கலவர காலப்பிரிவில் மக்கள் உணர்ந்து கொண்டார்கள். இத்தனைக்கும் மேலாக இலங்கை தனது சுயாதீனத்தில் இல்லை என்பதும் எங்கோ இருந்து ஆட்டுவிக்கப்படுகிறது என்பதும் கிராம மட்டங்களிலும் பேசப்படும் அளவுக்குத் துலாம்பரமாகியது.

இந்தக் கலவரத்தின் போது வெளிவந்த முக்கிய விடயம், நல்லாட்சி அரசாங்கத்தின் பிரதமர் பற்றியது. நாட்டை முன்னேற்றுகின்ற தலைவராக அவர் இல்லை என்பதற்கப்பால் வெளிநாடுகளுக்கு நாட்டைத் தாரை வார்க்கும் ஒருவராகவும் இலங்கையின் சுயாதீனத்தை மேற்கு நாடுகளுக்கு அடகு வைப்பவராகவும் இந்தக் கலவரங்களின் போது அவர் அடையாளம் காட்டப்பட்டார். இதற்கு ஏற்றாற் போல மேற்கு சார்பு நாடுகளும் நிறுவனங்களும் தலைவர்களும் இலங்கையின் அரசியல் விவகாரத்தில் அக்கறை செலுத்தி தலையிட்டு வந்தமையும் அவதானிக்க முடியுமான ஒன்றாக இருந்தது.

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு அனைவரும் குரல் கொடுக்க வேண்டியது அவசியம் என்றாலும், மக்களின் ஜனநாயக உரிமையான மாகாண சபைத் தேர்தல்களை ரணில் விக்ரமசிங்க அரசாங்கம் நடத்தாமல் இழுத்தடித்து வருவதையிட்டு எதுவும் பேசாமல் இருந்தவர்கள் ரணில் விக்ரமசிங்கவுடைய பதவிக்கு ஆபத்து என்றபொழுது மட்டும் துடித்தெழுவது ஒருவகையில் இந்தக் கருதுகோள்களை மெய்ப்படுத்துவதாகவே அமைகிறது எனப் பலரும் சுட்டிக் காட்டுகின்றனர்.



மனித உரிமைகள் உட்பட சர்வதேச உடன்படிக்கைகள் தொடர்பில் சர்வதேசத்துக்கு -குறிப்பாக ஐரோப்பிய யூனியனுக்கு வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறினால் இலங்கைக்கு ஜீஎஸ்பி ப்ளஸ் சலுகை நழுவிப் போய் விடும் என ஐரோப்பிய யூனியனின் தூதுவர் துங்க் லாய் மார்கே எச்சரிக்கும் தொனியில் ரொய்ட்டர் செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தலைவர்கள் அரசியலமைப்புச் சட்டத்தின் மாண்புகளைப் பாதுகாப்பதுடன் பாராளுமன்றத்தின் ஜனநாயகத் தன்மையையும் உறுதிப்படுத்தும் விதத்தில் செயற்பட வேண்டும். அத்தோடு அரசியல் தலைவர்களின் செயற்பாடுகளில் வெளிப்படைத் தன்மையும் நியாயமும் காணப்பட வேண்டும் என்பதுடன், மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் செயற்பட வேண்டும் என ஐநாவின் ராஜ தந்திரி லக்தர் பிரஹிமி தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் யுத்தத்தால் இலங்கை பெருமளவு பாதிக்கப்பட்டிருந்ததுடன் மனித உரிமை மீறல்களும் இடம் பெற்றுள்ளன. இவ்வாறானதொரு நிலையில் நாட்டின் ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்புக் கோட்பாடுகளின் அடிப்படையில் செயற்படுவதுடன் மக்களின் விருப்பத்தின்படி ஜனாதிபதி சிறிசேன செயற்பட வேண்டும் என த எல்டர்ஸ் அமைப்பின் செயற்பாட்டாளராக இயங்கி வரும் நோர்வேயின் முன்னாள் பிரதமர் க்ரோ ஹார்லெம் ப்ரன்ட்லன்ட் தெரிவித்திருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் சபை அதன் ஆசியப் பிராந்திய அரசியல் விவகாரங்களுக்கான பணிப்பாளர் மேரி யமஷிட்டாவை இலங்கை விவகாரங்களை உன்னிப்பாக அவதானித்து உடனுக்குடன் கையாள்வதற்காக நியூயோர்க்கில் இருந்து கடந்த வாரம் கொழும்புக்கு அனுப்பியுள்ளது. ரணில் விக்ரமசிங்க பதவியில் இருந்து இறக்கப்பட்டதும் அவர் கொழும்பிலுள்ள மேற்கின் தூதுவர்களையும் ராஜதந்திரிகளையுமே முதலில் அணுகினார். இப்படி இலங்கைக்கு அடிபட்டால் மேற்குக்கு வலிக்கும் அளவுக்கு மாங்காய்த் தீவு மாறிப் போயிருக்கிறது.

இதனை முன்வைத்தே ஒக்டோபர் 26 உரையிலும். நவம்பர் 05 இன் ஜனமஹிமய உரையிலும் ஜனாதிபதி கருத்து வெளியிட்டிருந்தார். ரணிலுடன் தம்மால் வேலை செய்ய முடியாது எனத் தெரிவித்த அவர், வெளிநாட்டு நிகழ்ச்சி நிரலுக்கு எமக்கு வேலை செய்ய முடியாது எனவும் ஜனமஹிமய உரையில் தெரிவித்திருந்தார். இந்தியாவை என்னிடமிருந்து தூரமாக்குவதற்கு ரணில் தவறான பிரச்சாரங்களை மேற்கொண்டார். அமைச்சரவை ரகசியங்களைக் கூட வெளிப்படுத்தினார் என ஜனாதிபதி அந்த உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இது உண்மையில் பாரதூரமாகக் கருதப்பட வேண்டிய விடயமாகும். நாட்டின் முக்கிய பதவியில் இருப்பவர்கள் வெளிநாடுகளின் விசுவாசத்துக்காகச் செயற்படுவதை நாட்டை விரும்பும் எந்தப் பொதுமகனும் ஏற்றுக் கொள்ள மாட்டான். சிலர் நாட்டுப் பற்றைக் காட்டியே நாட்டைக் கொள்ளையடிப்பது மக்களின் இந்த உணர்வைப் பயன்படுத்தித்தான். அப்படியிருக்கும் போது நாட்டுக்குள்ளே இருந்து கொண்டு நாட்டுக்குத் துரோகம் இழைப்பவர்களையும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் தொடர்பிலும் மக்கள் தீர்மானம் எடுப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

உண்மையில் இதுபோன்ற விவகாரங்கள் நடக்க முடியாது என்று உத்தரவாதப் படுத்துவதற்கும் இல்லை. 1983 இல் அமெரிக்க எழுத்தாளர் ஸீமர் ஹர்ஷ் (Seymour Hersh) எழுதிய த பிரைஸ் ஒப் பவர்; கிஸிங்கர் இன் த நிக்ஸன் வைட் ஹவுஸ் என்ற நூலில் இந்தியாவில் நடந்த இது போன்றதொரு சம்பவத்தை விளக்குகிறார். பிரதமர் மொரார்ஜி தேசாயும் துணைப் பிரதமர்களான ஜக்வான் ராம் மற்றும் வை.பி.சவான் ஆகியோரும் அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவான CIA இன் சம்பளம் பெறுபவர்கள் என அவர் வெளியிட்டிருக்கிறார். ஜனாதிபதி ஜோன்ஸன் மற்றும் நிக்ஸனுடைய காலப் பகுதியில் உள்நாட்டு அரச ரகசியங்களை இதற்குப் பதிலாக அமெரிக்காவுக்கு அவர்கள் வழங்கினார்கள் என ஹர்ஷ் குறிப்பிடுகிறார். இந்தத் தகவல்களை 06 மூலாதாரங்களில் இருந்து பெற்றதாக ஹர்ஷ் உறுதிப்படுத்துகிறார். மொரார்ஜி தேசாய் இந்தியாவில் மகாத்மா காந்தி அளவில் மதிக்கப்படுபவர். இதனால் இந்தக் குற்றச்சாட்டை இந்திய அரசியல் வட்டாரங்களும் ஊடகங்களும் மறுத்த போதிலும் ஹர்ஷ் இதனை மறுக்கவில்லை.

இலங்கையிலும் யாரையும் மிஸ்டர் கிளீன் என்று உத்தரவாதப்படுத்துவதற்கில்லை. 1980 களில் யுத்த இரகசியங்களை வழங்குவதற்காக ரோ இலங்கை இராணுவத்தின் பிரிகேடியர் ஒருவரை அமர்த்தி இருந்ததாக ரொஹான் குணரத்ன தனது இந்தியன் இன்டர்வென்ஷன் இன் ஸ்ரீ லங்கா என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்காவிலிருந்தும் இஸ்ரேலிலிருந்தும் இலங்கைக்கு வழங்கப்பட்ட இராணுவ உதவிகள் பற்றிய விபரம், கீனி மீனி சேவை (Keenee Meenee) இலங்கையின் யுத்தத்துக்கு வழங்கிய பங்களிப்பு, பாகிஸ்தான் மற்றும் சீனாவுடன் இலங்கை மேற்கொண்ட உறவுகள், வெளிநாட்டு யுத்தக் கப்பல்களுக்கு இலங்கைத் துறைமுகங்களில் வழங்கப்பட்ட வசதிகள் பற்றிய தகவல்களையெல்லாம் அந்த பிரிகேடியர் இந்தியாவிடம் பணம் பெற்றுக் கொண்டு வழங்கியதாக அவர் குறிப்பிடுகிறார். இந்த வகையிலேயே ஜனாதிபதியின் கூற்றும் நோக்கப்படுகிறது.

இலங்கையின் அமைச்சரவை இரகசியங்களை இந்தியாவுக்கு வழங்கியமை தொடர்பில் அவர் ஆளடையாளங்களை வெளியிட்டிருக்கிறார். அதேபோல நல்லாட்சி அமைச்சரவையில் இந்திய உளவுப் பிரிவான ரோவுக்கு தகவல் வழங்கக் கூடிய 04 பேர் இருப்பதாக கடந்த மாதம் (ஒக்.20 இல்) அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்திருந்தார்.

இது போன்ற தேசத் துரோகிகளிடம் நாட்டை ஆட்சி செய்யக் கொடுப்பது குரங்கைப் பிடித்து முதலையின் கையில் கொடுத்தது போலத்' தான் அமையும். இவ்வாறானவர்களை தலைவர்களாக நியமிப்பதில் மக்கள் ஒருபோதும் உடன்பட மாட்டார்கள். இதையும் தாண்டி கட்சிகள் இவ்வாறானவர்களை மக்கள் முன் நிற்க வைத்தால் மக்கள் தலைவர்களை மட்டுமல்ல, கட்சியைக் கூடத் தூக்கி எறிவதற்குத் தயங்க மாட்டார்கள். ஜனாதிபதி பிரேமதாசவினுடைய ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்தின் முன்னாள் பிரதமரான டேவிட் கிளாட்சனின் பேரரான தூதுவர் ஒருவர் இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிட முயற்சித்த போது அவரை அங்கீகரிக்க முடியாத நபராகக் குறிப்பிட்டு ஜனாதிபதி பிரேமதாச அவரை நாட்டு விட்டே வெளியேற்றினார்.

உள்நாட்டு விவகாரங்களில் மூக்கை நுழைப்பதற்கு வெளியாருக்கு அவகாசம் வழங்குவதை விட அவர்களிடமிருந்து நாட்டைப் பாதுகாப்பதில் அவர் துணிச்சலுடன் செயலாற்றினார். இவ்வாறானவர்களைத் தலைவர்களாகக் கொண்ட கட்சிகளும் தலைவர்களும் தான் இன்று நாட்டுக்குத் தேவைப்படுகிறது.

# அரசியல் நெருக்கடியில் கண்ணை மூடும் முஸ்லிம் பூனைகள்

• லத்தீப் பாரூக்

2018 அக்டோபர் 26 வெள்ளிக்கிழமை அன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் இருந்து திடீரென நீக்கிவிட்டு மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்து இந்த நாட்டை அதிர்ச்சிக்குள்ளாக்கியதிலிருந்து இலங்கை மிக மோசமான அரசியல் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி உள்ளது என்பது நாம் எல்லோரும் அறிந்த ஒன்றே. இதில் மிகவும் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் ரணில் விக்ரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சி தான் மைத்திரிபால சிறிவேன கனவிலும் கூட எண்ணியிருக்காத ஜனாதிபதி பதவிக்கு அவரை உயர்த்தி உச்சத்துக்கு கொண்டு சென்றது.

பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கு ஆளான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நீதிக்கு முன்நிறுத்தப்படுவார் என்று இந்த நாட்டு மக்களுக்கு வாக்களித்த மைத்திரிபால சிறிசேன அவரை பிரதமர் பதவியில் அமர்த்தி நாட்டுக்குள் ஒரு அரசியல் குண்டை வீசினார். அதைத் தொடர்ந்து மகிந்த ராஜபக்ஷவுடன் குற்றம் சாட்டப்பட்ட பட்டியலில் இருந்த இன்னும் பலரை அமைச்சர்களாக நியமித்து சிறிசேன மகிந்தவின் கரங்களை பலப்படுத்தி அழகு பார்த்தார்.

சுருக்கமாகச் சொல்லப் போனால் மைத்திரி தன்னைத் தெரிவு செய்த மக்களுக்கு அவர்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்குப் பதிலாக மக்களுக்கு துரோகம் இழைத்தார். யாரை சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிப்பேன் என்று அவர் நாட்டு மக்களுக்கு உறுதி அளித்தாரோ அவரை அரியாசனத்தில் அமர்த்தி அழகு பார்த்தார்.

இதற்கு எதிராக மக்களிடம் இருந்து பொது அரங்குகளில் கண்டனக் கணைகள் வரத் தொடங்கின. ஜனநாயகம் நாட்டில் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி மக்கள் கண்டணக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பல்வேறு விதங்களில் தமது எதிர்ப்பை வெளியிட்டனர். இதைக் கண்டித்த தமிழ் அரசியல் தலைவர்கள் துரிதமாகச் செயற்பட்டனர்.



சமூகநலனைப் பாதுகாக்க அவர்கள் நட வடிக்கை எடுத்தனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் ஜனாதிபதி மற்றும் அவரால் நியமிக்கப்பட்ட புதிய பிரதமர் ஜேவிபி தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்தார்.

முஸ்லிம் அமைச்சர்களும் மக்கள் பிரதிநிதிகளும் உம்றாவுக்கு விரைந்ததைப் போல் தமிழ் அரசியல் தலைவர்கள் மதுரை மீனாட்சி கோயிலுக்கோ அல்லது திருப்பதிக்கோ அல்லது சபரிமலைக்கோ தரிசனத்துக்காகச் செல்லவில்லை. அவர்கள் உள்நாட்டில் இருந்து காய்நகர்த்தல்களை அவதானித்தனர். துரிதமாக மாறி வரும் அரசியல் சூழ்நிலைகளுக்கு அவர்கள் முகம்கொடுத்தனர்.

நாடு முழுவதும் சிதறி வாழும் இந்த நாட்டின் முஸ்லிம்களுக்கு அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்ய ஒரு தேசிய அரசியல் கட்சி இல்லை. தேசிய [illegible] தலைவரும் இல்லை. அவர்களிடம் பெரும்பாலும் பிராந்திய அரசியல் வாதிகள்தான் உள்ளனர். அவர்கள் சமூகப் பிரச்சினைகளைப் பற்றி அலட்டிக் கொள்ளாதவர்கள். ஆனால் பேரம் பேசலுக்குப் புகழ்பெற்றவர்கள். கொழுந்து விட்டெரியும் அரசியல் பிரச்சினைகளைக் கவனிக்காமல் அமைச்சுப் பதவிகளை அனுபவிப்பவர்கள். முஸ்லிம் அரசியல் தலைமைகளின் இந்தப் பலவீனத்தை சிங்களத் தலைமைகள் கடந்த காலங்களில் நன்கு உணர்ந்து வைத்துள்ளன. கடந்த சில தசாப்தங்களாக இந்த முஸ்லிம் தலைமைகளை அவர்கள் தமது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப பயன்படுத்தி வந்தனர்.

ரணில் விக்ரமசிங்க பதவி நீக்கம் செய்யப்பட்ட நிலையில் முஸ்லிம் சமூகம் பொதுவாக அமைதியாக இருந்தது. முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு என்ன செய்வது என்று [illegible] வதற்கு மகிந்த தரப்பு பெருமளவு பணத்தை வழங்கத் தயாராக இருந்த நிலையில் எந்தப் பக்கம் தாவுவது என்று அவர்கள் தடுமாறினர். கட்சி மாறுவதா இல்லையா என்று அவர்கள் நிலை தடுமாறி நின்றனர்.

இவற்றின் நடுவே மகிந்த தரப்புக்கு சில முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தாவப் போவதாக இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக வதந்திகளும் பரவலாகப் பரவத் தொடங்கின. அவ்வாறான ஒரு நிலைமையைத் தவிர்ப்பதற்குத் தான் அவர்கள் கூட்டமாக மக்கா நோக்கிச் சென்றார்கள் என்றும் ஒரு கதை பரவியது. பெரும்பாலும் அது சரியான முடிவை எடுப்பதற்காக இறைவனின் வழிகாட்டலை வேண்டி நிறைவேற்றப்பட்ட அரசியல் உம்றாவாக இருக்க வேண்டும்.

அரசியல் நிலைமை துரிதமாக மாற்றம் காணும் நிலையில் ஜனநாயகம் மீளக் கட்டமைக்கப்படுவதை உறுதிசெய்வதற்கான போராட்டத்தில் அவர்களின் பங்களிப்பு இல்லை என்ற நிலைமையை ஏற்படுத்தியது. எவ்வாறேனும் அவர்கள் சரியான நேரத்தில் நாடு திரும்பினர். பாராளுமன்றக் கலைப்புக்கு எதிரான ஏனைய தரப்பின் நீதிமன்றப் போராட்டத்தோடு அவர்களும் இணைந்து கொண்டனர்.

இந்தப் பிரச்சினையின் ஆரம்பம் முதலே கத்தோலிக்க மற்றும் அங்கிலிக்கன் பிரிவு கிறிஸ்தவர்கள் ரணில் விக்ரமசிங்க பதவி நீக்கம் செய்யப்பட்டதையும் மகிந்த பிரதமராக நியமிக்கப்பட்டதையும் உடனடியாகக் கண்டித்தனர். இவை அரசியல் யாப்புக்கு முரணானவை என்று அவர்கள் கூறினர்.

ஆனால் இந்த நாட்டில் அரசியல் மயப்படுத்தப்பட்ட மற்றும் வர்த்தக மயப்படுத்தப்பட்ட முஸ்லிம்களின் சமய நிறுவனமான அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவிடம் இருந்து அவ்வாறான எந்த அறிக்கைகளும் வெளிவரவில்லை. அரசியல் யாப்பு இந்த நாட்டில் நிலை நிறுத்தப்பட வேண்டும் என்றோ அல்லது வேறு எந்த வகையிலோ அவர்கள் எந்தக் கருத்தையும் முன்வைக்கவில்லை.

ஆனால் சர்ச்சைக்குரிய மகிந்த ராஜபக்ஷ உலமா சபையின் தலைமையகத்துக்குச் சென்று அவர்களோடு பேச்சுவார்த்தைகளை நடத்தினார். உலமா சபை பொருளாளர் தலைமையிலான குழு அவரை வரவேற்று பேச்சுக்களில் ஈடுபட்டது. ஆனால் இந்தச் சந்திப்பின் போது உலமாக்கள் மகிந்த ராஜபக்ஷவால் அவரது ஆட்சிக் காலத்தில் தமது சமூகத்துக்கு இழைக்கப்பட்ட அநியாயங்கள் பற்றி அவருக்கு நினைவூட்டும் வகையில் ஒரு வார்த்தை கூட உதிர்க்கவில்லை. அதே போல் அவரது எதிர்கால ஆட்சியில் முஸ்லிம்கள் பாதுகாப்பாக வாழ முடியுமா என்ற கேள்வியையும் அவர்கள் எழுப்பவில்லை.

ஆனால் இவ்வாறான ஒரு கோரிக்கை இந்தத் தருணத்தில் மிகவும் முக்கியமானது. காரணம் மகிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின் ஏனைய அமைச்சர்கள் நியமனம் செய்யப்பட முன்பே அண்மையில் திகன பிரதேசத்தில் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளுக்குக் காரணமாக இருந்த மகாசொன் பலகாயவின் அமித் வீரசிங்கவும் இன்னும் ஒன்பது பேரும் 2018 அக்டோபர் 29 இல் விடுதலை செய்யப்பட்டனர்.

அமித்தை அவரது சகாக்கள் தோளில் சுமந்து வரவேற்றனர். இன்னொரு பிரிவினர் திகன நகருக்கு விஜயம் செய்து பட்டாசுகளைக் கொழுத்தி முஸ்லிம்களைக் கொல்லுவோம் என்று (பக்.14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

EDITORIAL

49, Sri Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## பாராளுமன்றமும் பாடசாலையும்

குற்றங்களுக்குத் தண்டனை வழங்காவிட்டால் பாராளு மன்றமாயிருந்தால் என்ன பாடசாலையாக இருந்தால் என்ன, எங்குமே ஒழுங்குப் பிசகு தவிர்க்க முடியாதது என்பதை சமகால இலங்கை நிகழ்வுகள் எடுத்துக் காட்டி வருகின்றன. பாராளுமன்றத்தில் குழப்பம் விளைவித்த நாசகாரர்களுக்கு இதுவரை எதுவிதத் தண்டனையும் விதிக்கப்படவில்லை. பாதுகாப்பு உத்தியோகத்தர்களைத் தாக்கியமை, கடமையைச் செய்வதற்கு தடைகளை ஏற்படுத்தியமை, பொதுச் சொத்துக் களுக்குச் சேதம் விளைவித்தமை என பல குற்றச் செயல்கள் நவம்பர் 14 பாராளு மன்றத்தில் நடந்தேறியிருக்கின்றன. இந்தக் குற்றச் செயல்களை இலங்கையர் மட்டுமன்றி இலங்கை அரசாங்கம் பயப்படுகின்ற சர்வதேசச் சமூகமும் பார்த்துக் கொண்டுதானிருந்தது. இதுவரை இவர்களுக்கு எதிராக எந்த நடடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இது நடந்து இரண்டு வாரங்களுக்குள் இரண்டு பாடசாலை களில் மாணவர் ஒழுக்காற்று விடயங்கள் தொடர்பில் நாடு பேசியது. பேருவளையில் நடந்த உயிர்ச்சேதச் சம்பவத்தில் மாணவர் தலைவருக்குக் கட்டுப்படாமல் முரண்பட்ட இரண்டு மாணவர்களின் நடவடிக்கைகளே மாணவர் தலைவரின் உயிரிழப்புக்குக் காரணமாகியுள்ளது. பாடசாலைகளில் மாணவர்களின் நெறிபிறழ்ந்த செயற்பாடுகளையும் அடா வடித்தனங்களையும் புறம்போக்குகளையும் கட்டுப்படுத்து வதற்கும் கண்டிப்பதற்கும் பாடசாலை நிர்வாகங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. குற்றம் செய்கின்ற அல்லது நெறிதவறி நடந்து கொள்கின்ற மாணவர்களைக் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு பாடசாலை நிர்வாகங் களின் கைகள் கட்டிப் போடப்பட்டுள்ளன. அவர்களை அடித்தால் அது உடல்ரீதியான வதை எனவும், அவர்களைத் திட்டினால் அது உளம் சார்ந்த வதை எனவும் கூறி மாணவர் களை நெறிப்படுத்துவதற்கான வாய்ப்பே இல்லாமல் செய்யப் படுகிறது. மனித உரிமை மீறல்களாக இவை மாணவர் களுக்கு கற்பிக்கப்பட்டு தம்மைத் திருத்துகின்ற செயற்பாடு களுக்கு எதிராக மாணவர்கள் தூண்டப்படுகின்றனர்.

மாத்தறை பாடசாலை மாணவனின் நடத்தை இதன் பிரதி பலிப்பாகவே அமைந்திருந்தது. பாடசாலையில் இந்த மாணவ னுக்கு எதிராக எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை களுக்கு எதிராக இம்மாணவன் மனித உரிமை வழக்குத் தொடர்ந்து பாடசாலை நிர்வாகத்தை குற்றவாளியாக்குவதில் வெற்றி கண்டிருக்கின்றான். இவ்வாறான விடயங்களில் இருந்து ஒதுங்கிக் கொள்வது நலம் என பாடசாலை நிர்வாகங்கள் கருதுவதனால் மாணவர்களில் நெறிமுறை களைப் பயிற்றுவிப்பது தற்பொழுது பலவீன மடைந்து வருகிறது. இந்த நிலையில் உள்ள பாடசாலை மாணவனே சக மாணவனை கத்தியால் குத்திக் கொன்றிருக்கின்றான்.

இன்று பாராளுமன்றத்தில் பாராளுமன்றத்தை மதிக்கத் தெரியாமல் நடந்து கொள்கின்ற மக்கள் பிரதிநிதிகளும் இந்தக் கல்வி முறையால் வளர்க்கப்பட்டவர்கள் தான். இந்தக் கல்வி முறையால் உருவாக்கப்பட்ட கல்வித் தகைமை உள்ளவர்கள் பாராளுமன்றத்துக்கு வர வேண்டும் என்பதை விட கல்வித் தரத்துடன் பண்பாடுமுள்ளவர்கள் பாராளுமன்றத்துக்கு அனுப்பப்பட வேண்டும் என்ற புதியதொரு நிலைப்பாட்டுக்கு நாடு வர வேண்டியிருக்கிறது என்பதற்கான முன்னறிவிப் பாகத் தான் இந்தப் பாடசாலை நிகழ்வுகள் அமைந்திருக் கின்றன. கலரியில் இருந்து பாராளுமன்ற நிகழ்வுகளைப் பார்க்கின்ற மாணவர்களும் இந்த நிலைக்கு ஆளாகின்றார்கள் என்பதை விட பாடசாலையின் உருவாக்கமே பாராளுமன்ற நடவடிக்கைகள் என்று சொல்லுவது தான் இந்த நிகழ்வு களைப் பார்க்கும்போது பொருத்தமானதாகத் தெரிகின்றது.

குற்றம் செய்தவர் யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். குற்றச் செயல்களை சிறிதாக இருக்கும் பொழுதே திருத்திக் கொள்வதற்கான ஏற்பாடுகள் வரையப்பட வேண்டும். பட்டமும் பண்பாடும் பள்ளிப் பருவத்தில் வளர்க்கப்பட்டால் தான் அது வெளிவாழ்க்கையில் வெளிச்சமாகும். இலங்கையின் கல்வி முறை இப்படித் தான் தொடருமென்றால் எதிர்காலச் சந்ததிகளும் இப்படித்தான் வளர்வார்கள் என்றிருந்தால் பாராளுமன்றத்தைச் சிறைச்சாலை களுக்கே மாற்றி விடுவது தான் பொருத்தமாக அமையும்.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல. : 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011-5353635
பெக்ஸ் : 011-5335500
ஈமெயில் : srpckwood@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# ஜனாதிபதியின் சர்ச்சைக்குரிய செயற்பாடுகள் கேள்விக்குட்படுத்தப்பட வேண்டும்!

• பேராசிரியர் சாவித்ரி குணசேகர

அதிகார சமநிலை என்னும் விடயத்தை அரசியலமைப்பில் குறிப்பிட்டுள்ளதன் படி நோக்கினால், ஜனாதிபதி தலைமை வகிக்கும் ஏதேனும் அரசாங்கம் உடைந்து போனதொரு சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி, தான் விரும்பிய அரசாங்கமொன்றையும் பிரதமர் ஒருவரையும் நியமிக்காமல் இவ்விடயத்திற்கு தீர்வு காண்ப தற்காக வேண்டி திரும்பவும் பாராளுமன் றத்தை நாடும் வழிமுறையைக் கையாள வேண்டும்.

1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 43 (3) மற்றும் 47 (அ) பிரிவுகளின் பிரகாரம், பிரதமரை நியமித்தல் மற்றும் பதவி நீக்குதல் என்கின்ற விடயம் ஜனாதிபதியின் விருப்பத்தின் பிரகாரம் மேற்கொள்ளக்கூடிய விடயமாகக் காணப்பட் டது. இவ்விடயம் 19 ஆவது திருத்தத்தின் மூலம் நீக்கப்பட்டுள்ளது. இம்மாற்றம் குறித்து கருத் துத் தெரிவித்து வரும் பெரும்பாலானவர்கள் பிரதமரை பதவி நீக்குவதற்கு ஜனாதிபதிக் குள்ள அதிகாரம் தொடர்பில் கலந்துரையாடி யுள்ளனர்.

டது. மறுபக்கத்தில் இது தனியொரு மக்கள் ஆணையின் கீழ் புதியதொரு ஜனாதிபதி நிய மிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பமொன்றாகும். புதிய ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் இணைந்து செயலாற்றுவதற்கு பாராளுமன்றத்தில் அன்று ஒத்துழைப்பு வழங்கப்பட்டதால் புதிய பிரதமர் 'பாராளுமன்றத்தில் நம்பிக்கையை வென்று கொள்ள முடியுமான' ஒருவராகக் காணப்பட் டார்.

இப்படியின்றேல், அல்லது அன்று காணப் பட்ட அரசியல் யதார்த்தத்தோடு புதிய பிரத மரின் (ரணில் விக்ரமசிங்கவின்) நியமனம் பொருந்தவில்லையெனில், அப்புதிய பிரதம ருக்கு எதிராக உடன் நம்பிக்கையில்லாப் பிரே ரணையை கொண்டு வந்திருக்க வேண்டும். எனவே அன்று காணப்பட்ட அத்தகைய நிலையை இன்று தனது அதிகாரத்தை பாராளு மன்றத்திற்குள் காண்பிக்க இயலாமல் போயுள்ள அரசாங்கத்தினால் நாட்டை ஆட்சிசெய்ய முடிந் திருப்பதுடன் ஒப்பிடவும் முடியாது.

19ஆம் திருத்தத்திற்குள் தேசிய அரசாங்கக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதா வது பாராளுமன்றத்தில் கூடுதலான உறுப்பி னர்கள் உள்ள கட்சியுடன் பாராளுமன்றத்தி லுள்ள ஏனைய கட்சிகள் ஒன்றிணைந்து உரு வாக்கிக்கொள்ளும் அரசாங்கம் என்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (46 (5) பிரிவு). அரசி யலமைப்பின் 46 (1) (அ) பிரிவின்படி அமைச் சரவை 30 பேர் கொண்டதாக மட்டுப்படுத்தப் பட வேண்டும். எனினும் மேற்குறிப்பிட்ட தேசிய அரசாங்கம் உருவாக்கப்படும் சந்தர்ப் பத்தில் 30 எனக் குறிப்பிடப்பட்டுள்ள அமைச் சரவையின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் பாராளு மன்றத்திற்கு உள்ளது. (46 (4) பிரிவு) இதன் பிரகாரம், இயங்கு நிலையில் காணப்பட்ட கூட்டரசாங்கம் உடைந்து போன பின்பு அதன் காரணமாக அமைச்சரவையும் பிரதமர் பதவி யும் இயல்பாகவே இல்லாமல் போகும் என்ப தாக அப்பந்தியில் குறிப்பிடப்படவில்லை.

பிரதமரை நீக்குவதற்கு ஜனாதிபதிக்கு காணப்படுகின்ற அதிகார வரையறைகள் மற் றும் அமைச்சர்களின் எண்ணிக்கை தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள வரையறைகளும் ஒன்றாகச் சேர்த்து வாசிக்கப்பட வேண்டும். அதில் ஜனாதி பதி பாராளுமன்றத்திற்குச் செல்லுதல், யாருக்கு அரசாங்கத்தை அமைக்க முடியும், அந்த அர சாங்கம் எப்படிப்பட்ட அரசாங்கமாக அமைய வேண்டும், அது தேசிய கூட்டரசாங்கமாக அமைய வேண்டுமா? அல்லது சிறுபான்மை அரசாங்கமாக அமைய வேண்டுமா என்பது தொடர்பில் பாராளுமன்றத்திலேயே வினவப் பட வேண்டும் எனக் குறிப்பிடப்படுகிறது.

அவ்வாறின்றி, வெறுமனே தனது விருப்பத் தின் பிரகாரம், தனக்கு ஆதரவு வழங்கும் கட்சி அல்லது பிறிதொரு கட்சியிலிருந்து பிரதமரை தெரிவுசெய்யும் அதிகாரம் தற்போதைய அரசி யலமைப்பின் படி ஜனாதிபதிக்கு வழங்கப்பட வில்லை. அதாவது பிரதமர் ஒருவரை நியமிப்ப தென்பது ஜனாதிபதி தனக்கு நினைத்தவாறு பெற்றுக்கொள்ளக்கூடிய பரிசோ வெகுமதி யோ அல்ல. அதனை அவ்வாறு பெற்றுக் கொள்வது அரசியலமைப்பின் 4ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் இறைமையை பிரதிபலிக்கும் வகையில் உள்ள பிரதிநிதித்துவ ஜனநாயகக் கொள்கையை மீறும் செயலாக அமையும்.

ஒக்டோபர் 26ஆம் திகதி இடம்பெற்ற சம்ப வத்தினைத் தொடர்ந்து பதவி கவிழ்க்கப்பட்ட தாக குறிப்பிடப்படும் அரசாங்கம் பாராளுமன் றைக் கூட்டுமாறு கூறுவதே ஒழிய இவ்விட யத்தை உடனடியாக நீதிமன்றுக்கு ஏன் கொண்டு செல்லவில்லை என்றும் நீதிமன்றில் அதனை ஏன் சவாலுக்கு உட்படுத்தவில்லை என்றும் சிலர் கேள்வி எழுப்புகின்றனர். அரசியலமைப் பிலுள்ள ஏதேனும் விடயம் தொடர்பாக பொருள்கோடலொன்று அவசியம் என ஜனாதி பதிக்கு புலப்படும் பட்சத்தில், அப்பிரச்சினை யை ஆராய்ந்து பார்ப்பதற்கு அதனை நீதி மன்றத்திற்கு வழங்க முடியும். இதற்கு முன்பு கூட தனது பதவிக்காலம் குறித்த நிலைப் பாட்டைப் பெற்றுக்கொள்ள ஜனாதிபதி சிறி சேன இவ்வழிமுறையை கையாண்டுள்ளார்.

அதே போன்று கூட்டரசாங்கம் உடைந்து போன பிறகும் தான் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து உயர்நீதிமன்றத்திடம் அவர் கருத்து வினவியிருக்க வேண்டும். எனி னும் அவர் அப்படிச் செய்யவில்லை. தொடர் ந்து அவர் பாராளுமன்றைக் கூட்ட நட வடிக்கை எடுப்பதில் பின்வாங்கியமை, அதன் பின்னர் பாராளுமன்றைக் கலைப்பதற்கு அவர் மேற்கொண்ட தீர்மானங்கள் என்பன இறுதி யில் அடிப்படை உரிமை மீறப்பட்டமை தொடர்பில் உயர்நீதிமன்றத்தை நாடுவதற்கு வழிகோலியது. நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இன்னும் அதிக காலம் செல்லும்.

மேற்குறிப்பிட்ட அடிப்படை உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பிலான விசாரணை நடவடிக்கைகள் டிசம்பர் மாத ஆரம்பத்திலும் இடம்பெறவுள்ளது. இதன் மூலம் இந்நட வடிக்கைக்கு காலம் எடுக்கும் என்பது விள ங்குகிறது. அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்க ளின் பிரகாரம் ஜனாதிபதி பாரா ளுமன்றத்தை நாடியிருப்பின் அரசாட்சி தொடர்பிலான தற் போதைய நெருக்கடி, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு செல்லா மல், நாட்டு நலன் கருத்திற் கொள்ளப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் தீர்க்கப்பட்டிருக்கும்.



தற்பொழுது உயர்நீதிமன் றத்தில் முன்வைக்கப்பட்டிருக் கும் விடயம் தொடர்பில் வழங் கப்பட்டுள்ள இடைக்கால தடையுத்தரவின் தாக்கங்கள் குறித்தும் மாறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. தடை என்ப தற்குள் ஒரு கருத்து உட்பொதிந்துள்ளது. உயர் நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத் துக்கொள்ளப்பட்டுள்ள அதாவது ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைப்பதற்கு மேற்கொண்ட செயற்பாடுகள் பற்றிய விடயம் இடைநிறுத்தப்பட வேண்டும் என்பதே அதன் பொருளாகும். ஜனாதிபதியின் உத்தரவின் மூலம் எதிர்பார்க்கப்பட்டது போன்று பாராளு மன்றம் கலைந்து செல்லவில்லை என்பதே அதன் உண்மையான அர்த்தமாகும். இதனா லேயே நவம்பர் 14ஆம் திகதி சபாநாயகரி னால் பாராளுமன்றத்தைக் கூட்ட முடிந்தது.

அன்றைய நாள் என்பது ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தின் கூட்டத் தொடர் முடிவுக் குக் கொண்டுவரப்பட்ட காலம் முடியும் தின மாகும். இதன்படி, சபாநாயகரினால் தான் பாராளுமன்றம் கூட்டப்பட்டது என்கின்ற கருத்து போலியானது. உண்மையில் 14ஆம் திகதி பாராளுமன்றம் கூட்டப்படும் என ஜனா திபதி ஏலவே வெளியிட்ட வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தன்னை இப்பதவியில் நியமித்த மக்கள் ஆணைக்கு ஜனாதிபதி மதிப்பளிக்கக் கடமைப்பட்டுள்ளார். அத்தோடு, தனது பங் காளியுடன் உருவாக்கிய அரசாங்கத்திற்கான மக்கள் அங்கீகாரத்திற்கும் அவர் மதிப்பளித் திருக்க வேண்டும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை நிராகரித்து ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட மக்கள் ஆணை யானது பொறுப்புச் சொல்ல வேண்டிய அரசா ளுகைக்குக் கிடைத்த மக்கள் வரமாகும்.

தன்னோடு கூட்டுச் சேர்ந்த கட்சியின் தலை வருடன் அல்லது அக்கட்சியுடன் கொண்ட மனக்கசப்பு காரணமாக ஆட்சியை தொடர்ந் தும் கொண்டு செல்ல முடியாதென ஜனாதி பதி தீர்மானிப்பாராக இருந்தால் அவர் என்ன செய்திருக்க வேண்டுமெனில், தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதி களை உள்ளடக்கிய பாராளுமன்றத்தின் முன் னிலையில் சென்று பெரும்பான்மை கூட்டர சாங்கம் ஒன்றையோ அல்லது பாராளுமன் றத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் பிறிதொரு கட்சியுடன் ஏனைய உறுப்பினர்களினதும் ஒத்து ழைப்பை பெற்று சிறுபான்மை அரசாங்க மொன்றை அமைப்பதற்கு இயலுமையுள்ள நபர் யாரென்பதை வினவியிருக்க வேண்டும்.

பிரதமர் பதவி தொடர்பில் 19ஆம் திருத்தத் தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் கிடப்பில் போடப்பட்டிருப்பதைக் காரண மாகக் கொண்டு பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டிருப்பது சட்டவிரோதமானதும் அதிகாரமற்ற விடயமொன்றாகவும் பாராளு மன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை காலமும் நிலவி வந்த கூட்டு அரசாங் கம் உடைந்து போனதைத் தொடர்ந்து அதற் குப் பகரமாக பாராளுமன்றில் பெரும்பான் மையினரின் நம்பிக்கையை வெல்லும் ஒருவர் பிரதமராகத் தெரிவுசெய்யப்படாமல் புதிய அரசாங்கமொன்றைத் தெரிவுசெய்துகொள்ள ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருப்பது பார தூரமான விடயமாகும்.

இவ்விடயம் தொடர்பில் முன்னைய அரசிய லமைப்பில் 43 (3) பிரிவின் மூலம் விதிக்கப் பட்டிருந்த 'பாராளுமன்றத்தில் அதிக நம் பிக்கை உள்ளதாக நினைக்கின்ற' என்பது 19ஆவது திருத்தத்தில் 42 (4) பிரிவிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் பிரதமரை நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு உள்ள இவ்வதிகாரத்தை பாராளுமன்றத்துடன் இணைந்த வகையிலேயே பொருள்கோடல் செய்யப்பட வேண்டும். அரசியலமைப்பின் 4ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாளு கையின் அமைப்பு குறித்த விதிமுறைகளின் படி நோக்கும்போது பிரதமரை நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு உள்ள அவ்அதிகாரத்தை பாரா ளுமன்றத்துடன் தொடர்புறாமல் ஜனாதிபதி யின் தன்னிச்சையான முடிவின் பிரகாரம் பிரதமரையும் அரசாங்கத்தையும் நியமிப்பதற்கு அமுல்படுத்தக்கூடிய அதிகாரமாக பொருள் கோடல் செய்ய முடியாது. பாராளுமன்றத்தை மீளக்கூட்டுமாறு சபாநாயகர் தொடர்ந்தேர்ச்சி யாக வேண்டுகோள் விடுத்ததன் பின்னணி இதுதான்.

புதிய தரப்புடன் கூட்டுச் சேர்ந்து பெரும் பான்மை பலத்துடன் அரசாங்கமொன்றை அமைத்தல் அல்லது பாராளுமன்றத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும் ஏனைய கட்சிகளின் ஒத் துழைப்பைப் பெற்று சிறுபான்மை அரசொன் றை நிறுவுதல் தொடர்பான விடயங்கள் பாரா ளுமன்றத்திற்கு வெளியால் பரிந்துரை செய் யப்பட வேண்டிய விடயங்களல்ல. பதவியில் இருந்த பிரதமரை நீக்கி விட்டு இச்சந்தர்ப்பத் தில் மஹிந்த ராஜ பக்ஷவை பிரதமராக நிய மித்திருக்கும் விடயத்தை 2015 ஜனாதிபதித் தேர்தலின் பிறகு பிரதமராக ரணில் விக்ரம சிங்கவினை நியமித்த விடயத்தோடு ஒப்பிடு வது பலவீனமான வாதமாகும்.

ரணில் விக்ரமசிங்கவுக்கு பாராளுமன்றத் தில் அன்று சிறுதொகை உறுப்பினர்களே காணப்பட்டனர். அப்படியிருந்தும் 19ஆவது திருத்தம் அமுலில் இருக்காத அன்று பிரதமரை [illegible]

### நம்பிக்கையில்லராப் பிரேரணைக்கு பாராளுமன்றில் வாக்களித்தல்

பாராளுமன்றில் கலகம் விளைவிக்கும் வகையிலும் பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கும் வகையிலும் மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கைகளின் மூலம் புதிய அரசாங் கத்தை அமைப்பதற்கான பெரும்பான்மை அங்கீகாரம் யாருக்கு உள்ளதென்பதை பரீட்சித் துப் பார்க்க முடியாமல் போயிருக்கிறது. மாயாஜாலமாக உள்ள 113 எண்ணிக்கையை சரிக்கட்டிக்கொள்வதற்கு

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகார மோகத்தாலும் சந்தர்ப்பவாதத்தாலும் சிதைந்து போகும் தேசம்

• மாலிக் பத்ரி

## இலங்கை மன்னராட்சியை நோக்கிச் செல்கின்றதா?

பிரான்ஸின் பிரபல அரசியல் தத்துவஞானியும் கட்டுடைப்பு வாதியுமான ழாக் தெரிதா ஒரு முறை சொன்னது போல், ''ஜனநாயகம் வந்து விட்ட ஒன்றல்ல. அது எப்போதும் வர வேண்டிய ஒன்றாகவே உள்ளது.''

இலங்கையில் இன்று நடப்பதென்ன என்ற கேள்வி நாட்டுப் பற்றும் மனச்சாட்சியுமுள்ள ஒவ்வொரு பிரஜையினதும் மனதைக் குடைந்து கொண்டே இருக்கிறது. மனச்சாட்சியற்ற அரசியல் வாதிகளுக்கு இது எந்த உறுத்தலையும் ஏற்படுத்தவில்லை. அதிகார விளையாட்டில் ஊறித் திளைத்தவர்கள், தமது தனிப்பட்ட உல்லாசபுரிகளில் ஒய்யாரமாக இருந்து கொண்டு அறிக்கை விட்டுக் கொண்டிருக்கின்றனர். மைத்ரியோ மஹிந்தவோ ரணிலோ ஏன் அனுரகுமாரவோ கூட இதற்கு விதிவிலக்கில்லை.

பாராளுமன்றத்தில் நடந்த கழைக் கூத்தாடித் தனத்தைத் தொடர்ந்து முற்றிலும் புரிந்துகொள்ள முடியாத அரசியல் குழப்ப நிலை ஒன்றுக்குள் நாடு தள்ளப்பட்டுள்ளது. அரசியல் யாப்பு நிபுணர்களுக்குக் கூட தலைசுற்று ஏற்படும் அளவுக்கு நெருக்கடி எல்லை கடக்கின்றது.

இந்தத் திரிசங்கு நிலையில் நடுத்தர வர்க்கமும் அடித்தட்டு மக்களும் மிகப் பெரிய பொருளாதார சுமைகளையும் ஜீவனோபாயப் போராட்டத்தையும் எதிர்கொண்டுள்ளனர். இதுதான் இந்த அரசியல் நெருக்கடியில் எதிர்பார்க்கப்பட்ட இறுதி விளைவாகும். டொலருக்கெதிரான ரூபாயின் பெறுமதி 180 ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கையில் வறுமை ஒழிப்புத் திட்டத்திற்காக அமெரிக்கா வழங்கவிருந்த பல பில்லியன் டொலர்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. ஜப்பான், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளும் இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒதுக்குவதாக வாக்களித்திருந்த பெருந்தொகை நிதியை ரத்துச் செய்துள்ளன. மேற்கு நாடுகள் பல இலங்கைக்குச் செல்வதையிட்டு தமது பிரஜைகளை எச்சரித்துள்ளதனால் உல்லாசப் பயணிகளின் தொகை வீழ்ச்சியடைந்துள்ளதோடு, அந்நியச் செலாவணியின் அளவும் குறைந்துள்ளது.

புதிய பிரதமர் நியமனத்தின் பின்னர் மத்திய வங்கி பல மில்லியன் ரூபாய்களை அச்சடித்துள்ளதாக ஒரு தகவல். தெளிவான நாணயக் கொள்கை (Fiscal Policy) இல்லாததனால் இலங்கை ரூபாய் மிதக்கும் நிலைக்கு வந்துள்ளது. பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கான சீருடைத் துணி குறித்து எந்தக் கல்வியமைச்சும் இதுவரை எந்தவொரு தீர்மானத்தையும் அறிவிக்கவில்ல. பாடசாலைகளுக்கோ விடுமுறை வழங்கப்பட்டு விட்டது.

தலைநகரிலுள்ள பிரபல்யப் பாடசாலைகள் சில கால்வாசி பாடப் புத்தகங்களை கல்வியமைச்சின் வெளியீட்டுத் திணைக்களத்திற்குச் சென்று பணம் செலுத்தி வாங்குமாறு பெற்றோரைப் பணித்துள்ளன.

நாட்டில் ஓர் அரசாங்கம் உள்ளதா? அமைச்சரவை உள்ளதா? இப்போது பிரதமராக இருப்பது யார்? ஒக்டோபர் 26 இற்குப் பின்னரும் அலரி மாளிகையில் வீற்றிருக்கும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவா? அல்லது விஜயராம வீதியில் தனது வாசஸ்தலத்தில் வசிக்கும் மஹிந்த ராஜபக்ஷவா போன்ற குழப்பமான கேள்விகள் நீடிக்கவே செய்கின்றன.

பாராளுமன்றத்திற்கு ஆளும் அரச தரப்பு வருகை தராத ஒரே நாடு இலங்கை தானா? எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வருவதும் புதிய பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதும் ஜனாதிபதி மாளிகையில் அமர்ந்திருக்கும் மைத்ரிபால அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்று அறிவித்தல் விடுப்பதும், எல்லாவற்றுக்கும் காரணம் சபாநாயகர் கரு ஜயசூரியவே என்று அறிக்கை விடுவதுமாக நாடு அதல பாதாளத்தை நோக்கி இழுத்துச் செல்லப்படுகின்றது.

பாராளுமன்றத்திற்கு வருகை தரும் ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்கள் ஒக்டோபர் 26 இல் நியமிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ போலிப் பிரதமர் (பொறு அகமெதி) எனவும் புதிய அமைச்சரவை சட்டவிரோதமானது எனவும் கூறி வருகின்றனர். நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முகங்கொடுக்கத் திராணியற்ற மஹிந்த தரப்பு பாராளுமன்றத்தைத் தொடர்ந்தும் பகிஷ்கரித்து வருகின்றது. தலையை மண்ணுக்குள் புதைத்துக் கொண்டு தன்னை முற்றாகவே மறைத்துக் கொண்டிருப்பதாகக் கற்பனை செய்யும் தீக் கோழியின் கதை இது.

இதற்கிடையில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை எவ்விலை கொடுத்தாயினும் உறுதி செய்யலாம் என்ற வினோதமான கற்பனையில் மஹிந்தவை பிரதமராக்கிய மைத்ரி, தற்போது பெரும்பான்மை இல்லாத ஒருவரைக் கூட பிரதமராக நியமிக்கும் அதிகாரம் தனக்குள்ளது என்று புதியதொரு குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார்.




''ஐம்பதிலும் ஆசை வரும் என்பது போல் எழுவதிலும் அதிகார மோகம் வரும் என்பதைத்தான் இவர்கள் நிறுவிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் யோக்கியதை உள்ள அரசியல் தலைவர்கள் எவரும் இல்லை என்பதும், சந்தர்ப்பவாதங்களும் சுயநலமுமே இலங்கை எனும் அழகிய பவலத் தீவை பாதாளத்தை நோக்கி நகர்த்தி வருகின்றது''

தனது அத்தனை அரசியல் தவறுகளையும் அரசியலமைப்பின் சரத்துக்கள் மூலம் நியாயப்படுத்தி வரும் சிறிசேனா, இப்படியே ஒன்னுக்குப் பின் ஒன்றாகக் கதையளப்பதற்கு அவரை சூழவிருக்கும் ஆலோசகர்கள்தான் காரரைணம் என்கிறார் ஓர் அரசியல் ஆய்வாளர்.

இலங்கையில் இன்று ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி ஒரு சக்கரம் போல் சூழல்களிறது. ஒரு சங்கி போல் முடிவின்றி நீழ்கிறது. ஏதோ ஒரு இடத்தில் உடைப்பு ஏற்படாவிட்டால் நெருக்கடியை யாராலும் நீக்க முடியாது. ஏதோ ஒரு கண்ணி இங்கு உடைபட வேண்டும். இல்லையென்றால் நாடு முழுமொத்த அரசியல் ஸ்திரமின்மைக்குள் அமிழ்ந்து விடும்

1978 இல் திருவாளர் ஜூனியர் ரிச்சர் ஜயவர்தன எனப்படும் மாபெரும் மூளைசாலியான, அதாவது ஐதேகவின் அப்போதைய தலைவரால் கொண்டு வரப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இன்று அதே ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக திரும்பியுள்ளமைதான் மிகப் பெரும் சோகம்.

பிரபல இடதுசாரியும் பொருளியல் துறை கலாநிதியுமான Dr. என்.எம். பெரேரா, ஒற்றை மனிதனிடம் இத்துணை அதிகாரங்களைக் குவிக்கும் நிறைவேற்று முறை குறித்து ஜே.ஆர். இடம் அப்போதே எச்சரித்திருந்ததார். என்.எம். பெரேராவின் எதிர்வுகூறல் மைத்திரியினால் நிரூபிக்கப்பட்டு விட்டது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா தேர்தல் பிரச்சாரத்தில் இந்த அரசியலமைப்பை ''பஹ்பூத்தா விஸ்தாவ'' என்றுதான் வர்ணித்தார். ஆட்சிக்கு வந்ததும் தமது முதற்பணி இந்த அரசியலமைப்பை மாற்றுவதுதான் என்று முழங்கினார். அவரால் வேட்பாளராக நியமிக்கப்பட்டு ஜனாதிபதியாகிய மஹிந்த இதே வாக்குறுயுடன்தான் அதிகாரக் கட்டிலில் அமர்நச்தாரர். ஆனால், ஜேஆர்.ஐ விடவும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையின் தெவிட்டாத ருசியை சுவைத்துத் திழைத்தவர் அவர்தான்.

இம்முறை ஒரு சாபக் கேடு. நாட்டை ஒற்றை மனிதனிடம் கையளிக்கும் பைத்தியக்காரத்தனம் என்று சமூக நீதிக்கான இயகத்தின் தலைவர் மாதுலுவாவே சோபிதத தேரரர் 2014 இல் சிவில் அணி திரட்டலில் ஈடுபட்டார். அப்போது மஹிந்தவின் ஆட்சி உச்சத்திலிருந்தது. அது சர்வதிகாரம் என்று அனைத்துக் கட்சிகளாலும் வர்ணிக்கப்பட்டது. அதற்குக் காரணம் நிறைவேற்று அதிகார முறைதான் என்று கூறப்பட்டது.

2015 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் இம்முறையை ஒழிப்பதுதான் தேர்தல் பிரச்சாரத்தின் பேசுபொருளாக இருந்தது. புதிய ஜனாதிபதி பதவியேற்று 100 நாட்களுக்குள் நிறைவேற்று அதிகார முறை அழிக்கப்பட்டு விடும் என்று மக்களின் வாக்குகள் தாரைவாராக கப்பட்டன. பொது வேட்பாளர் தேவைப்பட்டபோது மஹிந்தவுடன் இருந்து அப்பம் தின்று கொண்டிருந்த முன்னாள் கிராம சேவை உத்தியோகத்தரும் பின்னாள் சுகாதார அமைச்சருமான மைத்ரி இந்தப் பக்கம் தாவினார். சந்தர்ப்பவாதம் இங்கிருந்தே தொடங்கியது.

2014 நவம்பர் 26 இல் இலங்கை மக்களையே ஒருமுறை அதிர்ச்சியில் உறைய வைத்தார் மைத்ரி. காரணம், பல தசாப்த கால சுதந்திரக் கட்சியுடனான தொப்புள் கொடி உறவை துண்டித்துக் கொண்டு இந்தப் பக்கம் தாவுவார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறுபான்மைக் கட்சிகளின் வாக்குகளோடு சிறிசேன ஜனாதிபதியானார்.

எடுத்தோம் கவிழ்த்தோம் என்று 19 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது. நான்கரை ஆண்டுக்கு முன்பாக பாராளுமன்றம் கலைக்கப்பட மாட்டது என சட்டம் நிறைவேறியது. ஆனால் நிறைவேற்று அதிகாரம் குறித்த வாக்குறுதிகள் காற்றில் பறந்தன. மாதுலுவாவே சோபித தேரரின் கனவு அவரது சடலத்தோடு புதைகுழிக்குப் போனது.

ஆர். பிரேதமதாஸ, சந்திரிக்கா, மஹிந்த, மைத்ரி ஆகிய நான்கு பேரும் நிறைவேற்று அதிகார முறையை ஒழிப்போம் என்ற வாக்குறுதியோடுதான் அதிகாரத்திற்கு வந்தனர். அதிகாரம் கைக்குக் கிடைத்த பின்னர் அவர்களுக்கு ஏற்ட்ட ஞாபக மறதி ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல.

1978 அரசியலமைப்பு இலங்கையை ஒரு ஜனநாயக சோசலிஸக் குடியரசாக தக்கவைப்பதற்கான பொறியா அல்லது மறைமுக மன்னராட்சியை தக்கவைப்பதற்கான பொறியா என்பதே இப்போது நம்மிடையே மீள மீள எழும் கேள்வியாகும்.

ஒக்டோபர் 26 இல் மைத்ரி எடுத்த சடுதியான தீர்மானம் நாட்டில் ஒன்றன் பின் ஒன்றான குழப்பங்களை விளைவித்துக் கொண்டிருக்கிறது. பாராளுமன்றம் இல்லை. அமைச்சரவை இல்லை. தேர்தலும் இல்லை. 2019 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் இல்லை. இப்படி நாடு திரிசங்கு நிலைக்குள் திணறி வருகின்றது.

அரசியல் தவறுகளை நியாயப்படுத்த ஜனாதிபதி அரசியலமைப்பில் புதிய புதிய கண்டுபிடிப்புக்களிலும் ஆய்விலும் ஈடுபட்டுள்ளார். புதிய பிரதமர் கூட உலக நாடுகளின் அரசியல் அமைப்புக்களை ஒப்பீட்டாய்வு செய்யும் பேராசிரியராக மாறியுள்ளார்.

70 வயதை எட்டியுள்ள, 70 வயதைக் கடந்த இம்மூன்று தலைவர்களும் நமது தாய்நாட்டின் அடுதத்த தலைமுறையின் எதிர்காலம் குறித்து எந்த அக்கறையும் இன்றியே செயல்படுகிறார்கள் என்பதை அவர்களின் ஒவ்வொரு நகர்வும் நிரூபித்து வருகின்றன.

ஐம்பதிலும் ஆசை வரும் என்பது போல் எழுவதிலும் அதிகார மோகம் வரும் என்பதைத்தான் இவர்கள் நிறுவிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் யோக்கியதை உள்ள அரசியல் தலைவர்கள் எவரும் இல்லை என்பதும், சந்தர்ப்பவாதங்களும் சுயநலமுமே இலங்கை எனும் அழகிய பவளத் தீவை பாதாளத்தை நோக்கி நகர்த்தி வருகின்றது என்பதும் வெள்ளிடை மலை.

இந்த அரசியல் பாவத்திற்கு பிராயச்சித்தம் தேட வேண்டிய ஜயவர்த்தன உயிரோடு இல்லை. பாராளுமன்றமே மக்களின் இறைமையை பிரபலிப்பதாக ரணிலும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரமே மக்களின் இறைமையைப் பிரதிபலிப்பதாக மஹிந்தவும் மக்கள் நலன் குறித்துப் பேச வெளிக்கிட்டிருப்பதுதான் விநோதமாகும்.

உண்மையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி எனும் தனிநபரை விட மக்களின் 225 பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றமே மக்களின் பிரதிநிதிகள் சபையாகும். அதுவே மக்களின் இறைமையை உண்மையில் பிரதிபலிக்கின்றது.

ஒற்றை மனிதரின் தீர்மானத்தை விட 225 பேரில் பெரும்பான்மையினரின் தீர்மானம் முக்கியமானது. அதுவே ஜனநாயகத்திற்கு அமைவானது. ஜனாதிபதியும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒற்றைப் பிரதிநிதியே. அவர் பாராளுமன்றத்திலுள்ள பெரும்பான்மையினரை புறந்தள்ளிவிட்டு அவர்களின் கருத்துக்களுக்கு எதிரான ரதீர்மானங்களை மேற்கொள்வது எப்படி ஜனநாயகமாக இருக்க முடியும்?

நம்பிக்கையில்லாப் பிரேரணை மூன்று முறை கொண்டு வரப்பட்டும் அதை ஏற்கமுடியாது என்று அறிக்கை விடுவது தெட்டத் தெளிவான ஜனநாயகப் படுகொலையாகும்.

நாடு இன்று எதிர்கொண்டுள்ள அத்தனை அரசியல் நெருக்கடிக்குமான முழுப் பொறுப்பும் ஜனாதிபதிக்கு உள்ளது. அதேபோன்று ஜனாதிபதிக்கு அரசியலமைப்பு வழங்கும் அதிகாரம் ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாகியுள்ளது. இன்றைய இலங்கையின் அரசியல் ஸ்ரமின்மையின் விதைகள் ஜே.ஆர்.ரின் அரசியலமைப்பிலேதான் ஊன்றப்பட்டுள்ளன.

மக்களின் அபிலாஷைகளையும் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றாத இந்த அரசியலமைப்பு குறித்த சோபித தேரரின் கனவு நனவாக வேண்டும். இல்லையெனில், இலங்கைக்கு விடிவு கிடையாது. ஜனநாயகத்திற்கு அர்த்தமும் கிடைக்காது. இலங்கை மோசமான ஒரு வரலாற்றுக் காலகட்டத்தைக் கடந்து செல்கின்றது. நமது அரசியல் வரலாற்றில் என்றென்றைக்குமான சாபமாக இருக்கும் ஜனாதிபதி நிறைவேற்று முறைமையை அறிமுகப்படுத்திய ஜே.ஆர்.ஐ இறுதியில் வரலாறு கேவலமாகப் பழிதீர்த்ததை நாம் அறிவோம். ஜே.ஆர்.இன் மறைவை யாரும் மிகப் பெரிய இழப்பாகப் பார்க்கவில்லை. அதற்குக் காரணம் அவர் மீதிருந்த மக்கள் வெறுப்புதான்.

சந்திரிக்கா வர்ணித்த அந்த 'பஹ்பூத்தா விவதஸ்தாவ'வின் சிற்பி அவர்தான். ஆனால், அதை துஷ்பிரயோகம் செய்யும் வரலாற்றுத் தவறை இன்னொரு தலைவர் இழைத்து விடக் கூடாது என்பதே மக்களின் பணிவான வேண்டுகோளாகும்.

ஜேவிபி மாத்திரமே இன்று நிறைவேற்று அதிகார முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கும் ஒரே கட்சி. அது ஒழிக்கப்பட வேண்டும். ஒழிக்கப்பட்டே ஆக வேண்டும். இல்லையென்றால் ழாக் தெரிதா சொல்வது போல் ஜனநாயகம் வந்து விட்ட ஒன்றல்ல. அது எப்போதும் இலங்கை மக்களுக்கு வரவேண்டிய ஒன்றாகவே இருந்து விடும்.

வாழ்க ஜே.ஆர்.! வாழ்க சிறிசேன! வாழ்க ஜனநாயகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

## மக்களே தீர்ப்புச் சொல்ல வேண்டும்

இலங்கை வரலாற்றில் பதியும் மிக மோசமான நாளே அன்றைய தினம். கட்சி பேதமின்றி தாய் நாட்டை நேசிக்கும் சகலரதும் மனமுடைந்து போன நாளே அன்றைய தினம். சகல இலங்கை வாழ் மக்களையும் அவமானத்திற்கு உட்படுத்திய நாளே அன்றைய தினம். சகல மக்களையும் ஜனநாயகக் கட்டமைப்புக்குள் பிரதிநிதித்துவம் செய்வதற்கு நியமிக்கப்பட்ட ஒரு சில பா.உறுப்பினர்கள் அவர்களது நடத்தைகளின் மூலம் உங்களது வாக்கை இழிவுபடுத்தியுள்ளனர். நாம் இவர்களுக்கு வாக்களித்து பாராளுமன்றம் அனுப்புவது, எங்களது பிரதிநிதிகளாகவும் நாட்டின் அபிவிருத்திக்காகவும், எமது நலன்களுக்காகவும் எமது பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக சேவை புரிவதற்காகவுமாகும்.

எனினும் அவர்களுடைய கீழ்த்தரமான நடத்தைகளின் காரணமாக அவர்களை எமது பிரதிநிதிகள் என அழைப்பதற்கு வெட்கப்பட வேண்டும். இவ்வாறான நடத்தைகளுக்கு இடமளித்து விட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த தலைவர்களும் வெட்கப்பட வேண்டும். கோபங்களுக்கு உள்ளாக்கி ஆவேசத்தைத் தூண்டுகின்ற நிலைமைகளின்போது பொறுமையுடனும் பண்பாட்டுடனும் கௌரவமான நடத்தைகளுடனும் செயற்பட்ட மக்கள் பிரதிநிதிகளை நாம் பாராட்ட வேண்டும்.

மனவேதனையைத் தருகின்ற இவ்வாறான சம்பவங்களை மக்கள் கவலையுடனும் பொறுமையோடும் அவதானித்துக் கொண்டுள்ளனர். எமது நாடு ஆசியாவில் பழமை வாய்ந்ததொரு ஜனநாயக நாடு. முன்மாதிரி மிக்க ஜனநாயக நாட்டில் பொதுமக்கள் தங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்குப் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வது, தீர்மானம் எடுக்கப்பட வேண்டிய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒன்று சேர முடியாததன் காரணத்தினாலாகும்.

எமக்காக வேண்டி தீர்மானங்களை எடுப்பதற்கு நியமிக்கப்பட்ட எம்.பிக்கள் நடந்துகொள்வது இப்படியா? இப்படியான நடத்தைகளின் மூலம் அவர்களைத் தெரிவுசெய்த எம்மையே அவமானத்திற்கு உள்ளாக்குகிறார்கள். சகலரும் மதிக்கின்ற முன்னாள் இராணுவ உத்தியோகத்தரும் சிரேஷ்ட பிரஜையுமான சபாநாயகர் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்கள் மிகவும் இழிவானதாகும். கோபத் தாக்குதல் மற்றும் தேவையற்ற நடவடிக்கைகளுக்கு மத்தியில் அவர் துணிவுடன் மேற்கொண்ட சேவையை நாம் பாராட்ட வேண்டும்.

இதன் மூலம் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் அதிகமாகும். ஐ.நா. சபையின் செயலாளர் நாயகமாகப் பணியாற்றிய டேக் ஹமர்ஷலின் பணிகள் என் நினைவுக்கு வருகிறது. அவர் ஐ.நா.வின் 15ஆவது பொதுக்கூட்டத் தொடரில் உரையாற்றிய விடயங்கள் என் நினைவுக்கு வருகிறது. டேக் ஹமர்ஷலுக்கு முன்பு அக்கூட்டத் தொடரில் பேசிவிட்டுச் சென்ற சோவியத் யூனியனின் ஜனாதிபதி குசேவ், ஹமர்ஷல் பதவி விலக வேண்டும் என தெரிவித்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் டேக் ஹமர்ஷல் ஆற்றிய உரையின் ஒரு பகுதியை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

"ஐக்கிய நாடுகள் சபை தேவைப்படுவது பலம் பொருந்திய நாடுகளின் பாதுகாப்புக்காக வேண்டியல்ல. அது ஏனைய நாடுகளுக்கே அவசியப்படுகிறது. இந்நாடுகளின் நலனுக்காக எனது சேவை அவசியம் என அவை கருதும் வரையில் நான் பதவி துறக்க மாட்டேன். பதவியில் இருப்பது இலேசான விடயமல்ல. பலம் பொருந்திய நாடுகளுக்குத் தலைசாய்ப்பது இலகு. அந்நாடுகளின் அதிகாரங்களுக்கு எதிராக துணிவுடன் செயற்படுவது இலகுவான விடயமல்ல. ஐக்கிய நாடுகள் சபை தமது பாதுகாப்புக்காக வேண்டியுள்ள ஒரே நிறுவனம் என்பதாகக் கருதும் நாடுகள், நான் இன்னும் சேவையில் நீடிக்க வேண்டும் என எதிர்பார்க்கும் எனில் நான் இன்னும் பதவியில் நீடிப்பேன்"

அவரது இக்கருத்திற்கு சபையில் பலத்த கரகோசம் கிடைத்தது. கொங்கோ நெருக்கடியை தீர்ப்பதற்கு அந்நாட்டிற்கு நான்கு முறை பயணித்த பொதுச் செயலாளரே அவர். கொங்கோவிற்கான நான்காவது பயணத்தின் போது டேக் ஹமர்ஷலும் அவரது அதிகாரிகளும் விமான விபத்தில் கொல்லப்பட்டார்கள். 1961இல் அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. இனங்களுக்கு மத்தியில் அமைதியை நிலைநாட்ட அவர் மேற்கொண்ட தியாகங்களுக்காக வேண்டியும், அவர் போராடிய அனைத்து விடயங்களுக்காக வேண்டியும் இப்பரிசு வழங்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

சபாநாயகரின் துணிகரமான செயற்பாடுகளை பார்க்கும் போது எனக்கு ஐ.நா.வின் முன்னாள் செயலாளர் நாயகம் டேக் ஹமர்ஷலே நினைவுக்கு வந்தார். இவ்வாறான கீழ்த்தரமான செயற்பாடுகளை பொதுமக்களால் மாத்திரமே தடுக்க முடியும். இப்படியான நடத்தைகளை வெறுப்புடன் காண்பதாக பொதுமக்களால் மாத்திரமே தெரிவிக்க முடியும். எமது வாக்குகளுக்கும் ஜனநாயகத்திற்கும் மதிப்பளிக்குமாறு பொதுமக்களால் மாத்திரமே அழுத்தம் கொடுக்க முடியும். நாட்டிற்குள் மற்றும் நாட்டிற்கு வெளியால் எம்மை அவமானப்படுத்த வேண்டாம் என பொதுமக்களால் மாத்திரமே கூற முடியும். எமக்காகவும் எமது பிள்ளைகளுக்காகவும் பண்பாடான முறையில் நடந்துகொள்ளுமாறு பொதுமக்களால் மாத்திரமே வேண்டுகோள் விடுக்க முடியும்.

நீங்கள்தான் இந்தப் பொதுமக்கள். கடந்த துன்பியல் தினத்தைப் போன்று இன்னுமொரு தினம் உருவாகாமல் இருப்பதற்கு உங்களால் மாத்திரமே நடவடிக்கை எடுக்க முடியும்.

# சூனியப் பிரதேசமாக மாறும் இலங்கை தேசம்

• பி.எம். முஜீபுர் ரஹ்மான்

அண்மைக் காலமாகத் தொடர்கின்ற பரபரப்பான அரசியல் நெருக்கடிக்கு முடிவேற்படுமா, எத்தகைய முடிவேற்படும் என்பதை அறிய, நாட்டு மக்களும், ஐ.நா உள்ளிட்ட சர்வதேசமும், ஜனநாயகத்தின் மீது பற்றுள்ள பலதரப்பினரும் ஆவலாக இருக்கின்றார்கள்.

உண்மையில் இவ்வளவு பரபரப்பான அரசியல் நெருக்கடிக்கு இலங்கை செல்வதற்கான பிரதான மற்றும் உடனடிக் காரணிகள் எதுவாக இருக்கும்? ஜனாதிபதியைக் கொலை செய்வதற்கான முயற்சியா? கொழும்புத் துறைமுகத்தின் ஒரு பகுதியை இந்தியாவுக்கு வழங்குவதற்கான செயற் திட்டமா?

அப்படியாயின் ஏன் ஒக்டோபர் 26 ஆம் திகதி இம்மாற்றம் ஏற்பட்டது? அதனை ஒரு மாதத்திற்கு முன்னர் மேற்கொண்டிருக்கலாமே? அல்லது நவம்பர் 5 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருந்த வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னர் மேற்கொண்டிருக்கலாமே? அவ்வாறு வரவு செலவுத் திட்டம் சமர்ப்பித்ததன் பின்னர் இவ்வாறான அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருந்தால் மக்கள் இப்போது எதிர்நோக்குகின்ற பொருளாதாரப் பிரச்சினை ஓரளவு குறைந்திருக்குமே. எனவே, இவ்வரசியல் நெருக்கடிக்கும் இலங்கை பொருளாதாரத்திற்கும் எங்கோ ஒரு சம்பந்தம் இருப்பதை உணரக் கூடியதாக இருக்கின்றது.

ஏனெனில், நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கின்றது. 2019 ஆம் ஆண்டில் மாத்திரம் 5800 மில்லியன் அமெரிக்க டொலரை சர்வதேசக் கடனாக செலுத்த வேண்டியுள்ளது. 2019 - 2020 ஆம் ஆண்டுகளில்தான் இலங்கையை நெருக்கும் மிகவும் முக்கியமான ஆண்டுகளாகும். இதனைக் கையாள அரசாங் கம் என்ன திட்டம் வைத்துள்ளது? இவை இந்த வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதா? இவ்வாண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் எங்கே? என பலரும் கேள்வி எழுப்புகின்றனர்.

இந்நிலையில், அரச ஊழியர்களின் குறிப்பாக அரச வைத்தியர்கள் மற்றும் சுகாதார சேவைகள் சார்ந்த ஊழியர்களின் மேலதிக கொடுப்பனவுகள் (ஓவர் டைம்) நிறுத்தப்பட்டிருக்கின்றன. திறைசேரியில் இதற்குரிய நிதியைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதே இதற்குரிய காரணம் என்கின்றனர். மேலதிகக் கொடுப்பனவுகள் வழங்கப்படாததை எதிர்த்து அரச வைத்தியர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

அத்துடன் எக்ஸ்ரே மற்றும் CT ஸ்கேன் உள்ளிட்ட தொழில்நுட்ப பிரிவைச் சேர்ந்த சுகாதாரத்துறை ஊழியர்கள் மட்டுப்படுத்தப்பட்ட வகையிலான பணி புரிவதன் ஊடாகத் தமது எதிர்ப்பைக் காட்டி வருகின்றனர்.

### ரணில் - மஹிந்த = மைத்திரி

நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ரணில், மஹிந்த, மைத்திரி ஆகியோர் என்ன வழிமுறைகளைப் பின்பற்றினார்கள்? அதற்கு அவர்கள் உலக வங்கியை அணுகிய போது, உலக வங்கி என்ன ஆலோசனையை வழங்கியது? உலக வங்கியிடம் மேலும் கடன் கேட்டதற்கு உலக வங்கி என்ன பதிலைக் கூறியது என ஆராய்கின்றபோது, மிகப் பெரிய ஆபத்து எம்மை நோக்கி வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இங்கு, உலக வங்கி கடன் கொடுப்பதற்கு மறுத்துவிட்டது. மறுத்ததோடு நிறுத்திக் கொள்ளாமல், சில ஆலோசனைகளையும் கூறியுள்ளது. அதாவது, தொழிலாளர்களின் EPF மற்றும் ETF சேமிப்புக் கணக்கில் உள்ள சுமார் 2 டிரில்லியன் நிதியை இலங்கை அரசாங்கம் என்ன செய்யப் போகிறது எனக் கேள்வி எழுப்பியுள்ளார்கள். எனவே, அந்நிதியை நாட்டின் கடனைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்துமாறு ஆலோசனை கூறியுள்ளது. அந்நிதியைப் பயன்படுத்த முடியவில்லையாயின், நாட்டிலுள்ள முக்கிய சில வளங்களை பிற நாடுகளுக்கு வழங்குமாறு கூறியுள்ளது.

இவற்றில் எதனைப் பின்பற்றுதல் என ஜனாதிபதி உட்பட முக்கிய பிரமுகர்கள் மந்திர ஆலோசனை நடத்தியுள்ளார்கள். இதற்கு ரணில் விக்ரமசிங்க நாட்டிலுள்ள முக்கிய வளங்கள் மற்றும் முக்கிய தொழிற்சாலைகளை தனியார் மயப்படுத்துவதோடு, பிற நாடுகளுக்கு வழங்குவதற்கு முடிவெடுத்து அதற்காக முயற்சித்துள்ளார். அதேநேரம், மஹிந்த ராஜபக்ஷ EPF மற்றும் ETF சேமிப்புக் கணக்கில் உள்ள சுமார் 2 டிரில்லியன் நிதியை பயன்படுத்தினால் சில தீர்வினைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, இவ்வாறு நாடு சுமார் 5800 மில்லியன் கடன் சுமையில் இருக்கின்றபோது எவ்வாறு நாட்டின் வரவு செலவுத் திட்டத்தை முன்வைப்பது. அது மாத்திரமல்ல இக்கடன் தொகை[illegible]




இப்போது நாட்டின் முக்கிய வருமானங்கள் யாவும் வீழ்ச்சி கண்டுள்ளன. நாடு எண்ணையினால் கிடைக்கின்ற வருமானத்தைக் கொண்டே இயங்குகின்றது. ஏனைய அனைத்துத் துறையிலுமான வருமானங்கள் பாரிய நெருக்கடியை சந்தித்துள்ளன.

வேண்டும் என்பது இன்னுமொரு பிரச்சினை. இந்நிலையிலேயே இவ்வரசியல் நெருக்கடி தோற்றுவிக்கப்பட்டது என சில ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

ஏனெனில், இப்போது நாட்டின் முக்கிய வருமானங்கள் யாவும் வீழ்ச்சி கண்டுள்ளன. நாடு எண்ணையினால் கிடைக்கின்ற வருமானத்தைக் கொண்டே இயங்குகின்றது. ஏனைய அனைத்துத் துறையிலுமான வருமானங்கள் பாரிய நெருக்கடியை சந்தித்துள்ளன.

அதாவது, இலங்கையின் பொருளாதாரத்தில் செல்வாக்குச் செலுத்திய தேயிலை, தெங்கு, இறப்பர் போன்றன சர்வதேச சந்தையில் பாரிய பின்னடைவைக் கண்டுள்ளது. அத்தோடு, ஒரு காலத்தில் சீனி, டயர், கடதாசி, சீமெந்து என்பன இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டது. அவைகளின் உற்பத்தியும் பாரிய அளவில் குறைந்துள்ளது. அத்தோடு அதிகரித்துள்ள சனத்தொகைக்கு ஏற்ப நாட்டில் மேற்கொள்ளப்படுகின்ற உற்பத்திகள் மக்களின் தேவையை பூர்த்தி செய்வதற்குப் போதாமல் இருக்கின்றது. அதேநேரம் அரசாங்கமும் இலங்கை உற்பத்திகளை மேம்படுத்துவதற்குப் பதிலாக வெளிநாட்டு உற்பத்திகளை இறக்குமதி செய்வதன் மூலம் அமைச்சர்கள் மற்றும் அவர்களைச் சூழ உள்ளவர்கள் இலாபம் அடையும் நோக்கமும் இதில் தங்கியுள்ளது.

இந்நிலையில், இலங்கையில் சுமார் 14 இலட்சம் முச்சக்கர வண்டிகளும், 30 இலட்சம் வாகனங்களும் (கார், வேன் வகைகள்), 26 ஆயிரம் தனியார் பஸ்களும், 5 ஆயிரம் அரசாங்க பஸ்களும் இருக்கின்றன. அத்தோடு, 2 இலட்சம் கடல் தொழிலுக்குப் பயன்படுத்தப்படுகின்ற இயந்திரங்கள் இருக்கின்றன. அத்தோடு, மின்சார வசதி இன்றி வறிய நிலையிலுள்ள குடும்பங்கள் வெளிச்சத்திற்காக மண்ணெண்ணையைப் பயன்படுத்துகிறார்கள்.

இவைகளை நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த எவ்வாறு பயன்படுத்தலாம் என நோக்கியதால்தான், சர்வதேச சந்தையிலுள்ள எண்ணையின் விலையை விட சுமார் 70 ரூபா அதிகமாக இங்கு விற்பனை செய்யப்படுகின்றது. அவ் வாறாயின் ஒரு நாளைக்குக் குறைந்தது 200 இலட்சம் லீட்டர் பெற்றோலும் 100 இலட்சம் லீட்டர் டீசலும் குறைந்தது 300 இலட்சம் லீட்டர் மண்ணெண்ணையும் தேவைப்படுகின்றன.

இவைகள் மூலம் நாட்டிற்கு கிடைக்கின்ற வருமானங்களுக்கு என்ன நடக்கின்றது? என்பது குறித்து மக்கள் ஏன் கேள்வி எழுப்புகிறார் [illegible] அதேநேரம் நாடு பாரிய பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ளது. இவ்வருடத்திற்குள் சுமார் 5800 மில்லியன் கடனை செலுத்த வேண்டும் என்கின்றனர்.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடியில் இருக்கின்றபோது, அதிகரிக்கப்பட்டிருந்த எரிபொருளின் விலை திடீரெனக் குறைக்கப்பட்டது. பெட்ரோல் லீற்றர் ஒன்றின் விலையை 10 ரூபாவினாலும், டீசல் லீற்றர் ஒன்றின் விலையை 7 ரூபாவினாலும் குறைத்ததாக புதிய அமைச்சரவையில் நிதி அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார். அத்துடன் பருப்பு மற்றும் கடலை என்பவற்றின் ஒரு கிலோவுக்கான விசேட வர்த்தக வரி 5 ரூபாவினால் குறைக்கப் பட்டிருக்கின்றது. உழுந்து ஒரு கிலோவுக்கான வர்த்தக வரி 25 ரூபாயினாலும் சீனி மீதான வரி 10 ரூபாயினாலும் குறைக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கத்தின் மீது மக்களை ஆர்வம் கொள்ளச் செய்வதுடன், அவர்களுடைய ஆதரவைப் பற்றி இழுப்பதையுமே இந்த உத்தி நோக்கமாகக் கொண்டிருக்கின்றது. அத்துடன் அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணப்பட்டதும் நடத்தப்படவுள்ள தேர்தல்களிலும் மக்களுடைய ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கான அரசியல் தந்திரோபாயமும் இதில் அடங்கியுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

நாட்டில் ஸ்திரமற்ற அரசாங்கம் ஒன்று இல்லாத நிலையில் நாட்டின் பொருளாதாரம் பாரிய அளவில் வீழ்ச்சி கண்டு வருகிறது. நவம்பர் மாதம் என்பது இலங்கையின் சுற்றுலாத்துறை பலமடையும் மாதமாகும். ஆனால், இன்று நாட்டின் சுற்றுலாத்துறை பாரிய வீழ்ச்சி கண்டுள்ளது. அது மட்டுமல்ல நவம்பர் மாதத்தில் பாடசாலை மாணவர்களுக்கான சீருடை வழங்கப்பட வேண்டும். ஆனால், அவையும் இன்னும் வழங்கப்படவில்லை.

மஹிந்த அரசாங்கம் எதிர்க்கட்சியில் இருக்கின்றபோது நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது. எம்மிடம் ஒப்படையுங்கள் ஒரு நாளைக்குள் அதனை தீர்த்து வைப்போம் என்றார்கள். ஆனால் இன்று, ஐக்கிய தேசியக் கட்சி செய்த சிங்கப்பூர் உடன்படிக்கையை நியாயப்படுத்தி முன்னெடுக்க முயற்சிக்கின்றனர்.

அத்தோடு, கடந்த காலத்தில் உருவாக்க இருந்த கசினோ, விபசாரம், போதைப்பொருள் காலாசாரத்தையே மீண்டும் உருவாக்க முயற்சிக்கிறார்கள்.

வெளிநாட்டு முதலீடுகள் எம்மை விட்டு விலகிச் செல்கின்றன. பிணைமுறிகள் கைவிட்டுச் செல்கின்றன. இந்நிலையில் 2020 இல் நாம் செலுத்த வேண்டிய கடன் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், எவ்வாறு அமைச்சர்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் நடைபெறப் போகின்றன. அத்தோடு, கடனுக்கான, அபிவிருத்திக்கான, மக்களுக்கான சேவை நிதிகள் எவ்வாறு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப் போகின்றனர்.

ஒட்டு மொத்தத்தில் இந்த ஆட்சியாளர்களுக்கு நாட்டை கடனிலிருந்து மீட்டெடுத்து, பாதுகாக்கும் நோக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. மாறாக தமது ஆட்சியைத் தக்கவைத்து நாட்டை முடியுமான வழிகளில் பயன்படுத்தலாகும். அதற்கு மக்களும் பூரண ஒத்துழைப்பை வழங்குகிறார்கள்.

ஆகவே, மக்கள் விழிப்படைந்து, மாற்று வழிகளை நோக்கிச் சிந்திப்பதே சிறந்த வழியாகும். இவர்களே தொடர்ந்தும் ஆட்சி பீடங்களிலிருந்தால் நிச்சயமாக நாடு பாரிய ஆபத்தைச் சந்திக்கும். மக்கள் இக்கட்டான இத்தருணத்தில் நியாயமாக சிந்தித்துப் பதிலளிக்கவில்லையாயின் எதிர்காலத்தில் இலங்கை சூனியப் பிரதேசமாகவே காட்சிதரும். மிக அவதானமாக சிந்தித்துச் செயற்படும் காலத்திலேயே நாம் இருக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி



# நாட்டு நடப்புகளை சரியாகக் கணிக்க முடியுமான ஒரு சிவில் சமூகம் வேண்டும்

**உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர்**
- முன்னாள் அமீர், இலங்கை ஜமாஅதே இஸ்லாமி

- **இன்றைய அரசியல் நெருக்கடியை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

இன்றைய அரசியல் நெருக்கடி திடீரென தோன்றியதொரு விடயமல்ல. எப்பொழுதும் ஒரு விடயம் படிப்படியாக விருத்தியடைந்தே ஒரு கட்டத்தை அடைகின்றது. அது பிரச்சினையாக மாறும் நேரம் அப்பிரச்சினை எல்லோருக்கும் விளங்கும். ஆனால் அதன் பின்னணி, அது எங்கிருந்து உருப்பெற்றது, வளர்ந்தது என்ற விடயங்கள் மக்களின் சிந்தனையில் இருக்காது.

இன்றைய அரசியல் நெருக்கடி உடனடியாக தீர்க்கப்பட வேண்டியதொரு நெருக்கடி. அது ஜனாதிபதிக்கும் பதவி நீக்கம் செய்யப்பட்ட பிரதமருக்கும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதமருக்கும் இடையிலான பிரச்சினை என்று பார்த்தாலும் உண்மை அதுவல்ல. அது ஒரு பிரச்சினையின் வளர்ச்சிக் கட்டமாகும். பிரச்சினை எங்கு ஆரம்பிக்கின்றதென்றால் இந்த நாட்டில் கடந்த 3 தசாப்த காலமாக நிலவி வந்த இனப்பிரச்சினையின் தாக்கம் இன்னும் உள்ளது. இன்னொரு வகையில் சுதந்திரத்திற்கு பிறகு இந்த நாட்டை ஆட்சிசெய்த கட்சிகள் மாறி மாறி நாட்டை ஆட்சி செய்தாலும் ஆட்சியாளர்கள் மாறினார்கள், கட்சிகள் மாறின என்கின்ற விடயங்களைத் தவிர இந்த நாடு வளர்ச்சிப் பாதையில் செல்லவில்லை.

சுதந்திரம் கிடைத்த வேளையில் அக்காலப் பகுதியில் சிங்கப்பூர் போன்ற நாடுகள் எம்மைப் போன்று வர வேண்டும் என நினைத்தன. இன்று அந்நாடுகள் எங்கேயோ போயுள்ளன. நாமெங்கோ போய்க் கொண்டிருக்கிறோம். எமது அரசியல் தலைமைகளின் வழிகாட்டலில் நாடு அடைந்துள்ள நிலையே இது. இப்படியே இந்த விடயம் பார்க்கப்பட வேண்டும். எப்பவும் ஒன்று வளர்ச்சிப் பாதையில் செல்கின்றதென்றால் அங்கு திடீரென நெருக்கடிகள் வர முடியாது. வீழ்ச்சிப் பாதையில் போகின்றதொரு நாட்டிலேயே நெருக்கடிகள் இடம்பெற முடியும்.

உலகில் இன்று நாம் எத்தனையோ அமைப்புக்களைப் பார்க்கின்றோம். வீழ்ச்சிக் கட்டத்திலிருந்து ஒரு முன்னெடுப்பை மேற்கொண்டு வளர்ந்து செல்லும் நாடுகள் உள்ளன. அங்கு பிரச்சினைகளை அவர்கள் வெற்றிகரமாக சமாளிக்கிறார்கள். பிரச்சினைகளை வென்று சாதிக்கிறார்கள். உதாரணமாக துருக்கியில் எத்தனையோ பிரச்சினைகள் வந்தன. அது வளர்ந்து கொண்டு போகும் நாடென இன்று உலகில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

பிரச்சினைக்குள் விழுதல் என்பது வளர்தல் என்ற கருத்தைத் தராது. அதாவது படிப்படியாக வீழ்ச்சியடைந்து செல்லும் போது அதல பாதாளத்தில் விழ நேரிடுகிறது. அந்தப் பார்வை இந்த நாட்டிலுள்ள அரசியல்வாதிகளிடமோ மக்களிடமோ இல்லை. எமக்கு நல்லதொரு சந்தர்ப்பம் இந்நாட்டில் கிடைத்தது. முப்பது வருடங்களாக நிலவிய உள்நாட்டு யுத்தம் தவிர்க்கப்பட்டு ஒரு யுத்தமற்ற பூமியாக இலங்கை மாறியது. இதுவொரு நல்ல விடயம். இதற்குப் பங்களிப்பு செய்தவர்கள் வரலாற்றில் இடம்பெற வேண்டியவர்கள்.

ஆனால் யுத்தம் முடிந்தாலும் இனப்பிரச்சினை முடியவில்லை. ஏனெனில் யுத்தத்தை முடிக்கும் திறமை இருந்தும் இனப்பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டை சரியான அமைதி எல்லைக்குக் கொண்டு வந்து சேர்க்க முடியாமல் போயுள்ளது. யுத்தமில்லாமல் போவது ஒரு அமைதிதான். ஆனால் இனங்களுக்கிடையில் காணப்பட்ட பிரச்சினையும் இல்லாமல் போகின்ற போதே சரியான அமைதி வரும். அந்த இடத்தை நோக்கி வழிகாட்டப்படவில்லை. இன்றைய நெருக்கடிக்குள் இனப்பிரச்சினைக்கு ஒரு பெரிய பங்குள்ளது. அதாவது நாடு அழிந்து போகின்றது என ஒரு சாராரும் நாட்டில் எல்லா இனங்களும் சரி சமமாக வாழ வேண்டும் என்று இன்னொரு சாராரும் இந்தப் பிரச்சினைக்குள் இரு தரப்பாக இருப்பதை காண்கின்றோம்.

அது ஒவ்வொருவருடையதும் அரசியல் வாழ்க்கைக்குத் தேவையான விடயமாக மாறியிருக்கிறது. நாடு பிளவுபடக்கூடாது, நாட்டை விற்று விடக்கூடாது என ஒரு தரப்பு கருதுகிறது. இந்த நாட்டில் இனங்களுக்கிடையில் ஒரு சுமுகமான சூழல் உருவாக வேண்டும். உலக அரங்கில் நாட்டிற்கு நல்லதொரு பெயர் வர வேண்டும். வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக்கொள்ள வேண்டும். நன்மதிப்பு பெற்றதொரு ஜனநாயக நாடாக எம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். அதனால் உலகத்திலிருந்து கிடைக்கின்ற நிறைய இலாபங்களை இங்கு கொண்டு வரலாம் என்பது ஒரு பார்வை.

இப்படி இரண்டு கருத்துக்கள் மோதும் விடயமாகவே இதனைப் பார்க்க வேண்டும். வெறுமனே தலைகளை மாற்றியதால் ஒரு நெருக்கடி வந்ததாக வெளித்தோற்றத்தில் இருந்தாலும் இந்த நாட்டைப் பற்றிய தீவிரப் பார்வைகள் இரண்டே இங்கு மோதுகின்றன. அந்த மோதலின் விளைவே இது. இம்மோதல் தொடர்ந்து இருந்து வருகிறது. அதன் வளர்ச்சிக் கட்டமே இது.

எனவே இந்நெருக்கடிக்கு ஒரு செயல் வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது எல்லோரும் உண்மையான நெருக்கடியின் ஆணிவேரை விட்டு விட்டு அதைப் பற்றி பேசிக்கொண்டுள்ளனர். இந்தப் பார்வை சமூகத்திற்கு வர வேண்டும்.

- **இச்சந்தர்ப்பத்தில் பெரும்பாலான முஸ்லிம் கட்சிகள் மற்றும் சமூக அமைப்புக்கள் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும் எனக் கூறி ரணில் தரப்புக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். குறிப்பிட்ட சில அமைப்புக்களே மஹிந்தவுக்கு ஆதரவு நல்கியுள்ளது. இது முஸ்லிம்களுக்கு எவ்வாறான பின்விளைவுகளை ஏற்படுத்தும்?**

அதாவது முஸ்லிம்கள் இங்கு மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக இருக்கவில்லை என்பதை ஒரு இன ரீதியான விடயமாகப் பார்க்காமல் தெளிவானதொரு நிலைப்பாட்டை முன்வைக்க வேண்டியதொரு தேவையுள்ளது. அரசியல்வாதிகள் அப்படித்தான் பேச வேண்டும். இது ரணிலுக்கு ஆதரவளித்து மஹிந்தவுக்கும் ஜனாதிபதிக்கும் நாங்கள் எதிராக உள்ளோம் என்ற நிலைப்பாட்டில் நாம் இவ்விடத்திற்கு வரவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும்.

சுதந்திரத்திலிருந்து இன்று வரையில் இந்நாட்டை பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த ஒருவரே ஆட்சிசெய்கிறார். எனவே ஒவ்வொரு சிறுபான்மை சமூகமும் தனக்குத் தேவையானதை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற முனைப்பில் சாத்வீகமாகச் செல்வதென்பது புறக்கணிக்க முடியாததொரு விடயம். ஆனால் இந்தப் பிரச்சினையில் நாம் அவர்களுடன் நிற்பதா? அல்லது இவர்களுடன் நிற்பதா? என்கின்ற நோக்கில் இதனைப் பார்க்கக் கூடாது. இங்கு ஒரு பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்ற கொள்கையிலேயே செயற்பட வேண்டும்.

இன்று நீதிமன்றத்திலும் பிரச்சினை, பாராளுமன்றிலும் பிரச்சினை அதாவது ஜனநாயக மரபுகள் கருத்திற் கொள்ளப்பட்டு இம்மாற்றம் நடந்ததா இல்லையா என்று பார்க்கப்பட வேண்டும். இது யாப்பனர்த்தம் (Constitutional Crisis) என்றெல்லாம் கூறப்படுகிறது. இந்தப் பிரச்சினைகள் சட்டம், யாப்பு, ஜனநாயகம் போன்றவற்றை மையப்படுத்தியே பேசப்படுகின்றது. எனவே நாம் இத்தகைய விழுமியங்களுக்கு முன்னுரிமையளித்தே இத்தகைய நிலைப்பாட்டிற்கு வந்துள்ளோம். இந்த அடிப்படையிலேயே எமது சமூகத்தை அறிவூட்டும் விடயங்களை மேற்கொள்ள வேண்டும்.

கடந்த காலத்தில் மஹிந்த ஜனாதிபதியாக இருந்த நேரம் நாட்டில் எமக்கு பெரும் அச்சுறுத்தல் இருந்தது. எனவே நாம் அவர் பக்கம் போகக் கூடாது என்கின்ற நிலைப்பாட்டில் முஸ்லிம்கள் இப்பிரச்சினையில் தலையிடக்கூடாது. இது வேறொரு விடயம். இது முக்கியமல்ல. இந்நாட்டில் யாரோ ஆட்சி செய்வார்கள்.

இது ஜனநாயகத்தோடு தொடர்பான பிரச்சினை. எனவே எல்லோரது குரலும் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அமைப்பிலேயே ஒலிக்க வேண்டும். முஸ்லிம்கள் இந்த நிலைப்பாட்டிலேயே இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும். இது தான் எங்களது நிலைப்பாடு என முஸ்லிம்கள் இதை அழுத்திச் சொல்வார்கள் என்றால் அதுவே இந்நாட்டில் முஸ்லிம்களுக்கு இருக்கின்ற கௌரவமாகும்.

தற்போது நாம் நாட்டுக்காகப் பேசுகிறோம். சமூகத்துக்காக அல்ல. இது நாட்டிற்காகப் பேசுகின்ற நேரம். இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எங்களுக்கு எதைச் சாதித்துக்கொள்ள முடியும் என்று நினைக்கக் கூடாது. இதற்கு முன்னர் இடம்பெற்ற பிரச்சினைகளை விட இந்த விடயத்தில் முஸ்லிம் கட்சிகள் நல்லதொரு நிலைப்பாட்டில் இருப்பது வரவேற்கத்தக்கது. நாட்டில் சட்டம், ஒழுங்கு ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். இதுவொரு ஜனநாயக நாடு. இந்நாட்டிற்கு உலகில் தனியான அந்தஸ்துள்ளது. இதைப் பாதுகாக்கும் நபர்கள் யாராக இருந்தாலும் அவர்களோடு இணைந்து பணியாற்ற வேண்டும். இப்படியொரு நிலைப்பாட்டையே முஸ்லிம்கள் எடுக்க வேண்டும்.

- **பெரும்பான்மைக் கட்சிகள் இரண்டிலும் நம்பிக்கை இழந்தவர்கள் மூன்றாவது சக்தியொன்றின் தேவை குறித்து கலந்துரையாடி வருகின்றனர். இது எப்படி அமைய வேண்டுமென்று நீங்கள் கருதுகின்றீர்கள்?**

சுதந்திரத்திற்கு பின்னர் தொட்டு நீண்டகாலமாக உருவாகி வரும் பிரச்சினையின் வளர்ச்சிக் கட்டத்தை வைத்தே மூன்றாவது அரசியல் சக்தியொன்று இந்நாட்டில் உருவாகி வர வேண்டும் என்று சிலர் கதைத்து வருகின்றனர். இவர்கள் அண்மைக்காலமாக இடம்பெறும் பிரச்சினைகளை மாத்திரம் கவனத்திற் கொண்டு மாற்று சக்தி (Alternative Force) தேவை எனக் கூற வரவில்லை. சுதந்திரத்திற்கு பின்னர் இந்நாடு சரியான பாதையில் செல்லவில்லை. மாறி மாறி ஆட்சிக்கு வந்த இரு பிரதான கட்சிகளும் நாட்டிற்கு சரியான தீர்வுகளைத் தரவில்லை. தங்களது அரசியல் நலனுக்காக மாத்திரமே செயற்பட்டுள்ளார்கள் என்பதே மாற்று சக்தி தேவை எனக் குறிப்பிடுபவர்களின் வாதமாக காணப்படுகிறது. இது நல்லதொரு விடயம். இதை எப்படி சாதித்துக் கொள்வார்கள் என்பது மற்றொரு விடயம். அதாவது இதைச் சாதிக்க வேண்டும் என்றால் இன்னுமொரு கட்டத்திற்குச் செல்ல வேண்டும். இந்த கவலையை பிரஸ்தாபிப்பவர்கள் பல குழுக்களாக உள்ளனர்.

அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் கூடி இது தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளனர். இணைந்து பணியாற்ற முடியுமா என்றெல்லாம் சிந்திக்கிறார்கள். இது நல்ல விடயம். ஆனால் இவர்கள் வெற்றிபெறுவார்களா என்பதில் சந்தேகமுள்ளது. ஏனெனில் பிரச்சினைகளின் பின்னணியை விளங்கியவர்களே இப்படி யோசிக்கின்றனர். நாட்டிலுள்ள எல்லோரும் பிரச்சினைகளை மாத்திரமே பார்க்கிறார்கள். அவற்றின் பின்னணியை பார்க்கிறார்கள் இல்லை. பின்னணியை பார்ப்பவர்களுக்கே மூன்றாம் சக்தியின் தேவை உணருகிறது.

பிரச்சினையை பார்ப்பவர்கள் இதில் யார் வெற்றி பெறவேண்டும். யார் தோற்க வேண்டும் என்றே பார்க்கிறார்கள். பிரச்சினையை பார்ப்பவர்கள் பக்கச் சார்பாக உள்ளனர். ஒரு சாராருக்கு ரணில் வெல்ல வேண்டும். இன்னொரு சாராருக்கு மஹிந்த வெல்ல வேண்டும். ஜனாதிபதி தான் தனிப்பட்டு விடுவேனோ என்கின்ற அச்ச நிலைக்கு ஆளாகியுள்ளார். இது இயல்பு. தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற தேவை அவருக்குள்ளது. இப்படி பலரும் அவரவர் தரப்பிலிருந்தே இந்தப் பிரச்சினையை பார்க்கின்றனரே ஒழிய வரலாற்று ரீதியில் அதனை பார்க்கின்றார்கள் இல்லை.

அப்படிப் பார்க்கின்ற ஒரு சிலரால் மாத்திரம் இந்நாட்டை மாற்றி விட இயலாது. அதற்கு அரசியல் பிரக்ஞையுள்ள நாட்டு நடப்புகளை சரியாகக் கணிக்க முடியுமான ஒரு சிவில் சமூகம் வேண்டும். அத்தகைய சமூகம் உருவாகாத வரையில் இவர்களால் எதையும் சாதிக்க முடியாது.

(பக்.14)




அபூ ஷாமில்

# தேசிய மீலாத்?

பல்வேறு கருத்தாடல்களுடன் மீலாத் நிகழ்வுகள் மங்கி வருகின்றன. சிலருக்கு தொடர்ந்து ஒரு மாதமாக நபிகளாரின் பேரில் கிடைத்து வந்த அன்னதானம் முடிந்து விட்டதே என்கின்ற கவலை. அடுத்த தரப்புக்கு ஆக்ரோஷமாகப் பேசி மீலாதின் பெயரில் சமூகத்தில் சலசலப்பை உண்டாக்குவதற்கான வாய்ப்பு இழந்து விட்டதே என்ற கவலை. அடுத்தவர்களில் பலருக்கும் மீலாதுன் நபி வந்துவிட்டுப் போன சுவடும் கூடத் தெரியவில்லை.

மீலாதுன் நபி தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார். பிரதமர்கள் வாழ்த்துரை வெளியிட்டார்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் வாழ்த்துச் செய்திகளை வெளியிட்டிருந்தார்கள். ஏதோ ஓர் அரசியல் வாதியின் பிறந்த தின வாழ்த்துச் செய்திகள் போல அரசியல் பிரமுகர்களே இந்த விடயத்தில் கூடுதல் கரிசனை காட்டியிருந்தார்கள்.

முஸ்லிம் சமூகத்துக்கு நபிகளார் எப்படி அந்நியமாகிப் போனார்கள்? ரஸூலுல்லாஹ்வுடைய வாழ்க்கை வழிமுறை பூரா உலகுக்கும் சென்றடைய வேண்டும் என்று சொல்லுகின்ற ஜம்இய்யதுல் உலமா இதனை எப்படிப் பயன்படுத்திக் கொண்டது? இயக்கங்கள் ஜமாஅத்துக்கள் இதனை எப்படிப் பயன்படுத்திக் கொண்டன? தௌஹீதும் ஸூபிகளும் தமது வழமையான நிகழ்ச்சி நிரலை அரங்கேற்றினார்கள். இது தவிர இலங்கைச் சமூகத்துக்கு நபிகளார் கொண்டு வந்த தூதை முன்வைப்பதற்கு யாரும் இந்தத் தினத்தைப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை.

குறித்த மீலாத் விடுமுறை தினம் தொடர்பில் ஒரு வேலைத் திட்டத்தை வரைந்து செயற்படுத்தக் கூடிய தேசிய அமைப்பு எதுவுமே ஏன் எம்மிடத்தில் இல்லை. டிசம்பர் மாதம் 25 ஆம் திகதி வரக்கூடிய யேசுநாதரின் பிறந்த தினத்தை முன்னிட்டு நவம்பர் மாத ஆரம்பத்திலிருந்தே இலத்திரனியல் ஊடகங்களில் நிகழ்ச்சி முன்னோட்டங்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. இருக்கின்ற ஊடகங்களை முஸ்லிம் சமூகம் எப்படிப் பயன்படுத்திக் கொண்டது? இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபன முஸ்லிம் சேவை தான் இலங்கையில் தேசிய முஸ்லிம் சேவையாகச் செயற்படுகிறது. இவர்களும் கூட இந்த மீலாத் விடுமுறை நாளைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அடுத்த நாளில் மாணவர்கள் பாடசாலைக்கும் ஏனையவர்கள் அலுவல்களுக்கும் சென்று அடுத்தவர்கள் அன்றாட காரியங்களில் மூழ்கிப் போன வேளையில் தான் முஸ்லிம் சேவை மீலாத் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியது. தொலைக் காட்சி சேவையும் இப்படித் தான். விசாரித்துப் பார்த்தால் பிறைக் கணக்குப் படி நபிகளார் பிறந்தது அரசாங்க விடுமுறை தினத்தில் இல்லையாம் என்கிறார்கள்.

நபிகளார் பிறந்த தினம் எது என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இருக்கலாம். அது பிறந்த தினமா அல்லது நபிகளார் மறைந்த தினமா என்பதிலும் கூட சிலரிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். எது எப்படிப் போனாலும் இந்த நாட்டில் நபிகளாரை நினைவுபடுத்துவதற்கெனக் குறித்தொதுக்கப்பட்டுள்ள நாளை நாங்கள் எப்படிப் பயன்படுத்துகிறோம் ?

தேசிய மீலாத் விழா கூட குறித்த தினத்தில் நடைபெறவில்லை. நாட்டில் தேசிய ரீதியாகக் கொண்டாடப்படுகின்ற வெசாக் தினமோ, நத்தாரோ, தீபாவளியோ குறித்த தினத்தைத் தவிர்ந்த வேறு நாட்களில் விழா எடுத்துக் கொண்டாடப்படுவதில்லை. நபிகளாரின் பிறந்த தினம் மட்டும் தான் குறித்த தினத்தில் அன்றி வேறு தினத்தில் கொண்டாடப்படும் தேசிய நிகழ்வாக இந்த நாட்டில் அமைந்திருக்கிறது. தற்போதைய அரசியல் கலவரங்களை இதற்குக் காரணமாகச் சொல்ல முடிந்தாலும், ஏனைய சாதாரண கண்காட்சிகள் கூட குறித்த தினத்தில் நடக்கும் போது ஏன் நமக்கு மட்டும் மம? அரசியல் கலவரத்தில் ஜனாதிபதி மாறவில்லையே. ஆகவே பிரதம அதிதியாக ஏன் மாறாத பதவிநிலையில் உள்ள ஒருவரான ஜனாதிபதியை அழைத்து தேசிய நிகழ்ச்சியை நடத்தியிருக்கக் கூடாது ?

இது ஜனாதிபதிக்கு முஸ்லிம்களின் நிகழ்ச்சிகளில் இருந்து நழுவுவதற்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்பாகவும் அமைய முடியும். முஸ்லிம்களின் எந்தத் தேசிய நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொண்டிருக்கிறார் ? கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் தேசிய மீலாத் விழா நடந்தபோது கூட ஆளில்லாத இடத்தில் ஏன் விழா எடுக்கிறீர்கள் எனக் கேட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் தவிர்ந்திருக்கிறார். மீலாத் தினத்தை முஸ்லிம்களே அக்கறையுடன் கொண்டாடாத போது எனக்கெதற்கு என அவர் நினைத்திருக்கலாம்.

நடந்து முடிந்த தேசிய மீலாத் விழாவும் கூட பல நாட்கள் சிரமத்தின் பின்னர், பலரது தியாகத்தின் முடிவில் அரங்கேற்றப்பட்டிருந்தாலும், அழைப்பிதழில் குறிப்பிட்டிருந்ததன் படி தேசிய விழாவாக அது நடைபெற்றதா என்ற கேள்வி எழுகிறது. தேசியம் என்பது நாடு முழுவதிலும் உள்ள முஸ்லிம்களைக் குறிப்பதா அல்லது நாடு முழுவதும் உள்ள இலங்கையர்களைக் குறிப்பதா ? தேசிய மீலாத் விழாவையொட்டி பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகள் எல்லாம் முஸ்லிம் பாடசாலைகளை மையப்படுத்தியே நடத்தப்பட்டு, தேசிய மீலாத் விழாவின் போது பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். தேசியம் என்பது முஸ்லிம் தேசியமா? ஏன் நாட்டு மக்கள் அனைவரையும் தழுவியதாக போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்க முடியாது ? குறித்த தினமொன்றை வைத்து போட்டிகள் நடத்தப்படுவது குறித்த தினத்திலான விஷேடங்கள் குறித்து பொதுமக்களை அறிவூட்டுவதற்குத் தானே ? எனில், ஏன் நாட்டு மக்கள் அனைவருக்குமான போட்டிகளாக இதனை நடத்தக் கூடாது ?

நாட்டிலே முஸ்லிம்கள் முறையாக வாழவும் தமது நிலைப்பாடுகளை வெளிக்காட்டவும், தமது தூதை முன்வைத்து நாட்டுக்கு வழிகாட்டவும் முன்னின்று தலைமை வகிக்கக் கூடிய ஒரு முறைமை முஸ்லிம் சமூகத்திடம் இல்லை என்பதையே இது காட்டுகிறது.

நபிகளாரின் அழகையும் உணவையும் உறக்கத்தையும் புராணம் பாடிக் கொண்டிருப்பதை விட்டு உலகுக்கு நபிகளார் வழங்கிய தலைமையை இந்த நாட்டுக்கு எடுத்துச் சொல்லாதவரை நபிகளாரும் அவர் கொண்டு வந்த தீனும் இந்த நாட்டில் அநாதரவாகவே இருந்து விட்டுப் போவது தவிர்க்க முடியாதது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2019 இல் ஒபெக் அமைப்பிலிருந்து கட்டார் வெளியேறுகின்றது

2019 ஜனவரி மாதத்திலிருந்து பெற்றோலியம் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பான ஒபெக்கிலிருந்து கட்டார் அரசாங்கம் வெளியேறுவதாக அறிவித்துள்ளது. ஒபெக்கில் 15 உறுப்பு நாடுகள் அங்கத்துவம் வகிப்பதோடு, உலகின் அரைவாசி பெற்றோலிய உற்பத்தியையும் இந்நாடுகளே தம்வசம் வைத்துள்ளன.


கட்டாரின் சக்தி வள அமைச்சர் ஸஅத் ஷரீதா அல் காஃபி இத்தீர்மானத்தை வெளியிட்டுள்ளார். கட்டாரின் மிகப் பெரும் பெற்றோலியக் கம்பனியான கட்டார் பெற்றோலியமும் அமைச்சரின் இத்தீர்மானத்தை உறுதி செய்துள்ளது.

தோஹாவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது கருத்து வெளியிட்ட சக்தி வள அமைச்சர் இயற்கை எரிவாயு உற்பத்தியை 77 மில்லியன் டொன்னில் இருந்து எதிர்வரும் ஆண்டுகளில் 110 மில்லியன் டொன்னாக அதிகரிக்கும் நோக்கிலேயே இத்தீர்மானத்தை கட்டார் அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கட்டார் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமது எரிவாயுத் திட்டத்தை விஸ்தரித்து அபிவிருத்தி செய்வதற்கான திட்டமொன்றை வகுத்துச் செயல்படுகின்றது. இத்திட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த முயற்சியும் அர்ப்பணமும் பெருந்தொகை முதலீடும் அவசியமாகியுள்ளதோடு, கட்டார் எதிர்காலத்தில் முன்னணி இயற்கை எரிவாயு உற்பத்தியாளராகத் திகழ்வதற்கான வாய்ப்புள்ளது என்றும் அமைச்சர் காஃபி மேலும் தெரிவித்தார்.



# சர்வதேசப் பார்வை



# இலஞ்ச விசாரணையை எதிர்கொள்ளும் நெடன் யாஹூ

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெடன்யாஹூ தொலைத் தொடர்புக் கம்பனி ஒன்றிடமிருந்து பெருந்தொகைப் பணத்தை இலஞ்சம் பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து விசாரணைகளை நடாத்துமாறு இஸ்ரேலிய பொலிஸார் பரிந்துரை செய்துள்ளனர்.

இஸ்ரேலின் பிரபலமான பெசிக் எனப்படும் தொலைத் தொடர்பு கம்பனி ஒன்றிடமிருந்து பிரதமர் நெடன் யாஹூவும் அவரது மனைவியும் பெருந்தொகைப் பணத்தை இலஞ்சமாகப் பெற்றுள்ளனர் என்பதற்குப் போதிய சான்றுகள் தம்மிடமுள்ளது என்று இஸ்ரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது இலஞ்ச ஊழல் குறித்து நெடன் யாஹூ எதிர்கொள்ளும் மூன்றாவது குற்றச்சாட்டாகும்.

இஸ்ரேலின் மிகப் பெரிய தொலைத் தொடர்புக் கம்பனியான பெசிக் நெடன் யாஹூவுக்கு பணம் மாத்திரமன்றி வேறு பல அசையாச் சொத்துக்களையும் இலஞ்சமாக வழங்கியுள்ளமை தெரிய வந்துள்ளது. கம்பனிக்குச் சார்பான சில ஆணைகளை வழங்கியதன் மூலம் நெடன் யாஹூ அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இஸ்ரேலின் சட்டமா அதிபர் நெடன் யாஹூவுக்கு எதிரான வழக்கை தாக்கல் செய்வது குறித்து தீர்மானம் மேற்கொள்ளவுள்ளார். நெடன் யாஹூ இக்குற்றச்சாட்டை எதிர்கொண்டால் மிகப் பெரிய அரசியல் நெருக்கடியொன்றுக்கு முகம்கொடுக்க வேண்டி வரும் என அவதானிகள் கூறுகின்றனர்.

இஸ்ரேலிய அரசியலில் செல்வாக்குள்ளவராக நெடன்யாஹூ விளங்குகின்றபோதும், அவரது வலதுசாரிக் கூட்டணி பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்த பின்னரே பொலிஸாரின் பரிந்துரை வெளிவந்துள்ளது. அவருக்கு நெருக்கமான இரு அதிகாரிகள் நீதிமன்ற விசாரணைகளின் போது நெடன் யாஹூவுக்கு எதிராகச் சாட்சியமளிப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நெடன்யாஹூ சில காலம் தொலைத் தொடர்பு அமைச்சராகப் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் பங்களாதேஷ் பிரதமருக்கு தேர்தலில் ஈடுபடத் தடை

பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் பேகம் காலிதாஸியா டிசம்பரில் நடைபெறவுள்ள தேர்தலில் ஈடுபட முடியாதவாறு தடைவிதிக்கப்பட்டுள்ளது. சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ள காலிதாஸியா தேர்தலில் ஈடுபட தகுதியற்றவர் என்றும் அதற்கான காரணம் இரண்டு ஊழல் குற்றச்சாட்டுக்களோடு அவர் தொடர்புபட்டுள்ளார் என்றும் தேர்தல் அதிகாரிகள் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷின் சட்டமா அதிபர் மஹ்பூப் அலாம் தலைநகர் டாக்காவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் தேர்தலில் இறங்க முடியாது என்று கருத்து வெளியிட்டுள்ளார்.

பங்களாதேஷின் உச்ச நீதிமன்றம் இது குறித்துத் தீர்ப்பொன்றையும் வெளியிட்டுள்ளது. 2018 பெப்ரவரியிலிருந்து காலிதாஸியா ஊழல் குற்றச்சாட்டுக்காக பத்தாண்டு கால சிறைத் தண்டனையை அனுபவித்து வருகின்றார். ஒக்டோபரில் நடைபெற்ற மற்றொரு வழக்கு விசாரணையின் பின்னர் மற்றொரு ஏழாண்டு சிறைத் தண்டனைத் தீர்ப்பு அவருக்கு எதிராக வழங்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் தேசியக் கட்சியின் தலைவியான அவர், டிசம்பர் 30 இல் நடைபெறவுள்ள தேர்தலுக்கான தெரிவத்தாட்சிப் பத்திரத்தைத் தாக்கல் செய்திருந்தார். ஆனால் தேர்தல் ஆணையகம் அவரது தெரிவத்தாட்சிப் பத்திரத்தை நிராகரித்துள்ளது.

இது அரசியல் உள்நோக்கம் கொண்ட தீர்ப்பு என்று பங்களாதேஷ் தேசிய கட்சியின் தற்போதைய தலைவர் கபீர் ரஸ்வி தெரிவித்துள்ளார்.




## மியன்மார் இராணுவம் மற்றுமொரு இனச் சுத்திகரிப்பில் ஈடுபட்டுள்ளதாகக் குற்றச்சாட்டு

ரெக்கைன் மாநிலத்தின் வடக்குப் புறமாக ரோஹிங்யா முஸ்லிம்கள் மீது இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்த மியன்மார் இராணுவம், 7 இலட்சம் ரோஹிங்யர்களை நாட்டை விட்டு வெளியேற்றியது. இதனால், சர்வதேச அளவில் கடும் கண்டனங்களையம் சில நாடுகளின் பொருளாதாரத் தடையையும் மியன்மார் அரசாங்கம் எதிர்கொண்டது.

இராணுவத்தின் 33 ஆவது பிரிவே இக்கொடூரமாக நடவடிக்கைகளில் ஈடுபட்டது. தற்போது கச்சின் எனப்படும் பிராந்தியத்தில் இராணுவத்தின் 33 ஆம் பிரிவு திட்டமிட்ட இனப் படுகொலைகளில் ஈடுபட்டு வருவதாகக் குற்றம்சாட்டப்படுகிறது.



## அல் அஸ்ஹர் பிரதான இமாமுக்கும் ஸிஸிக்குமிடையில் பாரிய கருத்து வேறுபாடு



அல் அஸ்ஹரின் பிரதான இமாம் அஹ்மத் அத்தையிப் மற்றும் எகிப்தின் இராணுவ ஆட்சியாளர் ஸீஸிக்கும் இடையில் பாரிய கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. அரசாங்கத்தின் உத்தியோக பூர்வ சஞ்சிகையொன்றில் எங்களை வதை செய்த இஸ்லாமிய சட்டஅறிஞர் என்ற தலைப்பிலான ஸீஸியின் அறிக்கை யொன்று வெளிவந்துள்ளது.

அதேவேளை, இதே சஞ்சிகையில் 'ஜனாதிபதியின் கண்ணோட்டத்தில் இஸ்லாமிய சட்டவியல்' எனும் தலைப்பிலும் 'சீர்திருத்தவாதி' எனும் தலைப்பிலும் கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

அல் அஸ்ஹரின் பிரதான முப்தி அஹ்மத் அல் தையிப் ஸீஸியின் பிரதான ஆதரவாளர்களில் ஒருவர். தற்போது ஜனாதிபதிக்கும் அவருக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியுள்ளது. கெய்ரோவிலுள்ள அல் அஸ்ஹர் பல்கலைக் கழகமே இஸ்லாமிய உலகிலுள்ள மிகப் பெரும் பல்கலைக்கழகமாகும். அது இஸ்லாமிய தீவிரவாதத்தைப் பரப்புவதாக இராணுவக் கொடுங்கோலர் எனக் கருதப்படும் ஸீஸி குற்றம் சுமத்தியுள்ளார்.

# கலகக்காரர்களோடு பேச்சுவார்த்தை நடத்துமாறு மெக்ரோன் பணிப்புரை

முன்னொருபோதும் இல்லாத வகையில் எரிபொருள் விலை உயர்வை எதிர்த்து பிரான்ஸில் தொடர்ச்சியான சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருபவர்களோடு பேச்சுவார்த்தை நடத்துமாறு ஜனாதிபதி மெக்ரோன் பிரதமரைப் பணித்துள்ளார்.

பாரிஸ் நகரில் இலட்சக்கணக்கான மக்கள் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மெக்ரோனின் பொருளாதார சீர்திருத்தத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த சில பத்தாண்டுகளில் பாரிஸ் நகரில் இடம்பெற்ற மிகப் பெரும் மக்கள் போராட்டமாக இது கருதப்படுகின்றது.


பொலிஸார் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரை என்பவற்றைப் பயன்படுத்திய போதும் வெள்ளம் போல் பாய்ந்து வந்த மக்கள் கூட்டத்தை அவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை. நூற்றுக்கணக்கானோர் காயப்பட்டதோடு, பாரிஸ் நகர வீதிகளில் வாகனப் போக்குவரத்துக்கு பெரும் முட்டுக்கட்டைகள் [illegible]




இந்நெருக்கடி குறித்து பேச்சுவார்த்தை நடத்திய மெக்ரோன் அவசரகால நிலைமையை பிரகடனம் செய்யப் போவதாக எச்சரித்திருந்தும் அத்தகைய தீர்மானமொன்றை எடுக்கவில்லை. இள மஞ்சள் மேற்சட்டை அணிந்த ஆர்ப்பாட்டக்காரர்களோடும் அரசியல் தலைவர்களோடும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு மெக்ரோன் தனது பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் மெக்ரோன் பதவி விலக வேண்டும் என்று கோஷமெழுப்பியதோடு, ஆர்ப்பாட்டத்தை நாடு தழுவிய வகையில் விஸ்தரித்து வந்தனர். இந்நிலையிலேயே மெக்ரோன் வேறு வழியின்றி ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முடிவு செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• றவூப் ஸெய்ன்



# ஆப்கானிஸ்தான்:

## அமைதிப் பேச்சுவார்த்தையின் வரைபடம்

17 ஆண்டுகளாக போரினால் சிதைந்து போயுள்ள ஆப்கானிஸ்தானில் நிலையான சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள தாலிபான்கள் முன்வந்துள்ளமை சமாதான நம்பிக்கையை துளிர்க்கச் செய்கின்றது. ஆப்கானிஸ்தானுக்கு நிதியாதரவளிக்கும் ஜெனீவாவின் இரண்டு நாள் மாநாட்டில் கலந்துகொண்ட ஆப்கான் ஜனாதிபதி அஷ்ரப் கனீ, ஆப்கானின் தற்போதைய அமைதிப் பேச்சுவார்த்தைகள் குறித்து வெளியிட்டுள்ள கருத்துக்கள் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.

''ஆப்கான் அரசாங்கம் 12 உறுப்பினர்கள் உள்ளடங்கிய குழுவொன்றை தாலிபான்களோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நியமித்துள்ளது. நாடு முழுவதிலுமுள்ள மக்களோடும் சிவில் சமூகத்தோடும் கலந்துரையாடிய பின்னரே நாம் சமாதானத்திற்கான ஒரு பெரும் பாதை வரைபடத்தைத் (Road Map) தயாரித்துள்ளோம். அனைத்து குடிமக்களினதும் அரசியலமைப்பு ரீதியான உரிமைகளும் கடமைகளும் குறிப்பாக, பெண்களின் உரிமைகள், சமாதானத் திட்டத்தில் உறுதிசெய்யப்படும். பேச்சுவார்த்தைக் குழுவில் பெண்களுக்கும் அங்கத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

நிலையான சமாதானம் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து இக்குழு ஆழமாக ஆராயும். அரசாங்கத்தின் பிரதான அதிகாரியாக ஸலாம் ரஹீமி நியமிக்கப்பட்டுள்ளார். தாலிபான்கள் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைவதற்கு வாய்ப்பளிக்கப்படும். ஆனால், பயங்கரவாதத்தோடு தொடர்பான எந்த அமைப்பும் அரசியல் செயன்முறையில் இணைந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது'' என்று ஜனாதிபதி அஷ்ரப் கனீ தெரிவித்திருந்தார்.

தாலிபான்களும் அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கு சாதகமாகப் பதிலளித்துள்ளனர். ஆனால், சில நிபந்தனைகளை முன்வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுக் கொள்கை தலைவர் பெடரிகா மொகரின், தாலிபான்களுடனான சமாதானப் பேச்சுவார்த்தை உற்சாகமளிப்பதாகவும் போரினால் சிதைந்து போயுள்ள ஆப்கானை மீளக் கட்டியெழுப்புவதற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் நிதியாதரவளிக்கும் என்ற நம்பிக்கை தனக்குள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

ஆப்கானின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரப்பாட்டை நிலைநாட்டுவதற்கான அனைத்து முயற்சிகளிலும் ஐரோப்பிய ஒன்றியம் பங்குகொள்ளும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிநாட்டுக் கொள்கைக்குப் பொறுப்பான பெடரிகா கருத்து வெளியிட்டுள்ளார்.

2001 செப்டம்பர் 11 தாக்குதலை அடுத்து அமெரிக்கா ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தது. 9/11 தாக்குதலின் பிரதான சூத்திரதாரி ஒஸாமா பின் லேடன் ஆப்கானின் தோரா போரா மலைப் பகுதியில் மறைந்திருக்கிறார் என்று கூறப்பட்டே அமெரிக்க இராணுவம் அங்கு தரையிறங்கியது. அப்போது ஆட்சியிலிருந்த தாலிபான்கள் பதவி கவிழ்க்கப்பட்டனர்.

9/11 தாக்குதலுக்கு சரியாக பத்தாண்டுகளுக்கு முன்பாக தாலிபான் இயக்கம் குறித்து பொதுவாக சர்வதேச அளவிலும் குறிப்பாக தெற்காசிய அரசியலிலும் பரபரப்பாகப் பேசப்பட்டது. இன்று தாலிபான்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அனுசரணை வழங்கும் ட்ரம்பின் அதே அமெரிக்காவே தாலிபான் இயக்கத்தை உருவாக்கியது.

1990 களின் முதற் கூறுகளில் ஆப்கானிஸ்தானிலிருந்து ரஷ்யப் படையினரை வெளியேற்றுவதில் ஆப்கான் முஜாஹிதீன்களுக்கு ஆதரவளித்த வொஷிங்டன், போரின் முடிவில் ஆப்கானில் ஓர் இஸ்லாமிய ஆட்சி உதயமாவதைக் கூர்ந்து அவதானித்தது. அப்போதைய



தலைவர்களான புர்ஹானுத்தீன் ரப்பானி மற்றும் பொறியியலாளர் ஹிக்மதியார் போன்றோருக்கு இடையில் ஏற்பட்ட அரசியல்சார் கருத்து வேறுபாடுகளை சந்தர்ப்பமாகப் பயன்படுத்திய வொஷிங்டன் பாகிஸ்தானில் பாரம்பரிய அறபு மத்ரஸாக்களில் கற்று வந்த ஆப்கான் மாணவர்களை பெனாசிர் பூட்டோவின் ஆதரவோடு இராணுவப் பயிற்சி அளித்து களத்தில் இறக்கியது.

பெனாசிரின் அப்போதைய அரசாங்கம், பாகிஸ்தான் உள்விவகார அமைச்சு மற்றும் அமெரிக்காவின் மத்திய உளவு நிறுவனத்தின் கூட்டுத் தயாரிப்பே தாலிபான்கள் என்பதை தாலிபான் இயக்கமே புரிந்துகொள்வதற்கான வாய்ப்பில்லை. பத்தாண்டுகள் கடந்து தாலிபான்களை அமெரிக்கா எதிரியாக முன்னிறுத்தியது. 2001 இலிருந்து கடந்த 17 ஆண்டுகளாக அமெரிக்கச் சார்பான அரசாங்கத்திற்கும் தாலிபான்களுக்கும் இடையில் மூட்டப்பட்ட போரில் வொஷிங்டன் முக்கிய பங்கு வகித்தது.

ஆப்கான் அரச படை மட்டுமன்றி, பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் எல்லைப் புறமான மேற்கு வஸிரிஸ்தானிலுள்ள பாகிஸ்தானியப் படையினரும் தாலிபான்களின் இலக்காகக்கப்பட்டனர். ஆப்கான், பாகிஸ்தான் மற்றும் இந்திய எல்லைப் புறங்களில் தாலிபான்கள் நடத்திய தற்கொலை குண்டுத் தாக்குதல் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான கெரில்லா தாக்குதல்களில் பல்லாயிரம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அந்நாட்டின் கீழ்க்கட்டுமாணம் பெருமளவு அழிக்கப்பட்டுள்ளது. சுகாதாரம் மற்றும் கல்வித் துறை பெருமளவு பின்னடைந்துள்ளது. ஆப்கானிஸ்தான் உலகிலுள்ள வறிய நாடுகளில் ஒன்று. 5000 பேருக்கு ஒரு வைத்தியர் என்ற வகையில் சுகாதாரத் துறையில் பின்னடைந்த நாடு. பத்தாண்டுகால தாலிபான்களின் ஆட்சியில் பெண் கல்வி முற்றிலும் மறுதலிக்கப்பட்டது.

இந்நிலையிலேயே 2001 இற்குப் பின்னர் ஹமீத் கர்ஸாயியும் அவரைத் தொடர்ந்து அஷ்ரப் கனீயும் நாட்டின் தலைமைத்துவத்தை ஏற்றனர். தொடர்ச்சியாக இடம்பெறும் போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற தீர்மானத்தில் அரசாங்கம் இருந்து வந்த போதும், தாலிபான்கள் அதற்கு ஆதரவளிக்கவில்லை. பிற்போக்கான, பாரம்பரிய, பழமைவாதப் போக்குள்ள தாலிபான்கள் ஒருபுறம், கோத்திர மற்றும் குலக் குழு அமைப்பைக் கொண்ட ஆப்கான் சிவில் சமூகம் இன்னொரு புறம். நவீன மயமாக்கத்தை முன்னிறுத்தும் மேற்குலகுச் சார்பான ஆட்சியாளர்கள் மறுபுறம் என ஆப்கான் சிதைந்து போயுள்ளது.

1980 களின் தொடக்கத்திலிருந்து கடந்த 35 ஆண்டுகளாக மக்கள் சிவில் யுத்தத்தையும் வெளிநாட்டின் ஆயுதப் போரையும் சந்தித்து வருகின்றனர். இப்போர் இன்னும் தொடர்ந்தால் அந்நாட்டின் அரசியல், பொருளாதார, கல்வி, எதிர்காலம் மீள முடியாத நிலைக்குச் செல்லும் என்பதில் சந்தேகமில்லை.

தாலிபான்களின் கருத்திலும் நிலைப்பாடுகளிலும் சிறிய மாற்றம் தென்படுகின்றது. கடந்த மாதம் தாலிபான் தூதுக் குழுவொன்று ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவுக்கு வருகை தந்தது. ஆப்கானிஸ்தானில் நிலையான சமாதானத்தைக் கட்டியெழுப்பும் சர்வதேச மாநாட்டில் கலந்துகொள்ளவே தாலிபான் அணி அங்கு விஜயம் மேற்கொண்டது. இது அவ்வியக்கத்தின் கொள்கையில் ஏற்பட்டுள்ள மாற்றமாகவே கருதப்படுகின்றது.

அடுத்த கட்டமாக, நாட்டின் சமாதானத்தை ஏற்படுத்துவது குறித்து சிவில் சமூகத்தின் கருத்துக்கள் பெறப்படும் என கட்டாரிலுள்ள தாலிபான்களின் பேச்சாளர் சுஹைல் ஷஹீன் தெரிவித்துள்ளார். பேச்சுவார்த்தைக்கு இடையீட்டாளர்களாக தாலிபான்கள் விரும்பும் தரப்பை நியமிக்க முடியும் என ஆப்கான் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை, சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னிட்டு ஐரோப்பிய ஒன்றியம் 535 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியாதரவை பரிந்துரை செய்துள்ளது. ஜெனீவாவில் இதற்கான உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய சமாதான முன்னெடுப்புகள் ஆப்கானில் குறிப்பிடத்தக்க சமூக, அரசியல் மாற்றங்களை உருவாக்கும் என எதிர்பார்க்கலாம். ஆனால், பேச்சுவார்த்தைகள் இன்னும் தொடங்கவில்லை. தாலிபான்கள் தரப்பிடமிருந்து எத்தகைய நிபந்தனைகள் முன்வைக்கப்படப் போகின்றது என்பதை அஷ்ரப் கனீயின் அரசாங்கமும் சர்வதேச சமூகமும் கூர்ந்து அவதானித்து வருகின்றது.

# பஹ்ரைன் பாராளுமன்றத் தேர்தல்



இறுக்கமான மன்னராட்சி நிலவி வரும் பஹ்ரைனில் கடந்த வாரம் பாராளுமன்ற மற்றும் மாநகர சபைத் தேர்தல்கள் நடைபெற்றன. 67 வீதமான வாக்காளர்கள் முதல் சுற்றில் கலந்து கொண்டதாக தேர்தல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

2011 இல் பஹ்ரைனில் ஜனநாயக ஆதரவு சக்திகள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து பாராளுமன்றத்திற்கான தேர்தலை நடத்த மன்னர்கள் தீர்மானித்தனர். அந்த வகையில் 2011 இற்குப் பின்னர் இடம்பெறும் இரண்டாவது பாராளுமன்றத் தேர்தல் இதுவாகும்.

365,467 பேர் பாராளுமன்றத் தேர்தலுக்கு வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். 40 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலே கடந்த வாரம் இடம்பெற்றது. அறபு வசந்தத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட ஜனநாயக மாற்றமாகவே இத்தேர்தல் பார்க்கப்படுகிறது. கடந்த வாரங்களில் கட்டார் மற்றும் ஈரான் ஆகிய பிராந்தியத்தின் பிற நாடுகளால் பஹ்ரைன் அரசாங்கம் கடும் விமர்சனத்திற்கு ஆளாகியது.

நடைபெற்ற தேர்தலில் 6 பெண்கள் தெரிவாகியுள்ளனர். பஹ்ரைன் பாராளுமன்றத்துக்கென 6 பெண்கள் தெரிவுசெய்யப்பட்டமை இதுவே முதன் முறையாகும். பஹ்ரைன் குடியாளர்கள் அமைப்பின் பேச்சாளர் முஹம்மத் செய்யித், அல் அறபிய்யா ஆங்கில செய்திச் சேவைக்கு வழங்கிய நேர்காணலில், ''2018 பாராளுமன்றத் தேர்தல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. பாராளுமன்றத்தில் பெண்களின் எண்ணிக்கையை எதிர்காலத்தில் நாம் இன்னும் அதிகரிப்போம். அரசியலிலும் சமூகத்திலும் பஹ்ரைன் பெண்கள் ஆற்றி வரும் முக்கிய பங்களிப்பு மற்றும் சமத்துவத்தில்



பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட பெண் உறுப்பினர் ஒருவர்

நம்பிக்கை கொண்ட நாம் அனைவரும் பாராளுமன்றத்திற்குப் பெண்கள் தெரிவுசெய்யப்பட்டமையை இட்டு பெருமையடைகின்றோம்.

பஹ்ரைன் பிரதிநிதிகள் சபையில் (பாராளுமன்றத்தில் மொத்தமாக உள்ள 40 உறுப்பினர்களில் 6 பெண்கள் இடம்பெறுகின்றனர். சவ்ஸான் கமால், ஸைனப் அப்துல் அமீர், மஸூமா அப்துல் ரஹீம், கல்தாம் அல் ஹைகி, பவ்ஸியா ஸெய்னல், பாத்திமா அல் கத்தாரி ஆகியோரே இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

2002 இல் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் 31 பெண்கள் களமிறங்கியும் எவரும் தெரிவுசெய்யப்படவில்லை. 2006 இல் நடைபெற்ற தேர்தலில் லத்தீபா கஊத் எனும் ஒரேயொரு பெண்மணி தெரிவுசெய்யப்பட்டு 2010 ஆம் ஆண்டு வரை பாராளுமன்ற உறுப்பினராக நீடித்தார். 2014 தேர்தலில் 3 பெண்கள் பாராளுமன்றத்திற்குத் தெரிவாகினர். பாராளுமன்ற ஜனநாயக முறை பஹ்ரைனில் சமீபத்திலேயே அங்கீகரிக்கப்பட்டது. அதனால் பிரதிநிதி [illegible]

இதுவரை அறிமுகம் செய்யப்படவில்லை. அதாவது இத்தனை ஆண்களும் இத்தனை பெண்களுமே பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று வரையறை செய்யப்படவில்லை. அவ்வாறு வரையறை செய்வது நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது. ஏனெனில், குடிமக்கள் அனைவரும் சமமானவர்கள் என்று அரசியலமைப்பு சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாக பஹ்ரைன் குடிமக்கள் அமைப்பின் பேச்சாளர் முஹம்மத் ஸையித் தெரிவிக்கின்றார்.

பஹ்ரைன் வணிகப் பெண்கள் சமூகத்தைச் சேர்ந்த அஹ்லாம் ஜனாஹி அரச தொலைக்காட்சி சேவைக்குக் கருத்துத் தெரிவித்த போது இந்தத் தேர்தல் இதுவரை பாராளுமன்றம் செல்ல பெண்களுக்கு இருந்த தடையை உடைத்தெறிந்துள்ளது. பஹ்ரைனியப் பெண்கள் தம்மைப் பாராளுமன்றப் பிரதிநிதிகளாக மாற்றிக் கொள்ளும் தகுதியுள்ளவர்கள் என்பதை நிரூபித்துள்ளனர். எனவே, பெண்களுக்கு தனியான கோட்டா முறைமையொன்று அவசியமில்லை என்று தெரிவித்துள்ளார்.

2014 தேர்தலில் வாக்களித்தோர் வீதாசாரம் 53 ஆகும். எவ்வாறாயினும் அல் கலீபா குடும்பத்தின் ஆட்சிக்கு எதிராக கிளர்ந்துள்ள அந்நாட்டின் ஷீஆ சமூகம் இந்தத் தேர்தலை பகிஷ்கரித்துள்ளது.

### பஹ்ரைன் சாம்ராஜ்யம்

மத்திய கிழக்கில் முதன் முதலாக எண்ணெய் வளத்தைக் கண்டுபிடித்த நாடு பஹ்ரைன். ஆயினும், குவைத் அல்லது சவூதி அறேபியா போன்ற நாடுகளின் பெற்றோல் உற்பத்திக்குச் சமாதாந்திரமான அளவு பெற்றோலியத்தை பஹ்ரைன் இதுவரை உற்பத்தி செய்யவில்லை. அல் கலீபா குடும்பத்தின் மன்னராட்சி நிலவும் இந்நாட்டில் பிரதான அரசியல் மற்றும் இராணுவத் துறை பதவிகளை கலீபா குடும்பத்தினரே வகித்து வருகின்றனர்.

2000 இற்குப் பின்னர் பஹ்ரைனில் ஷீஆ-சுன்னி பதட்டம் கூர்மையடைந்தது. பஹ்ரைன் சவூதி அறேபியாவின் நட்பு நாடாக விளங்குவதோடு, எகிப்தில் இடம்பெற்ற இராணுவப் புரட்சிக்கும் ஆதரவளித்த நாடாக விளங்குகிறது.

1999 ஆம் ஆண்டிலிருந்து ஷெய்க் ஹமாத் நாட்டின் மன்னராக இருந்து வருகின்றார். அமீர் என்ற பதவியை 2002 இல் அவர் மன்னர் பதவியாக அறிவித்தார். ஐக்கிய இராச்சியத்தின் கேம்பிரிஜ் நகரிலுள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்ற ஹமாத் 1950 இல் பிறந்தவர். 1783 ஆம் ஆண்டிலிருந்து பஹ்ரைனில் கலீபா குடும்பம் ஆட்சி செய்து வருகிறது.

பஹ்ரைன் ஆட்சி அரசியலமைப்புக்கு உட்பட்ட மன்னராட்சி எனப்படுகிறது.

மக்கள் தொகை 1.4 மில்லியன்

பரப்பு 717 சதுர கி.மீ.

பிரதான மொழி - அறபு

ஆயுட்கால எதிர்பார்ப்பு 75 வருடங்கள்

நாணயம் பஹ்ரைன் தீனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திகன வன்முறை:

## உண்மையை கண்டறியும் பிரஜைகள் ஆணைக்குழு அறிக்கை மீதான ஒரு பார்வை

• ஹெட்டி ரம்ஸி

2018 மார்ச் மாதம் திகன, தெல்தெனிய பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற இனவன்முறைகள் தொடர்பில் உண்மையைக் கண்டறியும் பிரஜைகள் ஆணைக்குழு மற்றும் 2018.05.03 ஆம் திகதி கண்டியில் இடம்பெற்ற எதிர்காலத்தில் இனவன்முறைகளைத் தடுக்கும் பொதுமக்களின் ஆலோசனை தொடர்பான பிரஜைகள் ஆணைக்குழுவின் அறிக்கை கடந்த நவம்பர் 03 ஆம் திகதி வெளியிட்டு வைக்கப்பட்டது.

இவ்வாணைக்குழு கண்டி மாவட்ட சர்வமதக் குழுவினால் ஒழுங்குசெய்யப்பட்டது. கண்டி திகன வன்முறையில் பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து நேரடி வாக்குமூலங்கள் இவ்வாணைக்குழுவினால் பெறப்பட்டுள்ளது. இவ்வறிக்கை சம்பந்தமாக சகல பொறுப்புக்களையும் கண்டி மாவட்ட சர்வமதக் குழு பொறுப்பேற்றுள்ளது. கண்டியில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் பெரும்பாலான மக்கள் இவ்வாணைக்குழுவின் முன்னிலையில் ஆஜராகி வாக்குமூலங்களை பதிவுசெய்துள்ளனர்.

வன்முறைச் சம்பவங்கள் குறித்த சி.சி.டி.வி வீடியோ பதிவுகளையும் இக்குழு தம்வசம் வைத்துள்ளது. திகன வன்முறை தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களின் வாக்குமூலங்களை உள்ளடக்கிய வகையில் வெளியிடப்பட்ட மிக முக்கிய அறிக்கையொன்றாக இதனை நோக்க முடிகிறது.

### கண்டி மாவட்ட சர்வமதக் குழு

கண்டி மாவட்ட சர்வமதக் குழு தேசிய சமாதானப் பேரவையின் கீழ் இயங்கி வருகின்றது. சர்வமதத் தலைவர்கள், ஊடகவியலாளர்கள், சிவில் சமூகத் தலைவர்கள், கல்விமான்கள் உள்ளிட்ட 40 இற்கும் மேற்பட்டவர்களை இக்குழு கொண்டுள்ளது. கண்டி மாவட்டத்தில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை அடிப்படையாகக் கொண்டு இனங்களுக்கிடையில் சமாதானம், நல்லிணக்கத்தை மேம்படுத்துவதே இக்குழுவின் நோக்காகக் காணப்படுகிறது.

கண்டி மாவட்ட சர்வமதக் குழு அப்பகுதியில் வாழும் சகல இன மக்களினதும் கலாசாரம், பல்வகைமைக்கு மதிப்பளித்துச் செயற்படுகிறது. கண்டி, திகன கலவரம் இடம்பெற்றபோது இக்குழு உடனடியாக முன்வந்து ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம், மத்திய மாகாண ஆளுநர் அலுவலகம் போன்றவற்றுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நிலைமையை கட்டுப்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்திருந்தது.

இச்சம்பவத்திற்கு மறுதினம் சம்பவம் இடம்பெற்ற பிரதேசங்களைப் பார்வையிட்ட கண்டி மாவட்ட சர்வமதக் குழு, சேதமடைந்த பிரதேசங்களை புகைப்படம் எடுத்தும் வீடியோ பதிவுசெய்து கொண்டது. இதன்போது பாதிக்கப்பட்ட முஸ்லிம் தரப்புக்கள் சம்பவத்தை பற்றிய தங்களது கருத்துக்களை சர்வமதக் குழுவினை பிரதிநிதித்துவப்படுத்திய ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் நடவடிக்கைகளும் இக்குழுவினால் முன்னெடுக்கப்பட்டது. அன்றைய தினம் மாலை இப்பிரச்சினையை உடன் நிறுத்தும்படி முரண்பாடுகளுடன் தொடர்புபட்ட நபர்களிடம் இந்தக் குழு ஊடகங்கள் வாயிலாக வேண்டுகோள் விடுத்தது. இந்த ஊடகக் கலந்துரையாடலானது திகன சம்பவம் தொடர்பாக சகல அமைப்புக்களைச் சார்ந்தவர்களையும் உள்ளடக்கியதாக நடத்தப்பட்ட ஒரேயொரு ஊடகக் கலந்துரையாடலாகக் காணப்பட்டது. அத்துடன் தொடர்ச்சியாக 06 நாட்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடமாடிய இக்குழுவினர் நிகழ்வு பற்றிய தகவல்களை திரட்டி வந்தது. தவிரவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உணவுகளையும் வழங்கி வந்தது.

### உண்மையை கண்டறியும் ஆணைக் குழுவை நடைமுறைப்படுத்தல்

கண்டி மாவட்ட சர்வமதக் குழு 2018.05.02 ஆம் திகதி பத்திரிகை விளம்பரத்தின் படி செயற்படுவதற்கு ஆரம்பித்தது. இதன் பிரகாரம் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுக்கள் மூன்று நியமிக்கப்பட்டன. திகனயில் மூன்று இடங்களில் செயற்பட்டதுடன், 2018.04.28 ஆம் திகதி கடுகஸ்தொட, உகுரஸ்ஸபிடிய மற்றும் திகன பிரதேசங்களில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு செயற்பட்டது. 2018.05.02 ஆம் திகதி வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரத்தின் படி ஆணைக்குழுவில் செயற்படுவது சம்பந்தமாக சுயேச்சையாக பங்கு பற்றிய சட்டத்தரணிகள் குழு மூன்று பிரிவுகளாக பிரிந்து அந்தந்த ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு உதவி செய்தனர். இவ்வாணைக்குழுவில் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் மூலம் சாட்சிகள் சேகரிக்கப்பட்டுள்ளன. கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள், அதனை நேரில் பார்த்தவர்கள் என பெருமளவிலானவர்கள் ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்திருக்கிறார்கள்.

ஆணைக்குழுவில் அங்கம் வகித்த உறுப்பினர்களும் தங்களது கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் பதிவுசெய்துள்ளார்கள். உண்மையைக் கண்டறியும் பிரஜைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் கட்டுகஸ்தொட, உகுரஸ்ஸபிடிய, திகன ஆகிய இடங்களில் செயற்பட்டதைத் தொடர்ந்து இலங்கையில் இனப்பிரச்சினையை இல்லாமல் செய்வதற்காக பிரஜைகள் ஆணைக்குழுவொன்று செயற்படுத்தப்பட்டது. அதற்கமைய 2018 மே மாதம் 13 ஆம் திகதி கண்டி டெவோன் ஹோட்டலில் இன மோதல்களைக் குறைப்பது எனும் விடயத்தில் உரிய துறைகளில் இடம்பெற வேண்டிய மாற்றங்களை உள்ளடக்குவதற்கான உரிய பிரஜைகளின் முன்மொழிவுகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள் ளும் வேலைத்திட்டமொன்று இடம்பெற்றது. இதில் பகிரப்பட்ட கருத்துக்களும் முன்மொழிவுகளும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**தேசிய சமாதானக் குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா:** தலைமைத்துவப் பிரச்சினையே இன்று எமது நாட்டின் முக்கிய பிரச்சினை. எமது நாட்டில் தலைவர்கள் இருக்கிறார்கள். ஆனால் பிரச்சினையான நிலைமைகளின் போது தமது தலைமைத்துவத்தைக் காட்டுவதில்லை. அவை எடுத்துக்காட்டப்படுவதில்லை. எமது நாட்டில் பக்கச்சார்பான தலைமைத்துவமே உள்ளது. மக்களைப் பற்றிய நம்பிக்கை எமது நாட்டுத் தலைவர்களுக்கு கிடைக்க வேண்டும்.

**பேராதனை பல்கலைக்கழக முகாமைத்துவத் துறை பீடாதிபதி மில்டன் ராஜரத்ன:** இந்நாட்டில் மீண்டும் மதக் கலவரங்கள் ஏற்படாத வகையில் முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு இவ்வாறான ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படுவது மிகவும் பெறுமதியானது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுக்களை அமைப்பது அரசாங்கத்தின் கடப்பாடாகும். இதனால் பல தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும். கண்டி பிரஜைகள் ஆணைக்குழுவை முன்னுதாரணமாக கொண்டு எமது நாட்டில் ஒற்றுமையான சமூகத்தை கட்டியெழுப்புவதற்காக நடவடிக்கைகள் எடுப்பது அவசியம்.

**கண்டி மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் ஏ.எம்.எல்.பி. பொல்கொல்ல:** எமது நாட்டில் நான்கு இனங்கள் உள்ளன. எமது நாட்டை ஏன் ஐக்கியப்படுத்தி அபிவிருத்தி செய்ய முடியாது. பிரஜைகள் என்ற வகையில் நாம் இதற்கு முன்வருவது மிகக் குறைவு. அரசாங்கத்திடமிருந்து நாம் இவ்வாறான வேலைத் திட்டங்களை எதிர்பார்க்கின்றோம். அரசியல்வாதிகள் தாம் மீண்டும் மீண்டும் பதவிக்கு வருவதற்கு இவ்வாறான நிலைமைகளைப் பாவிக்கும் நிலையேற்பட்டுள்ளது. மக்களின் உணர்வுகளை தூண்டி அந்தந்த இனத்தவர்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காக இவ்வாறானவைகளை ஏற்படுத்திச் செல்லும் நிலைமையினையே நாம் காணக் கூடியதாக இருக்கின்றது. பிரஜைகள் என்ற வகையில் நாம் இன்னும் பார்த்துக் கொண்டிருந்தால் இந்நாடு அழிவுக்குட்படும் என்பது நிச்சயம்.

**முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி டபிள்யூ.எம்.பீ.பி. வராவெவ:** எமக்கிடையே சமாதானம், நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் ஒரு சமூகத்தை உருவாக்க வேண்டும். குரோதம், வைராக்கியம், பழிவாங்கல் மற்றும் கொலைசெய்யும் அரசியல் கட்சிகள் அற்ற சமூகமொன்றே அவசியம். திகனயில் ஏற்பட்ட கலவரத்தை ஐந்து நிமிடங்களில் தீர்த்துக் கொள்ளக்கூடிய நிலைமையிருந்தது. பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தால் 5 நிமிடங்களில் இப்பிரச்சினையை முடித்திருக்கலாம். திட்டமிடப்பட்ட குழுவினராலேயே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. கிராமம் என்ற வகையில் சிங்கள முஸ்லிம் மக்களுக்கிடையில் எவ்வித கோபதாபங்களும் இல்லை. அவரரவர் மொழிகளில் பேசிக்கொண்டிருந்தனர். அங்கு வேறுபாடுகள் ஏற்படவில்லை.

**சமத் கவிகார- வித்தியார்த்த வித்தியாலயம்:** கண்டி, நல்லிணக்கம் என்பது ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டது. சமயங்களுக்கிடையேயும் சரி இனங்களுக்கிடையேயும் சரி அது ஒன்றோடொன்று இணைவதன் மூலம் ஏற்படுகின்ற சமாதானம் இருக்கலாம். வளர்ந்தோருக்கிடையில் மட்டுமன்றி இளம் சமுதாயத்தினரிடையேயும் பாடசாலை மட்டத்திலும் இவ்வாறான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியுமாயின் அது எமது சமூகத்தை இதைவிட உயர்ந்த நிலைக்குக் கொண்டுசெல்லும்.

**எஸ்.ஏ. விஜேபால- தங்கொல்ல- கண்டி:** அனைத்து சமயங்களினதும் கலாச்சார அடையாளங்களை மதிக்க வேண்டும், நாட்டு மக்களுக்கு தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழி அறிவுகளை பெற்றுக்கொள்ள உரிய சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். பிரதேச ரீதியாக அனைத்து சமயத்தவர்களுக்கும் தேவையான பொருத்தமான செயலமர்வுகளை ஏற்படுத்த வேண்டும். திருமணங்களின் போது சமயக் கட்டுப்பாடுகளை திணிக்கக் கூடாது.

**நாரம்பனாவே தம்மாலோக தேரர்:** இந்த உலகம் சமயங்களால் மாத்திரம் இயங்குவதில்லை. நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு சமயம் தான் தேவையென்றில்லை. வேறுபல வேலைத் திட்டங்களும் உள்ளது. பௌத்தவர்கள் பன்சிலையும், முஸ்லிம்கள் குர்ஆனையும், கிறிஸ்தவர்கள் பைபிளையும் பரிசீலனை செய்ய வேண்டும். இந்த சமயப் பாடங்களை தங்களது வாழ்க்கைக்கு உட்படுத்தி அதைப் பின்பற்ற வேண்டும். நாம் அவற்றில் உள்ளவற்றை செயற்படுத்தாமல் வெளியுலகிலுள்ளவைகளை செயற்படுத்தி வருகிறோம். எதிர்காலத்தில் சமயத் தலைவர்களை ஒன்றுபடுத்தும் திட்டமொன்றை செய்ய வேண்டும். நாம் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் வாழ வேண்டும்.

**ஜயவீர கொஹம்பகே:** சமய அடிப்படையிலிருந்து அரசியற் கட்சிகள் விடுபட வேண்டும், இனவாதத்தை தூண்டும் நடவடிக்கைகளுக்கு தண்டனைச் சட்டக்கோவையில் கடுமையான தண்டனைகள் உள்ளடக்கப்பட வேண்டும், பாடசாலை பெயரிடும் போது சமய, இன அடிப்படையில் பெயரிடுவதை தவிர்த்தல் வேண்டும், ஊடகங்களில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவது சம்பந்தமான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். தொழில்களுக்கு ஆட்சேர்ப்பு செய்கின்ற போது இன, மதம் பாராது மனிதர்கள் என்ற அடிப்படையில் சிந்தித்து ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும்.

**ஆர்.எஸ்.பி.பீ சேனாநாயக்க:** பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் அனைத்துப் பிரஜைகளையும் இலங்கையர் என குறிப்பிடுதல் வேண்டும். (உதா: இலங்கைச் சிங்களவர், இலங்கைச் சோனகர்) 1ஆம் தரத்திலிருந்து 6ஆம் தரம் வரையுள்ள பாடசாலை பாடத்திட்டத்தில் சமூகக்கல்வி பாடத்திட்டத்தின் கீழ் (வரலாறு, புவியியல், சமயம்) இணைந்ததாக தம்மைச் சூழவுள்ள சுற்றாடலில் வாழும் பல்வேறு மக்கள் குழுமங்கள் சம்பந்தமாக உரிய விளக்கங்கள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். மாணவர்களுக்கு வரலாறு, கலாசார நிகழ்வுகள், நற்குணவியல்புகள், சமய உற்சவங்கள் போன்றவை தொடர்பான அடிப்படை விளக்கங்களை வழங்குவதன் மூலம் ஆரம்பமாக நல்லிணக்கத்தை அறிமுகப்படுத்துதல், ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனி பாடசாலைகள் இல்லாமல் எல்லோரும் ஒரே பாடசாலைத் தொகுதியில் கல்வி கற்பதற்கு ஏற்பாடு செய்தல்,

பாடசாலைச் சீருடை ஒரே மாதிரி அமைதல், பண்டிகை விழாக்கள் கொண்டாட்டங்களின் போது ஏனைய சமயத்தினரையும் தொடர்புபடுத்திக் கொண்டு முடியுமான அளவு விழாக்களை கொண்டாடக்கூடிய ஒரு முறையை ஏற்பாடுசெய்தல், சகல இனத்தவர்களினாலும் தங்களது அடையாளத்திற்கு அமைய அணியும் ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் தொடர்பாக அவைகள் வரலாறுகளுக்கும் நவீன சமூக அமைப்பிற்கும் இடையிலான பொருத்தப்பாட்டை கருத்திற் கொள்ளல், 100 வருட குடி விகிதாசார வளர்ச்சி தொடர்பாக தகவல் திட்டமொன்று அமைத்து அந்தந்த இனக்குழுக்களின் குடித்தொகை வளர்ச்சி தொடர்பாக தெளிவான கருத்துக்களை மக்களிடையே அறிமுகப்படுத்தி ஒவ்வொரு 5 வருடங்களுக்கு ஒருமுறை அது சம்பந்தமாக உத்தியோகபூர்வ அறிக்கையை வெளியிடல், சந்தைப் போட்டியினை காரணமாக கொண்டு முஸ்லிம் சிங்கள மக்களிடையே ஏற்பட்டிருக்கும் போட்டிகளின் மீது பல்வேறுபட்ட பிரச்சினைகள் பரவுவதை தவிர்த்துக் கொள்ளல்.

இவ்வாறு இவ்வறிக்கையில் உள்வாங்கப்பட்டிருக்கும் சகல ஆலோசனைகளும் பொதுமக்களின் கருத்துக்களாக உள்ளன. சிவில் பிரஜைகள் சிவில் சமூக நிறுவனங்கள் வாய்மூலமாகவும் எழுத்து மூலமாகவும் பெற்றுக் கொடுத்த ஆலோசனைகளும் காணப்படுகின்றன. எனவே இவ்வறிக்கையில் உள்ள விடயங்களை பொறுப்பு வாய்ந்தவர்களும் பாதுகாப்பு தரப்பும் கவனத்திற் கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்டும் பணியை மேற்கொள்வது கட்டாயக் கடமையாகும்.

இனிமேலும் இது போன்றதொரு நிகழ்வு இடம்பெறாமல் இருப்பதற்கு இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்கள் முன்மாதிரியாகக் கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இந்த ஆவணத்தைப் பாதுகாக்கும் அதேவேளை சட்ட நடவடிக்கைகளுக்கான மிக முக்கிய ஆதாரமாகவும் கொள்ளப்பட வேண்டும் என்பதை நினைவுபடுத்துகின்றோம்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• அருவியெம்

# அரசியலில் மூன்றாம் சக்தியின் தோற்றமும் வடிவமும்

இலங்கை அரசியலில் ஜனநாயகத்திற்கும் இலங்கை அரசியலுக்குமுள்ள தொடர்புகள் குறித்து பல சந்தேகங்கள் எழுகின்றன. ஜனநாயக சோசலிஸக் குடியரசு என யாப்பில் குறிப்பிடுகின்ற இலங்கை, ஜனநாயகப் பண்புகளை எவ்வாறு பின்பற்றுகிறது. ஏனெனில், ஜனநாயகத்திற்கு பெரும்பான்மையின் கருத்தே தீர்மானிக்கும் சக்தி என்ற வியாக்கியானமும் உண்டு.

ஆனாலும், சிறுபான்மையின் நியாயமான கருத்துக்களை உள்ளடக்கி, பெரும்பான்மையாக எடுக்கப்படுகின்ற முடிவுகள் அந்த ஜனநாயக சக்திக்கு அல்லது பலத்திற்குப் பெருமை சேர்ப்பதாக அமையும். அத்தகைய செயற்பாடுகளின் மூலம் ஒரு ஜனநாயக அரசு மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கைப் பெற்றுத் திகழும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், இலங்கையின் ஜனநாயகம் அப்படியல்ல, தலைகீழானது என்பதை தற்போது அரசியல் அதிகாரத்துக்காக எழுந்துள்ள அரசியல் நெருக்கடி நிலைமைகள் வெளிப்படுத்தி வருகின்றன. காலா காலமாக இதுவே சிறுபான்மையினரின் நிலைப்பாடாகும். சிறுபான்மையினரோடு எந்த கலந்தாலோசனையுமின்றி பெரும்பான்மை அரசு மேற்கொள்ளும் செயற்பாடுகளினால்தான் இந்நாடு சுதந்திரம் அடைந்தது முதல் ஏற்பட்ட யுத்தத்தினால் சீரழிந்துள்ளது.

அதே வழிமுறையே இன்றைய பாராளுமன்றத்திலும் நடைபெறுகிறது. பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய தேசிய முன்னணி நிராகரிக்கப்பட்டு, சிறுபான்மை பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினராகிய மகிந்த ராஜபக்ஷவை நிறைவேற்று அதிகார பலத்தைப் பயன்படுத்தி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமராக நியமித்துள்ளார்.

பெரும்பான்மை பலத்தைக் கொண்டு, சிறுபான்மைப் பலத்தினால் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்கு எதிராக பல தடவைகள் நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஆனால் வேடிக்கை சிறுபான்மை பலத்தைக் கொண்ட அரசாங்கமே இன்னும் ஆட்சிக்குப் பொறுப்பாக இருக்கின்றது.

இதனால், இலங்கை அரசாங்கம் ஆட்டம் காணுகின்ற நிலையில் இருக்கின்றது. ஏற்கனவே, ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டார். அது ஜனநாயகத்திற்கு முரணான செயல் என்பதால், ஜனநாயகத்தின் காவலாளிகள் ஜனாதிபதியின் இச்செயற்பாட்டுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தை நாடினார்கள். உச்ச நீதிமன்றம் ஜனாதிபதியின் இச்செயற்பாட்டுக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்திருந்தது. அதன் பின்னர் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையோடு ஒரு சக்தியும், ஆட்சி அதிகாரத்தில் ஜனாதிபதியின் தலைமையில் இன்னுமொரு சக்தியுமாக ஸ்திரமற்ற அரசாங்கம் ஒன்று இயங்கிக் கொண்டிருக்கின்றது.

எனவே, ஸ்திரமற்ற இப்பாராளுமன்றம் எப்போதும் கலையலாம், ஆகவே, நாட்டைச் சீரழித்து சுயநல அரசியல் செய்யும் ஆட்சியாளர்களை ஓரங்கட்டி, நாடு குறித்து சிந்தித்துச் செயற்படக் கூடிய ஒரு சக்தி ஒன்று உருவாக வேண்டும் என பலரும் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

### மாற்று சக்தி அரசியலில் முஸ்லிம்கள்

இந்நிலையில் மூன்றாம் சக்தி குறித்து பேசப்படுகின்றது. இதில் இலங்கை சிறுபான்மை முஸ்லிம்களின் நிலைப்பாடு எவ்வாறு அமையப் போகிறது? ஏனெனில், இன்றுவரை இலங்கை முஸ்லிம் அரசியல் தங்களால் கையாளக் கூடிய ஒரே அரசியல் தீர்வாக பிரதிநிதித்துவ ஜனநாயக முறையைத்தான் பின்பற்றி வந்துள்ளார்கள். இதன் மூலமே தங்களது பேரம் பேசும் சக்தியைப் பலப்படுத்தி, தங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொண்டார்கள். இதனை மேலும் அதிகரிப்பதன் மூலமே முஸ்லிம்களின் அடுத்தடுத்தக் கட்டங்களுக்கு முன்னேறிச் செல்லலாம் என்றும் எதிர்பார்க்கின்றனர்.

ஆனால், இப்போது அரசியலிலுள்ள முஸ்லிம் சக்திகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் ஏனைய கட்சிகள் முஸ்லிம்களுக்கு மத்தியில் தூர்ந்துபோன சக்திகளாகவே நோக்கப்படுகின்றன. இவ்வாறு தூர்ந்து போன சக்திகளை நீக்கிவிட்டு இலங்கை தேசத்தை நேசிக்கக் கூடிய, அறிவுஜீவிகளான, நேர்மையான புதிய சக்திகளை முஸ்லிம்கள் கட்டியெழுப்ப வேண்டியிருக்கிறது என்றும் சில அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அவ்வாறான ஒரு புதிய தலைமையாக மேலெழக்கூடும் என்று எதிர்பார்க்கப்படும் ஒரு புதிய கட்சியாகவே நல்லாட்சிக்கான தேசிய முன்னணி விளங்குவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். நல்லாட்சிக்கான தேசிய முன்னணி புதிய கட்சியாக அறிவித்த சில நாட்களிலேயே உள்ளூராட்சித் தேர்தல் நடாத்தப்பட்டது. கட்சியாக அறிவிக்கப்பட்டு சுமார் ஒரு வருடத்திற்குள் நாட்டின் தலைநகர் கொழும்பு மற்றும் வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களில் போட்டியிட்டு 18 உள்ளூராட்சி உறுப்பினர்களைப் பெற்றுள்ளார்கள்.

10 வருடங்களாக குறிப்பிட்ட ஒரு பகுதியில் சுயேட்சைக் குழுவாக இருந்த ஒரு குழு கட்சியாக அங்கீகரிக்கப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் அவசர அவசரமாகக் கட்டியெழுப்பி 20 தொகுதிகளில் போட்டியிட்டு 18 உள்ளூராட்சி உறுப்பினர்களைப் பெறுவது மிகப் பெரிய சவாலாகும். ஏனெனில், ஒரு புதிய கட்சி தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களைக் கண்டுபிடித்தல் என்பதே மிகப் பெரிய சவாலாகும். அதனையும் அடையாளம் கண்டு 18 உறுப்பினர்களையும் பெற்றுள்ளார்கள் என்பது மிகப் பெரிய வெற்றியாகும்.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் இவ்வெற்றி துரித வளர்ச்சியை அழகாக எடுத்துக் காட்டுகிறது. இந்நிலையில் தற்போதைய அரசியல் நெருக்கடி சூழ்நிலை ஒரு பாராளுமன்ற தேர்தல் ஒன்றை ஏற்படுத்தினால் இக்கட்சியினரின் அரசியல் வியூகம் எவ்வாறு அமையப் போகிறது என்பது மிகவும் முக்கியமாகும்.

இரு கட்சி அரசியல் முறைமையைக் கொண்ட இலங்கையில், தற்போது பல கட்சி அரசியல் வழிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், தற்போதைய அரசியல் நெருக்கடியான சூழ்நிலை இலங்கை அரசியலில் பலமான மாற்று அணி ஒன்று உருவாகுவது குறித்து பலராலும் பேசப்படுகின்றது.

### அரசியலில் கூட்டுக் கட்சி அணிகள்

ஐக்கிய தேசியக் கட்சியை மையமாக வைத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜாதிக ஹெல உருமய, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் சில சிறிய கட்சிகள் ஒரு அணியில் போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோல், இன்னுமொரு பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெற்று பலமான கட்சியாக உதயமாகியுள்ளது. இவர்களோடு ஒரு சில அரசியல் பிரமுகர்களும் இணைந்து ஒரு அணியாகக் களமிறங்க இருக்கின்றனர்.


மேலும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க (பக்.15)



செய்னுலாப்தீன் நிஹாஸ்

# தலைவர்களில் சிக்கித் தவிக்கும் இலங்கை





எமது நாட்டைப் பற்றி யோசிக்கும் போது எமக்கு நினைவுக்கு வருவது நாலா பக்கமும் கடலால் சூழப்பட்ட இந்து சமுத்திரத்தின் முத்து, பசுமைச் சூழலும் இயற்கை எழிலும் கனிய வளங்களும் நிறைந்த நாடு. எழுத்தறிவு வீதம் 90 வீதத்தையும் தாண்டிய உலகின் நுண்ணறிவு படைத்த சமூகத்தில் இரண்டாவது இடத்தில் எமது நாட்டு மக்கள் உள்ளனர். ஒரு காலத்தில் விவசாயத்தில் தன்னிறைவு கண்டு அரிசியை ஏற்றுமதி செய்த வரலாறும் எமது நாட்டுக்கு உண்டு. அத்தோடு எமது நாட்டின் வரவு-செலவுத் திட்டம் மிகையாக கடன்களற்ற வரவு-செலவுத் திட்டத்தை ஒரு காலத்தில் கொண்டிருந்த நாடுதான் எமது நாடு.

இத்தகைய அழகிய எமது நாடு இன்று பொறுப்பற்ற, வெறுக்கத்தக்க அரசியல் தலைவர்களினால் பொருளாதாரப் பிரச்சினையாலும் கடன் சுமையாலும் ஒழுங்கற்ற அரச நிர்வாகத்தாலும் பந்தாடப்பட்டு உலகில் கேலிக்கூத்தான ஒரு அரசியலுக்கு உதாரணமாக உலகின் முன் தலைகுனிந்து நிற்கிறோம்.

இலங்கையரான நாம் இத்தனை அரசியல் குழப்பத்தில் அண்மையில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்திற்கு நாடு வரலாற்றில் ஒருபோதும் சந்தித்திராத ஜனநாயகப் படுகொலைக்கும் காரணமானவராக இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தன்னிச்சையான போக்கே காரணம் என்றால் அதை யாரும் மறுப்பதற்கில்லை. 2015 ஜனாதிபதித் தேர்தலில் இலங்கையில் சட்ட ஆட்சியையும், ஊழலை ஒழிப்பவராகவும் நேர்மையான மனிதராகவும் நல்லாட்சியின் தலைவராகவும் எமது நாட்டு மக்களால் நோக்கப்பட்ட ஒரு தலைவர் இன்று இதே மக்களால் வெறுக்கத்தக்க தலைவராக வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்.

இந்த நாட்டை இந்தளவு மோசமான நிலைக்குக் கொண்டுவந்தவர்களின் பட்டியலில் இவர் மட்டுமல்ல, பங்குதாரர்கள் 2015 இற்கு முன் ஆட்சி செய்த முன்னாள் ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும் இதில் பெருமளவு பங்கு உண்டு. யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டைப் பெருமளவு கடன் சுமைக்குள் தள்ளி, போக்குவரத்துத் துறையில் வீதி, துறைமுகம், விமான நிலையம் போன்ற அபிவிருத்திகளைத் தாண்டி இவரின் ஆட்சியில் தோன்றியிருந்த அரச ஊழல், அதிகாரத்துறை மோசடிகள், நாட்டின் சட்டத்தை கையில் எடுத்து நீதித் துறையின் மீதான முறையற்ற அதிகாரம், எண்ணிலடங்காத மனித உரிமை மீறல்கள், கடத்தல்கள், ஊடகவியலாளர்களை அச்சுறுத்தல், காணாமல் ஆக்குதல் போன்ற பெரும் பட்டியல் ஒன்றையே குறிப்பிடலாம்.

எனவேதான் தோற்கடிக்க முடியாத தலைவர் என்று கூறப்பட்ட ராஜபக்ஷ அவர்கள் 2015 இல் தோற்கடிக்கப்பட்டார். தலைமைத்துவ வெறியும் அதிகாரத்தின் மீது கொண்ட ஆசையும் ஓய்வெடுக்க வேண்டிய வயதில் மீண்டும் மீண்டும் இந்த ஆட்சியில் இவரின் முயற்சி [illegible] மற்ற அரசியல் தலைவர் என்ற பட்டத்தையே நாட்டு மக்கள் இவருக்கு வழங்கியுள்ளனர். ஆனால் கட்சியையையும் தனி மனிதர்களை தெய்வமாக நோக்கும் பாமர மக்கள் இன்னும் இவரை விரும்புவதை வைத்து நாட்டு மக்களின் ஏக தலைவனாக தன்னை நினைத்துச் செயற்படுகிறார்.

இவ்வாறே முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்களை நாம் பார்த்தோமானால், இவர் அரசியலில் பிரசாரம் சார்ந்த ஒரு நேர்மையான அரசியில் தலைவராக நோக்கப்பட்டார். இதனால் Mr. Clean என்ற புனைப்பெயராலும் கடந்த காலத்தில் அழைக்கப்பட்டார். ஆனால் அவரின் அதிகாரத்தின் மீதான மோகம் சாகும்வரை தான் ஐ.தே.க.வின் தலைவராகவும் நாட்டின் உச்ச தலைமைத்துவத்திலும் இருக்க வேண்டும் என்ற ஒரு ஆசை இவரை ஒரு ஜனநாயக விரோதியாக மக்கள் பார்க்கின்றனர். கட்சிக்குள்ளும் நாட்டின் பெரும்பான்மையான ஐ.தே.க. ஆதரவாளர்களும் இவரின் தலைமையை [illegible] இறுக்கமான யாப்பினை வைத்துக் கொண்டு தொடர்ந்தும் தலைவராக இருக்கின்றார்.

நல்லாட்சியின் அரசியலில் இவரின் காலத்தில் நடைபெற்ற மத்திய வங்கி பிணைமுறி ஊழல் அதனை வெளிக்கொணர இவர் மேற்கொண்ட தடைகளும் பிணைமுறி விவகாரத்தில் இவர் ஒரு நேர்மையான தலைவராக உண்மையான குற்றவாளிகளைத் தண்டிக்கத் தவறியதோடு இக்குற்றத்தை மறைக்க முயன்றவராகவே மக்களால் நோக்கப்படுகின்றார்.

இதே காலப்பகுதியில் இவரின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்ட போது அதனை எதிர்கொண்ட விதம் இவர் ஓர் நேர்மையற்ற தலைவர் என்பதற்கு சிறந்த எடுத்துக் காட்டு. இதே போன்று ஒரு கட்சியின் தலைவராக இருந்துகொண்டு பல்வேறு தேர்தல்களிலும் தோல்வியுற்ற பின்பும் இறுதியாக நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் ஆட்சியில் இருந்து கொண்டே தோல்வியுற்ற தலைவராக இருந்து அடுத்த தலைமுறைக்கு இடம்கொடாமல் இருக்கும் வெட்கமற்ற பலமற்ற தலைவராக ரணில் விக்ரமசிங்க காணப்படுகிறார். ஐக்கிய தேசியக் கட்சிக்கு உள்ள நிலையான மக்கள் ஆதரவை வைத்துக் கொண்டு தனது ஆதரவாகக் காட்டமுனையும் வெறுக்கத்தக்க தலைவராக இலங்கை மக்களால் பார்க்கப்படுகின்றார்.

எனவே முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷவும் சரி இன்னாள் ஜனாதிபதியான மைத்திரிபாலவும் சரி முன்னாள் பிரதமரான ரணில் விக்ரமசிங்கவும் சரி இலங்கை அரசியலில் எந்த வகையிலும் பொறுத்தமற்ற தலைவராகவே நேர்மையான மக்களும் நாட்டை நேசிக்கும் மக்களும் கருதுகின்றனர். ஒட்டுமொத்த நாட்டு மக்களும் விரும்புவது நீங்கள் அடுத்த தலைமுறைக்கு அதிகாரத்தை கொடுத்து விட்டு ஒதுங்கிவிடுங்கள் என்பதாகும். இதை இவர்கள் நிறைவேற்றுவார்களா?


இத்தகைய மோசமான தலைவர்களை எதிர்கொண்ட நேர்மையான இலங்கை மக்கள் தமது நாட்டை ஆட்சிசெய்யும் ஒரு நல்ல தலைமை உருவாகாதா என்ற ஏக்கத்தில் உள்ளனர். இத்தகைய சூழலில் ஓரளவு எதிர்பார்க்கப்படும் கட்சியாக அல்லது மூன்றாவது சக்தியாக ஜேவிபியும் அதன் தலைவருமான அனுரகுமார திஸாநாயக்க அவர்கள். ஜேவிபி ஒரு உண்மையை விளங்கி வைத்திருக்கின்றனர். தமது பிரசாரக் கூட்டங்களுக்கு வருகின்ற மக்கள் அளவிற்கு தமக்கு மக்கள் வாக்களிப்பதில்லை என்று.

இங்குதான் ஜேவிபி தான் பேசும் களத்திலிருந்து செயற் களத்திற்கு வர வேண்டும். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்களின் ஆட்சிக் காலத்தில் 20 இற்கும் மேற்பட்ட பா.உறுப்பினர்களை வைத்துக் கொண்ட மூன்றாவது சக்தியாக இருந்தும் செயற்களத்தில் சாதித்துக் காட்டவில்லை என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் இன்றும் இருக்கிறது. எனவே ஜேவிபி அடுத்த சக்திகளையும் இணைத்துச் செல்லும் விரிவான ஒரு அணி பற்றியும் மோசமான அரசியல் கலாசாரத்திற்கு உட்படும் நேர்மையான அரசியல் செயற்பாட்டிற்கான புதிய வியூகங்களை அமைத்து மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முனைய வேண்டும். இல்லாவிட்டால் காலத்தில் மக்கள் ஜேவிபியை ஓரம் கட்டும் நாள் வெகுதூரமில்லை. (பக்.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமனிதனது அரசியல், சிவில் உரிமைகளை பாதுகாப்பது இஸ்லாத்தின் அடிப்படையாகும்

• எம்.என்.இக்ராம்



ஒரு மனிதன் தான் கொண்டுள்ள சிந்தனைகள், கொள்கைகளின் அடியாக உலகை, வாழ்வை, மனிதனைப் பார்ப்பதற்கான பூரண சுதந்திரம் பெற்றவன். இது அல்லாஹ் மனிதனுக்குக் கொடுத்த அடிப்படையான சுதந்திரம், உரிமை.

''மார்க்கத்தில் நிர்ப்பந்தமில்லை''- (ஸூறா பகரா)

இங்கு மார்க்கம் என்பது ஒருவனது வாழ்க்கை குறித்த வழிமுறை, அவன் தனது தனிப்பட்ட வாழ்வில், மத வாழ்வில், சமூக வாழ்வில், பொருளாதார வாழ்வில், குடும்ப வாழ்வில், அரசியல் வாழ்வில் எத்தகைய சிந்தனைப் போக்கையும், எத்தகைய நடைமுறையையும் கொண்டிருப்பதற்கான பூரண சுதந்திரம் பெற்றவன்.

இவற்றில் ஒருவர் தான் பின்பற்றுகின்ற மார்க்கம், வழிமுறை எவ்வளவுதான் சரியானது என தான் கருதினாலும் அடுத்தவனை தனது சிந்தனையை, வழிமுறையை ஏற்றுக் கொள்ளுமாறு நிர்ப்பந்திக்க முடியாது.

அதே போன்று அடுத்தவன் பின்பற்றுகின்ற சிந்தனை, வழிமுறை எவ்வளவுதான் பிழை என்றிருந்தாலும் அதனை விட்டுவிடுமாறு அவனை நிர்ப்பந்திக்கவோ, அதனைக் காரணம் காட்டி அவனுக்கான மனிதன் என்றவகையிலான அடிப்படை உரிமைகளை, கடமைகளை மறுப்பதற்கோ எந்த உரிமையும் யாருக்கும் கிடையாது.

இது இந்த உலகில் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் படைத்தவன் கொடுத்த அடிப்படை மனித உரிமை, கண்ணியம், கௌரவம். அவன்தான் கைக்கொள்கின்ற, பின்பற்றுகின்ற சிந்தனைக்கு, வழிமுறைக்கு பூரணமான பொறுப்புடைமையானவன். அது குறித்து தன்னைப் படைத்தவனுக்கு அவன் வகை சொல்ல வேண்டும் என்பது அவனுக்குரிய விடயம்.

இந்தப் பின்னணியில் ஒரு குடும்பம், ஒரு சமூகம், ஒரு இனம், ஒரு கட்சி இப்படித் தான் சரியெனக் கருதுகின்ற ஒன்றை அடுத்த குடும்பத்துக்கு, சமூகத்துக்கு, இனத்துக்கு, கட்சிக்கு பின்பற்றுமாறு நிர்ப்பந்திக்க முடியாது.

அதே போன்று ஒரு குடும்பம், ஒரு சமூகம், ஒரு இனம், ஒரு கட்சி கொண்டுள்ள ஒரு சிந்தனை பிழை எனத் தான் கருதுவதால் அதை அவர்கள் விட வேண்டும், அப்படி அவர்கள் அதனை விடாவிட்டால் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய அடிப்படையான விடயங்களை, உரிமைகளை தான் கொடுக்க மாட்டேன் என்று சொல்வதற்கு எந்த ஒரு தனிமனிதனுக்கோ, குடும்பத்துக்கோ, சமூகத்துக்கோ, இனத்துக்கோ, கட்சிக்கோ எந்த உரிமையும் கிடையாது.

இதே நேரம் தான் சரியெனக் கருதுபவற்றை அனைவருக்கும் எத்திவைப்பதற்கும், தான் பிழையெனக் கருதுபவற்றை அனைவருக்கும் பிழையென பிரச்சாரம் செய்வதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. அதுவும் அவனது அடிப்படை உரிமை சார்ந்தது.

இந்த இரண்டு நிலையையும் தாண்டி அடுத்தவனை நிர்ப்பந்திப்பது, அவன் தன்னைப் போன்று இல்லை என்பதற்காக அடுத்தவனது உரிமைகளை மறுப்பது என்பது ஒரு தீவிரவாதமாகும், பயங்கரவாதமாகும். அடிப்படையில் இப்படியானவர்கள் மனித இனத்தின் எதிரிகளாவர். இவர்கள்தான் சர்வதிகாரர்களாக, அநியாயக்காரர்களாக, தீவிரவாதிகளாக அடையாளப்படுத்தப்பட வேண்டியவர்கள். இவர்களுக்கெதிராகப் போராடுவதும், இவர்களுக்கெதிராக செயற்படுவதும் ஒவ்வொருவருக்குமான கடமையாகும்.

இஸ்லாம் இந்த உலகில் நிலைநாட்ட விரும்புகின்ற அடிப்படையான சுதந்திரம் இதுதான். யாரும் எந்தக் கொள்கையையும் கொண்டிருக்கின்ற, பிரச்சாரம் செய்கின்ற உரிமை எல்லோருக்கும் இருக்க வேண்டும். இதில் யாரும் அடுத்தவர் மீது அத்துமீறலாகாது. இந்த நிலைதான் உலக சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கான அடிப்படைச் சூழமைவாகும்.

இந்தப் பின்னணியிலிருந்து கொண்டு, இந்த நாட்டின் ஜனாதிபதியோ, ஒரு கட்சியோ, ஒரு இனமோ இன்னொருவர் நியோ லிபரல்வாதி, இன்னொருவர் ஒரு இஸ்லாமியவாதி, இன்னொருவர் ஒரு கம்யூனிஸவாதி... எனவே, அவர் இந்த நாட்டுக்குப் பொருத்தமற்றவர் என்று கூறும் எந்த உரிமையும் அற்றவர்கள். அதனைக் காரணம் காட்டி ஒருவரது அரசியல் உரிமையை, சிவில் உரிமையைப் பறிப்பது பயங்கரமான குற்றமாகும்.

இன்று எமது நாட்டின் ஜனாதிபதி, ரணில் விக்ரமசிங்க ஒரு நியோ லிபரல்வாதி என்பதற்காகத்தான் அவரை பிரதமர் பதவியிலிருந்து நீக்கியிருந்தால், அவரை மீண்டும் பிரதமராக்க முடியாது என்று சொன்னால் அது ரணில் விக்ரமசிங்கவிற்கான அரசியல் உரிமையை மறுப்பதாகத்தான் நாம் கொள்ள வேண்டும். அதனை நாம் இந்தப் பின்னணியிலிருந்துதான் பார்க்க வேண்டும்.

அப்படி உரிமை மறுக்கப்படும் மனிதன் யாராக இருந்தாலும் அவனது உரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்காக உழைப்பது மனிதன் என்ற வகையில் எமக்குள்ள தார்மீகக் கடமையாகும். இறைத் தூதர் 'ஹில்புல் புழூல்' என்ற உரிமை மீறலுக்கெதிராக செய்து கொண்ட பொது உடன்படிக்கை குறித்து பின்னாளில் சிலாகித்தமை எமக்கு இது குறித்த முன்மாதிரியாகும்.

அடுத்து, இப்படியான தீவிரவாத, அடிப்படைவாத சிந்தனை கொண்டவர்களை, நிலைப்பாடுகள் கொண்டவர்களை நாம் சரியாக இனம் கண்டுகொள்ள வேண்டும். அடிப்படையில் இவர்கள் ஆபத்தானவர்கள், ஒரு சமூகம் என்ற வகையில் மாத்திரமல்ல, மனிதன் என்ற வகையிலேயே ஆபத்தானவர்கள். இன்று ஒரு நியோ லிபரல் வாதிக்கு மறுக்கப்படும் இந்த அரசியல் உரிமை, நாளை ஒரு இஸ்லாமியவாதியான எனக்கு மறுக்கப்படாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? ஒரு கிறிஸ்தவரான இன்னொருவருக்கு, ஒரு தமிழரான இன்னொருவருக்கு, ஒரு கம்யூனிஸ்டான இன்னொருவருக்கு... மறுக்கப்படாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?!

எனவே, நிலமையின் பாரதூரத்தை, சிந்தனைப் போக்குகளின் பாரதூரத்தை நாம் சரியாகக் கணிப்பில் எடுக்க வேண்டும். இந்த நாட்டில் இஸ்லாத்துக்காக உழைத்தல் என்பதன் அடிநாதமான அம்சம் இந்த இடத்தில் தொடர்புபட்டு இருக்கின்றது. அதாவது இஸ்லாம் இந்த உலகில் அடிப்படையில் செய்த பணி ஒவ்வொரு தனிமனிதனதும் சிந்தனைச் சுதந்திரத்தை, கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக உழைத்ததாகும். இந்த அடிப்படை உரிமைகளைப் பறிக்கின்ற, அதன் மீது அத்துமீறுகின்ற விடயங்களுக்கு எதிராகத்தான் அடிப்படையில் இஸ்லாம் வரலாறு நெடுகிலும் போராடி வந்திருக்கின்றது.

இஸ்லாம் என்பது மனிதன் மனிதனுக்கு அடிமைப்படும் நிலையிலிருந்து அவனை விடுதலை செய்ய வந்த மார்க்கம், மதங்களின் அநீதிகளிலிருந்து நீதி பெற்றுக் கொடுக்க வந்த மார்க்கம்.

இந்த வகையில், இந்த நாட்டில் இருக்கின்ற இஸ்லாத்தை தனது வாழ்வின் சிந்தனையாகக் கொண்ட ஒவ்வொரு தனிமனிதனுக்கும் நாடு எதிர்நோக்கியிருக்கும் இந்த சூழலில் தட்டிக் கழிக்க முடியாத மகத்தான ஒரு கடமை இருக்கின்றது.

# ஷரீஆவை நடைமுறைப்படுத்தலும் இலங்கை நிலமும்

• ரிஷாத் நஜிமுடீன் (நளீமி)




அரபு வசந்தத்தை தொடர்ந்து எகிப்து, டியூனேசியா போன்ற நாடுகளில் இஸ்லாமியவாதிகள் ஆட்சியமைக்கும் நிலைக்கு வந்தடைந்தனர். அவர்கள் ஆட்சியேறிய போது ஷரீஆவை நடைமுறைப்படுத்தல் பற்றிய கருத்தாடல்கள் மிக அதிகமாகப் பேசப்பட்டன. மதுபானத்தைத் தடை செய்தல், விபச்சார விடுதிகளை மூடுதல், வட்டி வங்கிகளுக்குத் தடைவிதித்தல் போன்றவற்றை உடனே நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் எனச் சிலர் கோஷம் எழுப்பினர்.

ஆட்சியேறிய இஸ்லாமியவாதிகள் ஒரு வகையான குழப்ப நிலைக்கு ஆளாகின்றார்கள். மேற்கூறிய சட்டங்களை உடனே நடைமுறைப்படுத்துவதா அல்லது தம்மைத் தேர்ந்தெடுத்த மக்களது அபிலாஷைகளையும் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை கொடுப்பதா என்ற பிரச்சினை அவர்களைச் சூழ்ந்து கொண்ட மிக முக்கிய பிரச்சினைகளில் ஒன்று. இன்னொரு வகையில் இதனைக் கூறுவதென்றால் ஷரீஆவை முற்படுத்துவதா அல்லது சமூக நலனை முற்படுத்துவதா என இன்னும் சிலர் பகிரங்கமாகவே விவாதித்தனர்.

இவ்விவாதம் அடிப்படையில் பிழையானது. ஷரீஆவும் சமூக நலனும் ஒரு போதும் முரண்பட முடியாது. அவ்வாறு முரண்பட்டால் அது சமூகநலனாக இருக்காது. அல்லது ஷரீஆவாக இருக்காது. பின்வரும் சட்ட அடிப்படை விதிகள் இவ்வுண்மையை விளக்குகிறது.

- ஷரீஆ, நலவுகளைப் பெறுதலும் தீங்குகளைத் தவிர்த்தலுமாகும்
- ஷரீஆ, நலவுகளைப் பெற்று அதனை வளர்க்கிறது. தீங்குகளைத் தவிர்த்து அதனைக் குறைக்கிறது
- ஷரீஆ, இம்மை, மறுமை இரு வாழ்விலும் அடியானுக்கு நலவுகளைப் பெற்றுத் தருகிறது
- ஷரீஆவின் அடிப்படை, மனித நலவுகளை இலக்காகக் கொண்டது. அதன் அனைத்துப் பகுதிகளும் நீதியானது, இரக்கம் மற்றும் நலவைக் கொண்டது
- சமூக நலன் இருக்கும் இடங்களிலெல்லாம் ஷரீஆ இருக்கிறது. ஷரீஆ இருக்கும் இடங்களிலெல்லாம் சமூக நலன் இருக்கிறது.

இதுபோன்ற நூற்றுக்கணக்கான விதிகள் சமூக நலனும் ஷரீஆவும் முரண்பட முடியாது என்பதை வலியுறுத்துகின்றன. ஷரீஆ பற்றிய பிழையான புரிதலே எம்மைக் குழப்பத்தில் ஆழ்த்துகின்றது. ஷரீஆ என்ற சொல்லை ஆரம்ப காலம் தொடக்கம் இஸ்லாமிய அறிஞர்கள் விரிந்த கருத்தில் பயன்படுத்தி வந்தனர். இமாம்களான குர்துபீ, அபூபக்ர் ஆஜுரி, ராகிப் அஸ்பஹானி போன்றவர்களது 'ஷரீஆ' என்ற சொல்லுக்கான வரைவிலக்கணத்தைப் பார்க்கும்போது மார்க்கத்தின் அனைத்துப் பகுதிகளையும் அது குறித்து நிற்கிறது. உதாரணமாகப் பின்வரும் பகுதிகளைக் குறிப்பிடலாம்:

- அல்லாஹ்வை ஈமான் கொள்ளல், அவனுக்குப் பயப்படுதல், அவன் மீது தவக்குல் வைத்தல், அவனுக்கு வெட்கப்படுதல்
- அல்லாஹ்வை வணங்குதல், அவனுக்கு நன்றி செலுத்துதல், அவனை ஞாபகப்படுத்தல்
- நீதி, நன்மை செய்தல், உண்மை, இரக்கம், பணிவு போன்ற பண்பாடுகள்
- பொய், புறம், குரோதம், ... போன்ற கெட்ட பண்புகளைத் தவிர்ந்திருத்தல்
- அறிவைத் தேடுதல், அதற்காகப் பாடுபடல், செலவு செய்தல், பரப்புதல்
- திருமணம் முடித்தல், நல்ல குடும்ப வாழ்க்கையை அமைத்துக்கொள்ளல்
- மனித கண்ணியத்தைப் பாதுகாத்தல், அநீதிக்கு எதிராக இருத்தல்
- நன்மையை ஏவுதல், தீமையைத் தடுத்தல்
- விலங்குகள், மற்றும் பிரபஞ்சப் பொருட்களுக்குச் சேதம் விளைவிப்பதைத் தடுத்தல், அவற்றைப் பாதுகாத்தல், கருணையோடு நடத்தல்...

இவையனைத்தும் ஷரீஆவில் உள்ளடங்குகின்றன. பாடசாலை, வியாபார நிலையம், வைத்தியசாலை போன்ற இடங்களில் ஒவ்வொருவரும் தமக்குரிய பணியைச் செய்யாது குறைபாடு விடுவது ஷரீஆவைப் புறக்கணிப்பதாக அமைகிறது.

ஆரம்ப காலத்தில் இவ்வாறு விரிவான கருத்தில் பயன்படுத்தப்பட்ட இச்சொல் காலப்போக்கில் கலைகள் விருத்தியடையவே குறிப்பிட்டதொரு விடயத்தை சுட்டிக் காட்டும் கலைச் சொல்லாக அது பயன்படுத்தப்பட்டது. ஸூபீக்கள் ஹகீகத், ஷரீஅத் எனப் பிரித்துப் பயன்படுத்தினர். ... சட்டங்களுக்கு ஷரீஆ என்ற சொல்லைப் பயன்படுத்தினர். நம்பிக்கை சார்ந்த பகுதிகளை அதனுள் அவர்கள் உள்ளடக்கவில்லை. நவீன காலத்தில் அதன் பிரயோகம் வேறொரு கருத்தில் சில அறிஞர்களால் பயன்படுத்தப்பட்டது. உதாரணமாக இப்னு ஆஷுர் போன்றவர்கள் சட்டயாப்பைக் குறிக்க அச்சொல்லைப் பயன்படுத்தினர்.

இப்பிரயோக ஒழுங்கை சரியாகப் புரிந்துகொள்ளாமை எமக்குள் பல சந்தேகங்களையும் கேள்விகளையும் ஏற்படுத்தியுள்ளது. கலாநிதி ரய்ஸூனி மற்றும் கர்ளாவி போன்றவர்கள் ஆரம்பகால பாவனைமுறையில் அச்சொல் பயன்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றனர். ஆரம்பகால அறிஞர்கள் பாவித்தது போன்று ஷரீஆ என்ற சொல்லை இஸ்லாத்தின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கும் முழுமையான ஒன்றாகப் புரிந்து கொள்வது இலங்கையைப் பொறுத்தவரை மிக முக்கியமானது.

அவ்வகையில் பார்த்தால் ஷரீஆவின் நியாயமானதொரு பகுதி நடைமுறையில் இருக்கிறது அல்லது நடைமுறைப்படுத்துவது மிகவும் சாத்தியமானது என்ற முடிவுக்கு நாம் வருகிறோம். போதைப் பொருள் பாவனைக்கெதிரான வேலைத்திட்டம் என்பது ஷரீஆவின் மிக முக்கிய பகுதிகளில் ஒன்று. கல்விக்கூடங்களையும் பல்கலைக்கழகங்களையும் வளர்த்தெடுப்பது ஷரீஆவின் மிக முக்கிய பகுதிகள். இவ்வகைப் புரிதலினூடாக முஸ்லிம்கள் பயிற்றுவிக்கப்படுவது மிக அவசியமானது.

எம்மைப் பொறுத்தவரை இன்னொரு பிரச்சினை இருக்கிறது. பாரம்பரியமாக கண்மூடித்தனமாகப் பின்பற்றி வந்த சட்டங்களை முறையாகப் புரிந்து கொள்ளவும் அதன் முடிவுகளை ஏற்றுக்கொள்ளவும் நாம் தயாராக இல்லை. ஷரீஆவின் ஒரு சிறு பகுதியான குற்றவியல் தண்டனைகள் இதற்குச் சிறந்த உதாரணம். முர்தத்தைக் கொலை செய்தல், திருமணம் முடித்தவர்கள் விபச்சாரத்தில் ஈடுபட்டால் கல்லடித்துக் கொல்லல் போன்ற சட்டங்கள் தொடர்பாக குர்ஆன், ஸுன்னா, ஷரீஆவின் அடிப்படை இலக்குகள் என்பவற்றை அடிப்படையாக வைத்து மீளாய்வுகள் செய்யப்படுகின்றன. ரய்ஸூனி, தாரிக் ரமழான், ஜாஸிர் அவ்தா, கர்ளாவி போன்றவர்களது கருத்துக்கள் முக்கியம் பெறுகின்றன. அவர்களது கருத்துக்களை இங்கு விரிவாக விளக்குவது சாத்தியமற்றது.

ஷரீஆவை நடைமுறைக்குக் கொண்டு வருவது யார் என்ற கேள்வி அடுத்து தோற்றம் பெறுகிறது. ஷரீஆவை விரிந்த கருத்தில் பார்க்கும் போது அதன் பெரும்பாலான பகுதிகளை முஸ்லிம்கள் பெரும்பான்மையாக அல்லது சிறுபான்மையாக இருக்கும் நிலங்களில் நடைமுறைப்படுத்துவது சாத்தியமானது. குற்றவியல் போன்ற ஒரு சில பகுதிகள் இங்கு சிக்கலானது. அச்சட்டங்களை ஆட்சிக்கு வருபவர் சட்டமாக்க வேண்டுமா அல்லது நாட்டு மக்களில் பெரும்பான்மையானவர்களது அங்கீகாரத்துடன் நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமா என்பது மிக விரிவான ஆய்வை வேண்டிநிற்கும் பகுதி.

சுருக்கமாகக் கூறுவதாயின் இஸ்லாம் எக்கட்டத்திலும் யாரையும் நிர்ப்பந்திப்பதில்லை. நம்பிக்கைப் பகுதிகளில் கூட நிர்ப்பந்தம் இல்லை என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம். ஷரீஆ என்று வருகின்ற போது மக்களது விருப்பமின்றி நிர்ப்பந்த நிலையில் சட்டமொன்றை அமுலுக்குக் கொண்டுவருவதை அது ஒருபோதும் விரும்புவதாக இல்லை.

இஸ்லாம் கூறும் சட்டங்கள் கொண்டிருக்கும் மனித நலவுகளை நாட்டு மக்களுக்குக் கற்பிப்பதனூடாக மக்களாக அச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான கோரிக்கையை முன்வைக்கும் நிலைதான் ஆரோக்கியமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகாமையாளர் என்ற வகையில் அதிபர்களின் வகிபாகம்

தலைமைத்துவம், முகாமைத்துவம், நிருவாகம் ஆகிய சொற்கள் மூன்றும் ஒரே வகையானவையா அல்லது வெவ்வேறானவையா என்ற கேள்வி தலைமைத்துவம் பற்றிய ஆய்வுகளில் முக்கியத்துவம் பெற்று வருகின்றது. இவற்றுக்கிடையில் நெருக்கமான தொடர்புகள் உள்ளன. எனினும், மூன்றிற்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளதை ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.

தலைவர்கள் என்போர் தம்மைப் பின்பற்றும் மக்களின் நடத்தைகளில் செல்வாக்குச் செலுத்துகின்றனர். மக்களுடன் இணைந்து பணியாற்றி, தாம் சார்ந்துள்ள நிறுவனத்தின் இலக்குகளை அடைய முயற்சிக்கின்றனர். அவ்வாறு நிறுவன இலக்குகளை அடையும் முயற்சியில் தமது குழுவினரை ஊக்கப்படுத்துகின்றனர். இத்தகைய முனைப்புகள் முகாமையாளருக்கும் பொருந்தி வரும். முகாமையாளர்களும் தலைவர்களைப் போல நிறுவன இலக்குகளை அடைவதற்கு தமது பணியாட்களை ஊக்கப்படுத்துகின்றனர். அந்தவகையில் அவர்களின் நடத்தைகளில் செல்வாக்குச் செலுத்துகின்றனர்.

எவ்வாறாயினும் தலைமைத்துவம் முகாமைத்துவம் இரண்டும் ஒன்றுதான் எனக் கூற முடியாது. தலைமைத்துவம் குறித்த சிந்தனை ஆதி கிரேக்க காலத்திலிருந்து வளர்ச்சியுற்று வந்துள்ளது. சோக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டோடில் உள்ளிட்டு தொடர்ந்து வந்த மெய்யியலாளர்கள் பலரும் தலைமைத்துவம் குறித்து ஆராய்ந்துள்ளனர்.

முகாமைத்துவம் முதலாளித்துவத்தின் தூண்களில் ஒன்று எனக் கூறுவோர் உளர். நவீன முதலாளித்துவம் கணக்கியல் மற்றும் முகாமைத்துவம் ஆகிய இரு தூண்கள் மீது எழுந்து நிற்கின்றது. முகாமைத்துவம் எனும் எண்ணக்கரு 20 ஆம் நூற்றாண்டிலேயே தோற்றம் பெற்றது. இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் கைத்தொழில் வளர்ச்சியின் விளைவாக நிறுவனங்கள் தோற்றம் பெற்றன. அந் நிறுவனங்களின் பிரச்சினைகளைக் குறைத்து, அவற்றை விளைதிறனுடனும் வினைத்திறனுடனும் வழிநடாத்தி, நிறுவன இலக்குகளை அடைவதற்கு முகாமைத்துவம் தேவைப்பட்டது.

இன்று முகாமைத்துவம் ஊடுருவாத துறைகளே இல்லை எனக் கூறுமளவு அறிகைப் புலமாகவும் பிரயோக விஞ்ஞானமாகவும் மாற்றம் பெற்றுள்ளது. நிறுவன முகாமை, அறிவு முகாமை, நேர முகாமை, மன எழுச்சிசார் முகாமை, சமூக முகாமை, புலக்காட்சி முகாமை என முகாமைத்துவம் கோட்பாட்டு ரீதியிலும் பிரயோக ரீதியிலும் வியாபித்துச் செல்கின்றது.

முகாமைத்துவத்திற்கு ஒற்றைத் தன்மை வாய்ந்த வரைவிலக்கணமொன்றைக் கண்டடைவது ஆய்வாளர்களுக்கு முன்னாலுள்ள மிகப் பாரிய சவாலாகும். நிறுவனங்களின் வளங்களைத் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், பணியாட்களை நியமித்தல், வழிப்படுத்தல், இணைப்பாக்கம் செய்தல், கட்டுப்படுத்தல் முதலிய குறிப்பான பணிகளை முன்னெடுப்பதே முகாமைத்துவம் என ஹென்ரி பயோல் (1916) குறிப்பிடுகின்றார்.

இதேவேளை, லூசி என்பவர் ''ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட நோக்கங்களை அடையும் வகையில் மனித வளங்கள், பொருளாதார வளங்கள் என்பவற்றைத் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், ஒருங்கிணைத்தல், கட்டுப்படுத்தல் மூலமாக நிறுவனமொன்றை நெறிப்படுத்தும் செயன்முறை'' என வரைவிலக்கணப்படுத்துகின்றார்.

நிறுவனத்தின் வெளிப்படுத்தப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்காக அந்நிறுவனத்தின் மனித வளங்களையும் ஏனைய வளங்களையும் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத்தல் ஆகியனவே முகாமைத்துவம் என்று ஜேம்ஸ் ஸ்டீவர் எனும் முகாமைத்துவ ஆய்வாளர் குறிப்பிடுகிறார்.

மனித நடத்தையை நெறிப்படுத்தும் கலைதான் உண்மையில் முகாமைத்துவம் எனப்படுகின்றது. தலைமைத்துவத்திற்கும் முகாமைத்துவத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் குறித்தும் ஆய்வுகள் இடம்பெற்றுள்ளன. 1990 இல் கொட்டர் என்பவர் முகாமையாளர் நிறுவனங்களில் ஒழுங்குகளை ஏற்படுத்தி நாளாந்தப் பணிகளைக் கொண்டு நடாத்தும் அதேவேளை, தலைவர் எனப்படுபவர் நிறுவனத்தில் ஆக்கபூர்வமான மாற்றங்களை ஏற்படுத்தி, சூழலுடன் பொருத்தப்பாடு கொண்டு நிறுவனம் முன்னோக்கி நகர்வதற்கான செயற்பாடுகளை ஆழ்ந்த தரிசன நோக்குடன் செய்கின்றார் என கொட்டர் கூறுகிறார்.

எடுத்துக் காட்டாக, நிறுவனத்தின் நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தல் என்பதில் முகாமையாளரும் தலைவரும் எவ்வாறு செயல்படுகின்றனர் என்பதை அவர் வேறுபடுத்துகிறார். இதில் முகாமையாளர் திட்டமிடலையும் பாதீடு தயாரித்தலையும் மேற்கொள்கிறார். நிர்ணயிக்கப்பட்ட பெறுபேறுகளை அடைவதற்கான வழிமுறைகளையும் நேர சட்டகங்களையும் உருவாக்கி வளங்களைப் பகிர்கின்றார்.

தலைவரோ நிறுவனம் செல்ல வேண்டிய திசை வழியை நிர்ணயிக்கின்றார். அதற்கென ஒரு தரிசன நோக்கை விருத்தி செய்து அதனை அடைவதற்கான நீண்ட கால உத்திகளை வகுக்கின்றார். நிகழ்ச்சி நிரலை அடைவதற்கான ஒரு மனித வலையமைப்பை உருவாக்குவதில் முகாமையாளரும் தலைவரும் வேறுபடும் விதத்தை கொட்டர் விவரிக்கின்றார். அதன்படி, முகாமையாளர் நிறுவனத்தை ஒழுங்குபடுத்தி பணியாளரை நியமிக்கின்றார். பெறுபேறுகளை அடைவதற்கான கட்டமைப்பை ஏற்படுத்தி பணியாளர்களை நியமித்து அவர்களுக்கான அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் வரையறுத்து அவர்களை வழிநடாத்துவதற்கான கொள்கைகள், விதிமுறைகளை வகுக்கின்றார். அவற்றை மதிப்பீடு செய்வதற்கான முறைகளையும் ஏற்படுத்துகின்றார்.

தலைவரோ மக்களை ஒன்றிணைத்து தரிசன நோக்கினையும் அதனை அடைவதற்கான உத்திகளையும் விளங்கி, ஏற்று செயற்படக் கூடிய வகையில் பணியாளர்களின் பூரண ஒத்துழைப்பைப் பெறக் கூடிய தொடர்பாடல் முறையினை உருவாக்குகின்றார்.

திட்டங்களை நிறைவேற்றுதல் எனும் செயன்முறையில் முகாமையாளர் கட்டுப்படுத்தல், பிரச்சினையைத் தீர்த்தல் என்ற அணுகுமுறைகளைக் கையாள்கின்றார். பெறுபேறுகளைக் கண்காணித்து ஏதாவது வேறுபாடுகள் இருப்பின் அவற்றைத் தீர்க்கும் வழிவகைகளை நடைமுறைப்படுத்துகின்றார்.

தலைவரோ ஊக்குவித்தல் எனும் அணுகுமுறையைக் கையாள்கிறார். அடிப்படை மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் நிறுவன மாற்றங்களுக்குத் தடையாக இருக்கக் கூடிய பிரதான அரசியல் மற்றும் பணித்துறை, வளம் சார்ந்த தடைகளை வெற்றி கொள்வதற்குப் பணியாளர்களை வலுப்படுத்துகின்றார்.

பெறுபேறுகளை அடைவதில் முகாமையாளர் சீராகச் செயற்படுகின்றார். வாடிக்கையாளர்கள், பங்குதாரர்களைத் திருப்தி செய்யக் கூடிய வகையில் பல்வேறு உரித்தாளர்களும் எதிர்பார்க்கும் பெறுபேறுகளை சீராக ஏற்படுத்துதல் அவரின் பிரதான அக்கறையாக உள்ளது. தலைவரோ பயனுள்ள மாற்றங்களை ஏற்படுத்துவதில் கவனமாக இருப்பார். மிகவும் பயனுள்ள வகையில் நிறுவனத்தை முன்தள்ளக் கூடிய மாற்றங்களை அறிமுகம் செய்வார். உதாரணமாக, புதிய அணுகுமுறைகள், புதிய உறவு முறைகள்.

கொட்டரின் ஆய்வின்படி நான்கு செயற்பாடுகளின் அடிப்படையில் முகாமைத்துவம் தலைமைத்துவத்திலிருந்து வேறுபடுவதை அறிய முடிகின்றது.

---

27

## மனநலம்

# கட்டிளமைப் பருவத்தினரின் மனச்சோர்வு

மனச்சோர்வு மனநிலையைச் சார்ந்த ஒரு அசாதாரண நிலை. காலப்போக்கில் அது உடல் தாக்கங்களையும் உண்டாக்கக் கூடியது. முன்பொரு காலத்தில் இதனை வருத்தம் தோய்ந்த நிலை (Melencoly) என்றனர். இன்று சிறு குழந்தைகள், கட்டிளமைப் பருவத்தினர், வயது வந்தோர், வயதானோர் என மனச் சோர்வு யாரையும் விட்டு வைக்கவில்லை.

கடந்த 20 ஆண்டுகளாக மனச் சோர்வுக்கு உட்படும் கட்டிளமைப் பருவத்தினரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. பதின்ம வயதினரிடம் காணப்படும் தீவிர மனச் சோர்வு சில நேரங்களில் ஒரு கோளாறாக அல்லது பிறழ்வாக அல்லது நோயாகப் பார்க்கப்படுகின்றது.

ஓர் இளைஞனிடம் மனச்சோர்வுக் கோளாறு காணப்படுமாயின், ஒரு குடும்பத்தில் அல்லது சமூக அமைப்பில், பள்ளிச் சூழலில், அயலவரிடத்தில் ஏதோ ஒரு தப்பு இருக்கிறது என்பதற்கான அறிகுறி யாகவே அது பார்க்கப்பட வேண்டும். பிலிப் கிரஹாம் மற்றும் கரேல் ஹியூஸ் ஆகியோர் மனச்சோர்வை உடல் நலக் கோளாறாக அல்லது மருத்துவப் பிரச்சினையாகப் பார்ப்பதை விட, சமூகம், கல்வி, குடும்பம் சார்ந்த அணுகுமுறையில் பார்ப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்கின்றனர். வளரிளம், பதின்ம, கட்டிளமை பருவத்தினரிடையே ஏற்படும் மனச்சோர்வுக் கோளாறின் அறிகுறிகள் பின்வருமாறு இனங் காணப்படுகின்றன.



### 1. துயரம்/மகிழ்ச்சியற்ற நிலை:

பல வாரங்கள் தொடர்ந்தும் துயரத்தையும் மன வருத்தத்தையும் வெளிக் காட்டுவர். சூழல் மாறினாலும் அவர்களது துயரம் மாற்ற மடையாது. தொடர்ந்தும் மகிழ்ச்சியற்ற மனநிலையை அவர்களிடம் அடையாளம் காண்பது அவ்வளது எளிதல்ல. சிலபோது இவர்களுக்கு வேறு பிரச்சினைகளும் இருக்கலாம். மனச்சோர்வுடன் பதற்றமும் சேர்ந்து வரலாம்.

### 2. அன்றாட செயல்களில் மகிழ்ச்சியற்றிருத்தல்:

இளம் வயதினருக்கு வழக்கமாக மகிழ்ச்சியளிக்கும் செயல்களைச் செய்ய வாய்ப்பிருந்தும் அவற்றில் பங்களிக்க விரும்பாமல் இருந்தால், நிச்சயம் அது மனச்சோர்வுக்கான அறிகுறியே. நண்பர்கள் அழைத்தாலும் அவர்களுடன் சேர்ந்திருப்பதற்கு இவர்கள் விரும்ப மாட்டார்கள்.

### 3. தூக்கப் பிரச்சினை:

தூக்கம் வராமை, இரவில் விழித்தல், மீண்டும் தூங்க இயலாமை, கா... வழக்கமாக எழும் நேரத்திற்கு முன்பே விழித்தல் போன்றவை இவர்களிடம் காணப்படும் பொதுவான பிரச்சினைகளாகும். மகிழ்ச்சியற்ற கலக்கமூட்டும் கனவுகள் வழக்கமாக இல்லாவிட்டாலும் அவ்வப் போது வரலாம். சிலர் தூக்கத்தில் நடக்கின்றனர்.

### 4. சாப்பிடுவதில் ஏற்படும் மாற்றங்கள்:

உணவில் நாட்டம் அற்றுப் போதல் மற்றொரு அறிகுறியாகும். அதேவேளை, மன நிம்மதிக்காக உணவை நாடி உடல் நலம் கெட்டுப் போகும் அளவுக்கு அளவுக்கதிகமாக உண்பதும் மனச் சோர்வின் அடையாளமே. எவ்வாறாயினும், ... அறிகுறியே.

வளரிளம் பருவப் பெண்களிடம் தமது உடலை மெல்லியதாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக உணவுக் கட்டுப் பாட்டைக் கடைப்பிடிக்கும் பழக்கம் இருக்கக் கூடும். இது மனச் சோர்வின் அறிகுறியல்ல. உணவைச் சுவைத்து இன்புறாத பெண்களிடம்தான் மனச்சோர்வு இருப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

### 5. தற்கொலைச் சிந்தனை/நடத்தை:

சந்தேகத்திற்கு இடமின்றி இதுதான் மனச்சோர்வின் மிகவும் கவலைப்பட வேண்டிய அறிகுறி. ஒவ்வொரு நாளும் 12 முதல் 16 வயது வரையானவர்களில் நூற்றில் ஒருவர் தற்கொலை செய்ய முயற்சிக்கின்றார். 1000 மாணவர்கள் உள்ள பள்ளியில் 10 மாணவர் களுக்கு தற்கொலை உணர்வு ஏற்படுவதாக அமெரிக்காவில் செய் யப்பட்ட ஆய்வு கூறுகிறது.

15-19 வயது வரையான குழுவினரில் ஏற்படும் மரணங்களில் உத்தேசமாக ஏழில் ஒன்று தற்கொலையால் நிகழ்கின்றது. இளம் வயதினரிடம் தற்கொலைச் சிந்தனை தொடர்ந்து காணப்படுகிறதா என்பதைக் கண்டறிவது எப்போதும் இலகுவானதல்ல. பதின் வயதினரிடம் இவ்வித சிந்தனைகள் இருக்கின்றனவா என்பது பொதுவாகப் பெற்றோருக்குத் தெரிவதில்லை. நம்பிக்கை இழந்து இருப் பதையும் வாழ்வதில் எந்தப் பயனும் இல்லை என்று பேசுவதையும் பெற்றோர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும்.

### 6. எதிர்மறை சிந்தனைகள்:

மனச் சோர்வினால் பாதிக்கப்பட்டவர்களிடம் எதிர்மறைத் தானி யங்கு சிந்தனைகள் (Negative Autometic Thoughts) இருக்கும் எனக் கருதப்படுகின்றது. இந்தச் சிந்தனைகள் மனக் கவலை, தன்னைப் பற்றி கேவலமாக நினைத்தல் போன்ற மகிழ்ச்சியற்ற உணர்வுகளோடு இணைந்திருப்பதால், அவை எதிர்மறையானவை. எந்தக் காரணமும் இன்றி, திடீரென அவை மூளையில் தோன்றுவதனால், தானியங்கும் சிந்தனைகள் எனப்படுகின்றன.

### 7. சுய குற்றச்சாட்டு:

மனச்சோர்வுற்ற இளம் பருவத்தினர், சில நேரங்களில் தமது குடும்பத்திற்கும் நண்பர்களுக்கும் பொதுவாக உலகத்திற்கும் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தாங்களே காரணம் என்று பொறுப் பேற்றுக் கொள்வார்கள். அவர்கள் எதையும் குறையின்றிச் செய் பவர்களாகவும், தங்களுகென்று உயர்வான தரத்தை நிர்ணயிப்பவர் களாகவும் இருக்கலாம்.

பெற்றோர்களுக்கிடையில் ஏற்படும் விவாதங்களுக்கும் அவர்கள் பிரிந்து வாழ்வதற்கும் சகோதரன் அல்லது சகோதரிக்கு நோய் ஏற்பட்டமைக்கும் தாங்களே காரணம் என்று தங்கள் மீது குறை கூறுவார்கள். அவர்கள் காரணம் அல்ல என்று அவர்களை நம்ப வைப்பது மிகவும் கடினமானது. பொதுவாக இச்சிந்தனைகள் பதின்ம வயதினரிடம் இருப்பதில்லை. ஆனால், சில சந்தர்ப்பங்களில் அது வந்து செல்கின்றது.

வாழ்க்கையில் மனஉளைச் சலைத் தரும் நிகழ்வுகளைப் பற் றிப் பேசுவது அவர்களிடம் இவ்வித மனநிலை இருப்பதை வெளிப் படுத்தும். மேலே சொன்ன அடையாளங்கள் குறித்து பெற்றோர் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். வேறு பிரச்சினைகளை மனச்சோர்வாக நாம் அடையாளம் காண வேண்டியதுமில்லை.

நீடித்த களைப்பும், ஆற்றலின்மையும் மனச்சோர்வின் முக்கிய மான வேறு சில அறிகுறிகளாகும். பாரிய இழப்புகள், ஏமாற்றங்கள், மனஅழுத்தங்கள், பாதுகாப்பற்ற நிலை, ஆளுமைப் பண்பு, சூழவுள்ளவர்களால் ஏற்படும் மனப் பாதிப்பு, மாபணுக்கள், குரோம சோம்கள் போன்ற பல்வேறு காரணிகளால் ஒருவர் மனச்சோர்வுக்கு உட்படலாம்.

இளைஞர்கள் மனச்சோர்வுக்கு உட்படுவது மிக ஆபத்தான விளைவுகளையே கொண்டு வரும். மட்டுமன்றி ஒரு சமூகத்தின் உற்பத்தித் திறனையும் செயலூக்கத்தையும் முடக்கி விடும். எனவே, சமூகத்தின் ஒவ்வொரு நிறுவனமும் உள ஆரோக்கியமுள்ள இளைஞர்களை வளப்படுத்துவதில் கவனம் குவித்தாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கமரை... (01 ஆம் பக்கத் தொடர்)

உஸ்மான் கவாஜாவின் சகோதரரான அர்சலான் கவாஜாவைக் கைது செய்துள்ள நியூ சவுத் வேல்ஸ் பொலிசார், இலங்கை மாணவனை தீவிரவாதியாக்குவதற்குத் திட்டமிட்டுச் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளனர். நீதித் துறையை தவறாக வழி நடத்தியமைக்காக பொதுநலவாயச் சட்டத்தின் கீழ் 39 வயதான அர்சலான் மீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது. அவுஸ்திரேலியரின் இந்தச் செய்கையால் கமர் நிஸாம்தீன் நான்கு வாரங்கள் சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் குற்றம் நிரூபிக்கப்படாமையினால் விடுதலை செய்யப்பட்டார்.

தனிப்பட்ட குரோதத்தின் காரணமாகவே கமர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதன் காரணமாக அவர் சிறைவாசம் அனுபவிக்க நேர்ந்ததையிட்டு அவருக்கு எமது வருத்தங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் என உதவி ஆணையாளர் மைக் வில்லிங்க் தெரிவித்துள்ளார். அர்சலான் கவாஜா பல்கலைக் கழகத்தில் கமர் நிஸாம்தீனுடைய மேற்பார்வையாளராகச் செயற்பட்டவர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## ஜனாதிபதியின்... (04 ஆம் பக்கத் தொடர்)

பாராளுமன்ற உறுப்பினர்களை பணம் கொடுத்து வாங்கும் நடவடிக்கைக்கு எதிராக கிளர்ந்தெழுந்த மக்கள் சக்திகளுக்கு அதனை இன்னும் நிறுத்த முடியாமல் போயுள்ளது. இன்னும் ஒரு சில நாட்களில் அவ்வெண்ணிக்கையை தம்வசப்படுத்திக் கொள்வதாகவும், தாம் பெற்றுக் கொண்ட அதிகாரத்தைக் கைவிடப் போவதில்லை என்றும், எதிர்வரும் தினங்களில் பா. உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் செயற்பாடு தொடரும் என்றும் மிக முக்கிய அமைச்சர் ஒருவர் தெரி வித்திருந்தார். (நவம்பர் 16ஆம் திகதி டெய்லி மிரர் பத்திரிகையில் எஸ்.பி. திசாநாயக்க)

இதைவிட மிகப் பாரதூரமான விடயம் என்னவெனில், நம்பிக்கையில்லாப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை மாற்றிக்கொள்ளுமாறு ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்திருப்பதும், நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்ட விதத்தை அவர் நிராகரித்திருப்பதுமாகும். இது தொடர்பில் ஓமல்பே சோபித தேரர் மிக முக்கிய சிபாரிசொன்றை முன்வைத்துள்ளார். ஜனாதிபதி பாராளுமன்றம் சென்று அந்நடவடிக்கையைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதே அது.

33 (அ) பிரிவின் பிரகாரம், பாராளுமன்றம் தொடர்பில் பொறுப்புடன் ஜனாதிபதி தனது அதிகாரத்தையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றுதல் வேண்டும் என்பதற்கு அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புடன் அந்தத் தீர்மானம் சிறப்பாக பொருந்துகிறது.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற பண்பாடற்ற நடத்தைகள் குறித்து பெரும்பாலான பிரஜைகள் தங்களது கவலையையும் வெறுப்பையும் தெரிவித்திருக்கின்ற நிலையில் தற்போது நியமிக்கப்பட்டிருக்கின்ற அரசாங்கத்தின் பேச்சாளர்களும் அவர்களுடைய ஆதரவாளர்களும் சபாநாயகருக்கு விரல் நீட்டி, அந்தச் சம்பவங்களுக்கு சபாநாயகரே பொறுப்புச் சொல்ல வேண்டும் என்பதாகக் குற்றம் சுமத்தி வருகின்றனர். அது மாத்திமல்லாமல், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் ஜீ.எல். பீரிஸ் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட வேண்டும் என பரிந்துரைத்துள்ளார். (நவம்பர் 20 டெய்லி மிரர்)

ஆனால் பாராளுமன்றில் சேதமாக்கப்பட்ட சொத்துகள் தொடர்பில் அவர் எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை. காட்டுமிராண்டித் தனத்தை பிரதிபலிப்பதும், பக்கச்சார்பாக நடந்துகொள்ளல் மற்றும் சபாநாயகருக்கு வழங்கப்பட வேண்டிய கௌரவத்தை கொடுக்காமல் இருப்பதும் மிகப் பயங்கரமான முன்மாதிரியாகும்.

## அரசியல் நெருக்கடியில்... (03 ஆம் பக்கத் தொடர்)

கோஷங்களை எழுப்பினர். கண்டிலைன் பள்ளிவாசலின் பெயர் பலகையையும் அவர்கள் சேதப்படுத்தினர்.

இந்தச் சம்பவம் குழம்பிப் போயிருந்த முஸ்லிம்களுக்கு அச்சமூட்டும் செய்தியாக அமைந்தது. மகிந்த ராஜபக்ஷவுடன் அதுபற்றி எதுவுமே பேசாத உலமா சபை சமூகத்தின் கண்டனத்துக்கு ஆளானது.

2018 அக்டோபர் 16 வெள்ளிக்கிழமை இட்டிபன்னே தம்மாலோக்க தேரர், கர்தினால் மல்கம் ரஞ்ஜித் ஜனாதிபதி சிறிசேனவை சந்தித்தனர். சகல அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய அரசியல் பேச்சுவார்த்தை மூலம் இன்றைய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதுதான் அவர்களின் சந்திப்புக்கான நோக்கம். அதில் தங்களால் முடிந்த பங்களிப்பை வழங்கவும் அவர்கள் தயாராக இருந்தனர்.

ஆனால் இந்தச் சந்திப்பிலும் உலமா சபை பங்கேற்கவில்லை. ஏன் இந்த பாரபட்சம் என்பதுதான் கேள்வி. இவ்வாறான செயற்பாடுகளில் முஸ்லிம் தரப்புக் குரலும் உள்வாங்கப்படும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டிய பொறுப்பு உலமா சபைக்குக் கிடையாதா?

இந்த அரசியல் மாற்றத்தின் பின் நான் கொழும்பில் உள்ள ஒரு பள்ளிவாசலுக்கு வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகைக்குச் சென்றேன். அங்கு ஆங்கிலத்தில் பிரசாரம் இடம்பெற்றது. ஆனால் அங்கு திரண்டிருந்தவர்களில் 90 வீதத்துக்கும் அதிகமானவர்கள் ஆங்கில மொழி பிரயோகத்துக்கு அப்பாற்பட்டவர்கள். வாழ்வு சொர்க்கம் நரகம் பற்றியதாகத் தான் அந்தப் போதனை அமைந்திருந்தது.

இந்த மாதிரி நேரத்தில் மக்களை அறிவுறுத்தும் வகையில் பேச வேண்டிய விடயங்களைத் தொட்டும் கூடப் பார்க்காமல் அமைந்திருந்த அந்த உரை பலரை ஆச்சரியம் அடைய வைத்தது. அந்த உலமாவின் அறிவீனம் தான் இதற்குக் காரணம். அவரது அறிவு ஆன்மிக சிந்தனைகளுக்குள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்தது. சமூகத்தைப் பாதிக்கும் நடப்பு விடயங்கள் பற்றிய தெளிவு அவருக்கு இல்லாமல் இருக்கலாம் என்று பலரும் பேசிக் கொண்டனர்.

இந்த நாட்டின் மூன்றாவது பெரிய சமூகம் என்ற வகையில் நாட்டில் நடக்கின்ற விடயங்கள் முஸ்லிம் சமூகத்தின் மீதும் தாக்கம் செலுத்துகின்றன. அந்த வகையில் நடக்கின்ற விடயங்கள் பற்றி முஸ்லிம் சமூகத்தை விழிப்பூட்ட வேண்டியது கட்டாயமாகும். ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டிய தேவை, இந்த நாட்டைப் பாதுகாக்க வேண்டிய அவசியம், தங்களது சொந்த உரிமைகளையும் சிறப்புக்களையும் பேணிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய அவசியம் முஸ்லிம் சமூகத்துக்கும் உள்ளது என்பதை முஸ்லிம்களுக்குப் புரிய வைக்க வேண்டியது அவசியமாகும்.

தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற அரசியல் நகர்வுகள் அவை முஸ்லிம் சமூகத்தின் மீது செலுத்தும் தாக்கம் என்பன பற்றி அவ்வளவாக யோசிக்கப்படுவதுமில்லை. பேசப்படுவதுமில்லை. எமது சமூகம் இவற்றைக் கையாளும் அளவும் போதியதாக இல்லை. வெள்ளிக்கிழமை பிரசாரங்கள் காலம் கடந்தவையாகிவிட்டன. அவை தாக்கம் மிக்கவையாக இல்லை. தற்போதைய யதார்த்தங்களில் இருந்து நீண்ட தூரம் அவை விலகி உள்ளன. இதனால்தான் பள்ளிவாசல்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் உலமா சபை மற்றும் அதனோடு இணைந்த பிரிவுகள் வெள்ளிக்கிழமை பிரசாரத்தை தற்கால நிலைமைகள் பற்றி முஸ்லிம் சமூகத்தை விழிப்பூட்டும் வகையில் பயன்படுத்த வேண்டும் என்ற யோசனை நீண்ட காலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. இந்த சமூகத்திடம் உருப்படியான ஒரு ஊடகம் இல்லாததால் இது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

வெள்ளிக்கிழமை ஜும்ஆ பிரசாரத்தை செவி மடுப்பதற்காக பல்வேறு தரப்பையும் சேர்ந்த முஸ்லிம்கள் ஒன்று கூடுகின்றனர். எனவே மக்களை விழிப்பூட்டும் வகையிலான கருத்துக்களை முன்வைக்க இந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்த முடியும்.

ஆனால் கடந்த பல தசாப்தங்களாக இந்தக் கோரிக்கைகள் யாவும் செவிடன் காதில் ஊதிய சங்காக மாறிவிட்டன. தற்போது நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் அரசியல் சூழல் அதனால் எமது சமூகத்துக்கு ஏற்படவுள்ள தாக்கங்கள் என்பன பற்றி ஜும்ஆ பிரசங்கத்தின் போது பேசப்பட வேண்டிய காலம் இதுவல்லவா. எமது சமூகத்தின் நிலைமையைப் பாதுகாக்க நாம் ஏனைய சமூகங்களோடு ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டிய காலமும் இதுவல்லவா.

உலமா சபை வரலாற்றின் மத்திய கால சிந்தனைப் போக்கில் இருந்து விடுபட்டு வெளிவர வேண்டிய காலம் இதுவாகும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அவர்கள் தமது சொந்த நலன்களில் இருந்து விடுபட்டு வந்து சமூகம் எதிர்நோக்கும் சவால்களைச் சந்திக்க சமூகத்தைத் தயார்படுத்தும் முயற்சிகளில் இறங்க வேண்டும்.

முஸ்லிம்களின் அரசியல் சமூக நிலை இவ்வாறு இருக்க சிவில் சமூகமும் இந்தப் பிரச்சினைகளைக் கண்டும் காணாமல் இருப்பது வெட்கக் கேடானதாகும். இந்த விடயத்தில் சிங்கள அமைப்புக்களோடு கைகோர்க்க அவர்களும் தவறிவிட்டனர். இந்தத் தேசிய நெருக்கடி நிலையில் இருந்து விடுபட சமூகத்தின் சார்பாக அவர்களும் பங்களிப்புச் செய்யத் தவறிவிட்டனர் அல்லது அவர்களின் பங்களிப்பு போதியதாக அமையவில்லை என்றுதான் குறிப்பிட வேண்டும்.

இதுதான் இந்த சமூகத்தின் இன்றைய துரதிஷ்டவசமான நிலை. மைத்திரி-ரணில் ஆட்சியின் கீழ் இந்த நாட்டுக்குள் பிரவேசித்த வெளிநாட்டு முஸ்லிம் விரோத சக்திகள் முஸ்லிம் சமூகத்தின் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட சரியான தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன. அம்பாறை, திகன, அக்குறணை ஆகிய இடங்களில் அவர்கள் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி உள்ளனர்.

இந்த சமூகம் அதுவாக ஏற்படுத்திக் கொண்டுள்ள அஞ்ஞாதவாசத்தில் இருந்து வெளியேறி பெரும்பான்மை சமூகத்தோடு கைகோர்த்து தேசிய பிரச்சினைகளில் பங்கேற்க வேண்டும். இல்லையேல் அதன் விளைவுகள் எதிர்வுகூற முடியாத பாதிப்புக்களை இந்த சமூகத்துக்கு ஏற்படுத்தும். அதைச் சந்திக்கவும் இந்த சமூகம் தயாராக வேண்டும்.

## நாட்டு நடப்புகளை... (07 ஆம் பக்கத் தொடர்)

தற்போதைய சிவில் சமூகத்தின் மனநிலை ஏதோ ஒரு புறத்திற்கு திசை திருப்பப்பட்டுள்ளது. இலங்கை என்னும் எண்ணம் அவர்களிடமில்லை. இலங்கையைப் பற்றி யோசிக்கும் சிவில் சமூகமொன்று நீண்டகாலமாக இந்நாட்டில் அரசியல்வாதிகளால் உருவாக்கப்படவில்லை. அரசியல்வாதிகள் தங்களது இருப்புக்காக சமூகத்தை தங்களுக்கென பிரித்துக் கொண்டு வித்தியாசமானதொரு மனநிலையை அவர்களுக்கு மத்தியில் ஊட்டிவிட்டுள்ளனர்.

அவரவர் சமூகத்தைப் பற்றி மாத்திரம் சிந்திக்கும் சமுதாயமொன்றே உருவாக்கப்பட்டுள்ளது. இந்தகைய சிந்தனைக்குள் இந்நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்லக்கூடிய மூன்றாம் சக்தி உருவாக வேண்டும் என்கின்ற விடயம் எடுபடாது. இது வெறும் கற்பனாவாதமாகவே இருக்கும். ஆரோக்கியமானதொரு சிவில் சமூகம் என்பது மிக முக்கியம். விக்டர் ஐவன் போன்ற ஒரு சிலர் இந்தக் கருத்தை அழுத்தம் திருத்தமாக சொல்கின்றனர்.

இந்நாட்டின் அரசியல் தலைவர்கள் செய்த மிகப்பெரும் பிழை இந்த நாட்டின் சிவில் சமூகத்தை அரசியல் பிரக்ஞையுள்ள சமூகமாக மாற்றாமையாகும். அரசியல்வாதிகள் தங்களது அரசியல் இருப்பைப் பாதுகாப்பதற்கான சிவில் சமூகத்தைப் பற்றி யோசித்தார்களே ஒழிய இந்நாட்டிற்கான சிவில் சமூகத்தை உருவாக்கவில்லை. இந்நிலையில் மூன்றாம் சக்திகள் எவற்றைச் சாதிக்கப் போகிறது? அவர்களது செயற்பாடுகள் எந்தளவுக்கு மக்கள் மத்தியில் எடுபடும் என்பது கேள்விக்குறியாகும்.

- **பலமானதொரு சிவில் சமூகத்தை கட்டியெழுப்ப மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்ன?**

மூன்றாம் சக்தி தேவையெனக் கூறுபவர்கள் அவர்களுக்குள்ளால் மாத்திரம் இவ்விடயத்தை கலந்துரையாடிக் கலைவதில் அர்த்தமில்லை. முதலில் அவர்கள் மக்களிடம் செல்ல வேண்டும். நீங்கள் இந்த நாட்டில் மக்களாக இல்லை, நீங்கள் கட்சிசார்பானவர்கள் என்பதாகவே உங்களை அடையாளப்படுத்திக் கொண்டுள்ளீர்கள். எனவே இந்த நாடு உருப்படாது என்று கூற வேண்டும்.

இலங்கை வளர்ச்சிக்குரிய காரணிகளை கொண்டுள்ளதா? வீழ்ச்சிக்குரிய காரணிகளைக் கொண்டுள்ளதா? அது எப்படி உங்களுக்கு விளங்காமல் மூடி மறைக்கப்படுகிறது. உங்களது கண்களில் மண்ணைத் தூவிவிட்டு இந்நாட்டின் அரசியல் தலைவர்கள் என்ன செய்து கொண்டுள்ளார்கள். என்கின்ற விளக்கத்தை மக்களுக்கு வழங்க வேண்டும். மக்களைத் திசை முகப்படுத்த வேண்டும். மக்கள் உள்ளங்களில் இதனை பரவலாக ஏற்படுத்தும் போதே ஆரோக்கியமானதொரு சிவில் சமூகம் உருவாகும். அதுவரைக்கும் 3ஆம் சக்தி ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும் எனக் கூற முடியாது.

- **இந்த விடயங்களில் இளைஞர்களின் செயற்பாடுகளை எவ்வாறு ஒருமுகப் படுத்தலாம்?**

இன்று பாராளுமன்றத்தை எடுத்துக் கொண்டால் படிக்காதவர்களின் தொகையே அதிகம். இந்நாட்டில் எத்தனையோ படித்த இளைஞர்கள் உள்ளார்கள். இந்நாட்டின் அரசியல் கட்டமைப்புக்குள் படித்த இளைஞர்களை உள்வாங்கும் முறையொன்று இல்லை. அரசியலமைப்பில் இது இடம்பெற வேண்டும். அரசியலமைப்பின் ஏற்பாடே இளைஞர்களின் பங்களிப்பைத் தீர்மானிக்கிறது. அரசியலமைப்பில் சில விடயங்கள் வரக்கூடாது என்றுள்ளது. உதாரணமாக கட்சி மாறினால் பாராளுமன்ற அங்கத்துவத்தை இழப்பார் என்று ஒரு ஏற்பாட்டை கொண்டு வரப்பார்த்தார்கள். அதற்கு ஒருவரும் விருப்பம் தெரிவிக்கவில்லை. காரணம், இன்று எம்மை விட்டுப் போகிறவன் நாளை எம்மோடு வந்து சேர இடமிருக்க வேண்டுமல்லவா? இந்த ஏற்பாட்டைக் கொண்டு வந்து கதவை மூடிவிட்டால் எங்களுக்கு அந்த சந்தர்ப்பம் இல்லாமல் போகும் என்று நினைத்துள்ளார்கள்.

ஆரோக்கியமான சிவில் சமூகத்தை உருவாக்குவதில் எப்படி இவர்கள் வேண்டுமென்றே ஒரு கவனயீனத்தில் உள்ளார்களோ அதேபோன்று இளைஞர்களின் பங்களிப்பையும் இந்நாட்டில் சரியான முறையில் எடுத்துக் கொள்வதற்கு ஒரு ஆக்கபூர்வமான ஏற்பாடு இந்த நாட்டின் கட்டமைப்பிற்குள் இல்லையென்றே கூற வேண்டும். இளைஞர்களுக்கான அமைச்சு உள்ளது. இளைஞர்களின் பிரச்சினைகளை ஆராயும் வேலைத்திட்டங்கள் உள்ளன. ஐ.நா.வின் இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன. ஆனால் இவை ஒரு அமைச்சுடன் தொடர்புபட்ட விடயமாக மாத்திரமே காணப்படுகிறதே ஒழிய இந்த நாட்டின் மிக முக்கிய கட்டமைப்பில் இளைஞர்களுக்கான இடம் கொடுக்கப்படவில்லை.

பெண்களை அரசியலுக்குள் கொண்டு வரப் பார்க்கிறார்கள். அவர்களுக்கு முன்னர் இளைஞர்களே உள்வாங்கப்பட வேண்டும். சர்வதேசத்தின் அழுத்தங்களின் காரணமாகவே பெண்களுக்கான ஒதுக்கீடு என்பது பற்றி யோசிக்கிறார்கள். நாட்டு நலனுக்காக யோசிப்பதாக இருந்தால் இளைஞர்களுக்கான ஒதுக்கீடு என்ன? எப்படிப்பட்ட இளைஞர்கள் என்னென்ன தகுதிகளோடு பாராளுமன்றத்திற்கு வர வேண்டும்?

இவற்றை சட்டத்திற்குள் கொண்டு வருவது ஒன்றும் பெரிய விடயமல்ல. சட்டத்திற்குள் கொண்டுவரப்படும் போது அடுத்த சந்ததியிலிருந்து படித்தொரு இளைஞர் கூட்டம் பாராளுமன்றம் செல்லும். இதற்குரிய வழியமைத்துக் கொடுக்கப்பட வேண்டும். இலங்கை அரசியலில் மிகக்கவனமாக தங்களுக்கு எதுவெல்லாம் பாதிப்பெனக் கருதுகிறார்களோ அதை எல்லோரும் சேர்ந்து அமைதியான அங்கீகாரத்துடன் எழுதப்படாத ஒப்பந்தத்துடன் செய்துகொண்டுள்ளனர். இப்படித் தந்திரங்களால் நாட்டை ஆள முயற்சிப்பது இந்த நாட்டை நல்லதொரு இடத்திற்கு கொண்டுவர மாட்டாது.

- **முஸ்லிம்களது பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு இலங்கையிலுள்ள இஸ்லாமிய இயக்கங்கள் கூட்டாகச் சேர்ந்து பணியாற்ற வேண்டியதன் தேவை குறித்து உங்களது அவதானங்களை தெளிவுபடுத்த முடியுமா?**

இப்படியானதொரு முன்னெடுப்பு இல்லையென்பது கவலையான விடயம். ஒரு அனர்த்தம் வரும் போதே இயக்கங்கள் பொதுவாக இணைந்து வேலைசெய்யும் தோற்றப்பாடு வருகின்றது. பாதிப்பொன்று வந்தால் நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து விட வேண்டும் என்கின்ற மனநிலையே இயக்கங்களிடம் காணப்படுகிறது. தற்போதைய அரசியல் நெருக்கடியை நாம் பேரின சமூகத்தவர்களின் அதிகாரப் போராட்டம் என்பதாக மாத்திரமே நோக்குகிறோம். நாட்டை முன்னிலைப்படுத்தி அந்தப் பிரச்சினையை பார்ப்பதில்லை. நாட்டை மையப்படுத்தி யோசிப்பவர்களுக்கே இந்தப் பிரச்சினையை அவசரமாகத் தீர்க்க வேண்டும் என்ற மனப்பாங்கு வருகிறது. தமிழர்கள் வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பாகவும் உரிமை அரசியல் குறித்தும் பேசுகிறார்கள். முஸ்லிம்கள் காலா காலமாக தனித்துவ அரசியல் என்று முஸ்லிம் அரசியல் ஒன்றை வளர்த்துள்ளார். இயக்கங்கள் தங்களுக்கென இஸ்லாம் சார்ந்த நலன்களை வகுத்துச் செயற்படும் போக்கை காண்கிறோம். இதற்கிடையில் அனர்த்தம் என்று வரும் போது இணைந்து செயற்படுவது பற்றி யோசிக்கிறோம். இங்கு சமூகத்திற்கு ஒரு பிரச்சினை வருகிறது என்கின்ற பார்வையின் விளைவாகவே இந்த இணைவு தொடர்பில் யோசிக்கிறோம். சாதாரண நிலைமைகளில் இயக்கங்கள் அவையவை வகுத்துக் கொண்ட இஸ்லாமிய நலன்களை மையப்படுத்தியே செயற்படுகின்றன.

அனர்த்தம் வராதவரையில் இயக்கங்கள் நாட்டில் இடம்பெறும் பிரச்சினைகள் குறித்து சிந்திப்பது குறைவு. எனவே எமக்கு மத்தியில் மனநிலை மாற்றம் இடம்பெற வேண்டும். நபிமார்களின் பணிகளில் இரண்டு பகுதிகள் உள்ளன. ஒன்று நாட்டு மக்களின் நலன்களை கவனித்துள்ளார்கள். இரண்டாவது அவர்களுடைய தஃவாவை மேற்கொண்டுள்ளார்கள். நபிமார்களின் ஒரு பக்கத்தையே நாம் எடுத்துக்கொண்டுள்ளோம். நபிமார்கள் தமது தேசத்தின் இயற்கை வளர்ச்சி, பாதுகாப்பு குறித்து சிந்தித்தவை எமது மனங்களில் இல்லை. அது இஸ்லாமாகப் படுவதில்லை. அனர்த்தங்களின் போது மாத்திரம் இணைந்து செயற்பட்டு விட்டு அதனை தொடர்ந்து நாம் எமது இடங்களுக்கு வருகின்றோம். இதனால் எமக்கு தொடர்ந்து வேலைசெய்ய முடியாமல் உள்ளது. தொடர்ந்து பணியாற்ற வேண்டுமென்றால் அந்த வேலைக்குப் பின்னால் இப்படியொரு பார்வை வர வேண்டும். அதாவது, எமது நாட்டு நலன்கள், மக்களின் விடயங்களை கவனிப்பது இஸ்லாமிய பணிகளில் ஒன்று. இது நபிமார்களின் பணி என்பதை சிந்திக்க வேண்டும்.

சூரா மும்தஹினாவின் 8ஆவது வசனத்தில் அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகின்றான். ''மார்க்கத்தை காரணமாக வைத்து உங்களுடன் போராடாதவர்கள், அதைக் காரணமாக வைத்து வாழ்விடங்களில் இருந்து உங்களை வெளியேற்றாதவர்களுடன் நீங்கள் எவ்வளவு நன்றாக நடக்க முடியுமோ அவ்வளவு நன்றாக நடந்து கொள்ளுங்கள், அவர்களுடன் நீதியாகவே உங்களுடைய விடயங்களை கையாளுங்கள்'' யூசுப் அல்கர்ளாவி முஸ்லிமல்லாதவர்களுடனான உறவுக்கோர் சாசனம் என இந்த வசனத்தை குறிப்பிட்டுள்ளார். இந்த மனநிலை இல்லாததால் இயக்கங்களுக்கு இடையில் இணைந்த போக்கு இல்லை.


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | 4000.00 | ஐக்கிய இராச்சியம் | 5500.00 |
| 12 இதழ்கள் | ரூபா 600.00 | தனிப் பிரதி | ரூபா 100.00 | மலேசியா | 4000.00 | அமெரிக்கா | 6500.00 |
| 24 இதழ்கள் | ரூபா 1200.00 | ஒரு வருடம் | ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | 4000.00 | அவுஸ்திரேலியா | 4700.00 |
| | | | | | | சீனா | 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661 People's Bank A/c: 0561001[illegible]78164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிட்சும்... (01 ஆம் பக்கத் தொடர்)

அரசியல் நிலைகளுமே இதற்குக் காரணம் என பிட்ச் சுட்டிக் காட்டியுள்ளது. முதலீட்டாளர்களின் வெளியேற்றமும் நாணயத்தின் மதிப்பிறக்கமும் இதற்கான ஏனைய காரணங்களாகும் எனவும் அதனது அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

செப்டம்பர் மாதத்தின் தரவுகளின் படி, இலங்கையின் 2019-2022 காலப் பகுதியில் செலுத்த வேண்டிய வெளிநாட்டு நாணயத்திலான கடன் கொடுப்பனவு 20.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். ஆனால் இலங்கையிடம் வெளிநாட்டு நாணய ஒதுக்கீடாக தற்போது 7.5 பில்லியன் அமெரிக்க டொலர்களே இருக்கின்றன. இதற்கான நிதி திரட்டுவதற்கு இலங்கை முயற்சிக்க முனைந்தாலும் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரத்தன்மையின்மையினால் அதற்கான அவகாசம் அரிதாகவே உள்ளதாகவும் பிட்ச் குறிப்பிட்டுள்ளது.

2019-2020 இல் கடனுக்கும் மொத்தத் தேசிய உற்பத்திக்குமான விகிதாசாரம் குறைவடையலாம் என பிட்ச் எதிர்பார்த்த போதிலும், அது அதியுயர்ந்த வீதமான 80 வீதத்தை விடக் குறைவதற்கான வாய்ப் பில்லை எனக் குறிப்பிடும் அந்த அறிக்கை, 2019 க்கான பட்ஜட்டின் துண்டு விழும் தொகை உள்நாட்டு உற்பத்தியில் 4 வீதமாக எதிர்பார்க்கப்பட்ட போதும் இந்த எதிர்பார்ப்பு தற்போது 5 வீதமாக அதிகரித்துள்ளது எனவும் சுட்டிக் காட்டியுள்ளது.

## அரசியல்... (01 ஆம் பக்கத் தொடர்)

கட்சி அரசியலைத் தாண்டி இது நீதிக்கும் நியாயத்துக்குமாகக் குரல் கொடுக்க வேண்டிய தருணம் என்ற வகையில் முஸ்லிம் சமூகத்தின் பங்கு இந்த இடத்தில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

இலங்கையின் முஸ்லிம் அரசியல் கட்சிகள் இந்த விடயத்தில் நியாயமான தொரு முடிவை எடுத்துள்ளன. இருந்த போதிலும் முஸ்லிம்களை சமய ரீதியாக வழிநடத்தும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, அரசியல் விவகாரங்களுக்கென ஒரு பிரிவை உருவாக்கி அதற்கான தலைவரையும் நியமித்த போதிலும் இந்த இக்கட்டான நிலையில் இந்தப் பிரிவு சமூகத்துக்கு வழிகாட்டாமல் மௌனமாக இருப்பது முஸ்லிம் சமூகத்தின் அவதானத்துக்கு உட்பட்டிருக்கிறது.

அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் அஷ்ஷெய்க் அகார் முஹம்மத் அவர்களினால் கடந்த ஜனவரி தேர்தல் காலங்களில் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுக்குப் பின்னர் இதுவரை எந்த விதமான அரசியல் வழிகாட்டல்களும் ஜம்மியதுல் உலமாவின் அரசியல் பிரிவினால் வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை. முஸ்லிம் சிவில் சமூக செயற் பாடுகள் பெரிதும் வேண்டப்படும் இந்த நிலையில் இந்த அரசியல் பிரிவின் செயற்பாடு பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

## சதொச... (01 ஆம் பக்கத் தொடர்)

உசாவியதில் இவை போலியான சான்றிதழ்கள் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுவரை ஐந்து பேர் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்தச் சான்றிதழ்களை வைத்து இவர்கள் அதிக சம்பளத்துடனான உயர்பதவிகளை வகித்து வந்துள்ளனர்.

சிரேஷ்ட முகாமையாளர் - இயக்கம் பதவியை வகித்தவர், ஐக்கிய இராச்சியத்தின் Hertfordshire பல்கலைக்கழகத்தில் MBA சான்றிதழை சமர்ப்பித்திருந்தார். நிறைவேற்று அதிகாரியாகக் கடமையாற்றியவரும் இதே பல்கலைக் கழகத்தில் சந்தைப்படுத்தலில் முதுமாணி (Phd) சான்றிதழைச் சமர்ப்பித்திருந்தார். சந்தைப்படுத்தல் பிரதி பொது முகாமையாளர் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் Bsc சான்றிதழையும், சந்தைப் படுத்தல் சிரேஷ்ட முகாமையாளர் உயர்தர சித்திக்குப் பகரமாக பட்டதாரிச் சான்றிதழையும், கொள்வனவு முகாமையாளர் லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தின் MBA சான்றிதழையும் போலியாகச் சமர்ப்பித்திருந்தனர்.

## முஸ்லிம்... (01 ஆம் பக்கத் தொடர்)

எதிர்வரும் காலங்களில் இந்தக் கூட்டணிக்கு ஆதரவளிப்பதன் ஊடாக தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான உடன்படிக்கையொன்றை எழுத்து மூலம் வரைந்தெடுத்து அதற்குரிய இணக்கப்பாட்டைப் பெற்றதன் பின்னரே புதிய கூட்டணிக்கு ஆதரவு வழங்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டணி தீர்மானித்துள்ளது.

இதேவேளை ஐக்கிய தேசிய முன்னணி புதிதாக உருவாக்கவிருக்கும் கூட்டணிக்கு இரண்டு பிரதான முஸ்லிம் கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளன. இந்தக் கூட்டணிக்கான யாப்பு வரையப்படும் இந்தச் சந்தர்ப்பத்தில் அவை முஸ்லிம் சமூகம் தொடர்பில் எந்த வகையான கோரிக்கைகளை முன்வைத்து ஆதரவு தெரிவிக்க முன்வந்திருக்கின்றன என்பது இதுவரை மூடுமந்திரமாகவே இருந்து வருகிறது.

முன்னைய காலங்களில் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு ஆதரவு வழங்கிய போதும் முஸ்லிம் சமூகம் தொடர்பாக, குறைந்த பட்சம் சமூகத்தின் பாதுகாப்புத் தொடர்பாகவாவது, எந்தக் கோரிக்கையும் முன்வைக்கப்படவில்லை. பின்னர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகும் போதும் கூட எந்த விதமான உடன்படிக்கைகளும் முஸ்லிம் சமூகம் சார்பில் இவர்களால் முன்வைக்கப்படவில்லை. உள்ளூராட்சித் தேர்தல்களில் நேரடியாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேர்தலில் குதித்த போதும் முஸ்லிம் சமூகத்தின் சார்பில் எந்த ஒப்பந்தமும் செய்து கொள்ளப்படவில்லை. இதனால் முஸ்லிம் சமூகம் கடந்த பத்து வருடங்களாக தொடர்ந்தும் அடிவாங்கி வருகின்ற நிலையிலும், முஸ்லிம் சமூகம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் முன்னெப்போதுமில்லாத அளவுக்கு அதிகரித்திருக்கும் நிலையிலும் முஸ்லிம் அரசிகள் கட்சிகள் பதவிகளை முன்னிலைப்படுத்தாது சமூகத்தை முற்படுத்த வேண்டும் எனவும், அதற்குரிய சந்தர்ப்பமாக கூட்டணிக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கான நிபந்தனைகள் அமைய வேண்டும் எனவும் சமூக ஆர்வலர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

## பிணைமுறி... (01 ஆம் பக்கத் தொடர்)

இதன்போது தனது அண்மைக்கால நடவடிக்கைகளை ஜனாதிபதி நியாயப் படுத்திப் பேசியுள்ளார். இருதரப்பினரையும் ஊடகங்களையும் சாடிய ஜனாதிபதி, இவர்களே விவகாரத்தை ஊதிப் பெருப்பிப்பதாகவும் குற்றம் சாட்டினார். அரசியல் கொந்தளிப்போ, பாராளுமன்ற உறுப்பினர்களின் நெறிமுறை தவறிய செயற்பாடுகளோ இப்பொழுது தான் நடக்கின்ற ஒன்றல்ல எனவும் அவர் அவர்களுக்கு விளக்கமளித்துள்ளார்.

தற் பொழுது தலையிடுவது போல பிணை முறி விவகாரத்தின் போது ஏன் நீங்கள் தலையிடவில்லை என்றும் வர்த்தகத் தலைவர்களை நோக்கி அவர் கேட்டுள்ளார். இந்தச் சந்திப்பில் இலங்கை வணிகக் கழகம் (CCC), வணிக் மற்றும் தொழிற் துறை கழகங்களின் சம்மேளனம் (FCCISL), தேசிய வணிகக் கழகம் (NCC), இலங்கை தேசிய தொழிற் துறைக் கழகம் (CNCI), தேசிய ஏற்றுமதியாளர் கழகம் (NCE), சர்வதேச வணிகக் கழகம் - இலங்கை (ICCSL), இலங்கை ஆடைக் கைத்தொழில் (JAAF), இலங்கை இளம் தொழில்வாண்மையாளர்கள் கழகம் (COYLE), மகளிர் வணிக மற்றும் தொழிற்துறை கழகம் (WCCI) ஆகிய வற்றின் தலைவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

## தமிழர்... (01 ஆம் பக்கத் தொடர்)

இவ்வாறு தயாரிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பின் ஊடாக தமிழ் மக்களின் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், புதிய அரசியலமைப்பு தமிழர்களின் அரசியல் தீர்வாக அமைய வேண்டும் என்பதற்கும் இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், இவ்வாறு சமர்ப்பிக்கப் படவுள்ள அரசியலமைப்பு வரைபை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதற்கான முயற்சிகளில் தாம் ஈடுபட வேண்டும் என்ற விடயத்திலும் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விடுவிக்கப்படாதுள்ள காணிகளை டிசம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி வழங்கிய உறுதி மொழிக்கு, ஆதரவு வழங்கவும் ஐக்கிய தேசிய முன்னணி இணக்கம் தெரிவித்துள்ளதாகவும்நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கூறியுள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கைகளிலும், அதற்கான திட்டங்களை வகுக்கும் நடவடிக்கைகளிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கிய பங்கை வகிக்க வேண்டும் என முன்வைக்கப் பட்ட கோரிக்கைக்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தமிழ் அரசியல் கைதிகளில் விடுதலை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்படும் காணி பிரச்சனைகள், காணிகளை அத்துமீறி தன்வசப்படுத்தும் நடவடிக்கைகளை தவிர்த்தல் போன்ற நடவடிக்கைகளுக்கும் ஐக்கிய தேசிய முன்னணியினர் தம்முடன் இணக்கத்தை எட்டியுள்ளதாக மாவை சேனாதிராஜா கூறியுள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பான தீர்மானத்தை எடுக்கும் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கொண்ட ஒரு கட்டமைப்புக்கு சில அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கும் இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான அனைத்து கோரிக்கைகளையும் உள்ளடக்கிய வகையிலான எழுத்துமூல ஆவணமொன்று எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வுகளின் போது, இரு தரப்பினரும் பரிமாற்றிக் கொள்வதற்கான தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவிக்கின்றார்.

## அரசியலில்... (11 ஆம் பக்கத் தொடர்)

தலைமையிலான சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பலரும். அவர்களோடு அணி சேர்ந்துள்ள ஏனைய சில பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரு குழுவாக இயங்கி வருகின்றனர். அவர்களும் எதிர்வரக்கூடிய தேர்தல்களை சந்திக்கவுள்ளனர்.

இவற்றுக்கு அப்பால் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் எந்த அணியிலும் கலந்து கொள்வதில்லை எனத் தெரிவித்துள்ளனர். ஆனால், தமிழ் அரசியல் பல கட்சிகளாகப் பரிணமித்து செயற்படுகின்றது. அவற்றில் முன்னாள் வடமாகாண முதலமைச்சர் விக்னேஷ்வரனின் தலைமையிலான புதிய கட்சி, முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையானின் கட்சி, கஜேந்திர குமாரின் கட்சி இவற்றோடு பல சிறிய கட்சிகளும் உருவாகியுள்ளன.

இவைகளுக்கு அப்பால் எல்லா சமூகத்தவர்களையும் உள்ளடக்கி சிவில் சமூக செயற்பாட்டில் ஈடுபட்ட கல்வியலாளர்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டில் தனிநபர்களாக ஈடுபட்டு வருகின்ற சிலரும் ஒன்றிணைந்து ஓரணியாக அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க இருக்கின்றனர்.

இவற்றில், முஸ்லிம் அரசியலிலும் தேசிய அரசியலிலும் மூன்றாம் சக்தியாக பரிணமித்திருக்கும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி எந்த அணியை முதன்மைப்படுத்தி செயற்படப் போகின்றது. அதன் அரசியல் பயணத்திற்கு இத்தேர்தல் எவ்வாறு வழிவகுக்கும். என்பது முஸ்லிம்களுக்கு மத்தியில் இருக்கின்ற பிரதான பேசு பொருளாக உதயமாகியுள்ளது.

### அணிகளும் ஆட்சி அமைப்பும்

இவைகளை நோக்குகின்ற போது இலங்கை இரட்டை கட்சி ஆட்சி முறையைக் கொண்ட நாடாகும். இங்கு ஐக்கிய தேசியக் கட்சி அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிதான் ஆட்சியமைத்து வந்துள்ளது. ஆனால், எதிர்வரும் காலங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தூர்ந்து போகும் நிலையில் இருக்கின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இடத்தை ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன (மஹிந்த அணி) நிரப்பலாம் என பலராலும் எதிர்வு கூறப்படுகின்றது.

எனவே, எத்தனை கூட்டணிகள் அமைத்தாலும், இறுதியில் ஆட்சியமைப்பது இந்த இரண்டு கட்சிகளும்தான். இவற்றில் இரண்டு கட்சிகளுமே இலங்கை சிறுபான்மையினர் விவகாரத்தில் மாற்று சிந்தனையையே கொண்டுள்ளார்கள். இருந்தும் இறுதியில் இவர்களில் ஒருவரோடுதான் அனைத்து கட்சிகளும் பேரம் பேசிகூட்டுச்சேர்ந்து ஆட்சியமைக்கின்றன.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் அமையப் போகின்ற பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அல்லது ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன (மஹிந்த அணி) ஆட்சியமைக்கும் வாய்ப்புக்களே அதிகமாகக் காணப்படுகின்றன. இவைகளில் இந்த சிறிய அணியினர் யாரோடு கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைப்பார்கள்? என்பதே முக்கிய விடயமாகும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் ஐக்கிய தேசியக் கட்சியோடு பயணிக்கின்றன. ஆனால், முன்னாள் அமைச்சர் அதாவுல்லா, அமைச்சர் ஹிஸ்புல்லா, அமைச்சர் பைசல் முஸ்தபா மற்றும் பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் ஆகியோர் மஹிந்த அணியிலே இருக்கிறார்கள். இவர்களில் சிலர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து பயணிக்கலாம்.

இவற்றில், பொதுத் தேர்தலின் பின்னர் அமையப் போகின்ற பாராளுமன்றத்தில், தற்போது சுயமாக இயங்குகின்ற ஜே.வி.பி. மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சுயமாக இயங்குமா அல்லது ஏதாவது ஒரு பக்கம் சாய்வார்களா? என்பது முக்கிய விடயமாகும். அதேநேரம், சிவில் சமூக செயற்பாடுகளில் ஈடுபட்ட சிலரும் அரசியலில் தனிநபர்களாக செயற்படுகின்ற ஏனையோரும் இணைந்து ஒரு கூட்டணி அமைக்கப் போவதாக பேசப்படுகின்றது. இவர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் இரண்டு அல்லது மூன்று ஆசனங்களைப் பெறுவார்களாயின். பாராளுமன்றத்தில் எந்த அணிக்கு ஆதரவாக செயற்படுவார்கள்? வாக்களிப்பார்கள்? அல்லது ஜே.வி.பி. மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எடுக்கின்ற நிலைப்பாட்டில் இருப்பார்களா? என்பது தெளிவில்லாமலே இருக்கின்றது.

இவைகளை ஒப்பிட்டு நோக்குகின்ற போது, எல்லாக் கட்சிகளும் கொள்கைகளோடுதான் இருக்கின்றன. ஆனால், அவைகள் காலத்திற்குக் காலம் வெவ்வேறு பரிணாமம் எடுக்கின்றன. ஏனெனில், கொள்கைகளின் வெற்றி அதனை மக்கள் மயப்படுவதிலும் மக்கள் சக்தியாக மாற்றப்படுவதிலுமே தங்கி இருக்கின்றது. ஒரு கொள்கையை மக்கள் சக்தியாக மாற்றுவதற்கு தந்திரோபாயங்கள் தேவை. எல்லா வெற்றி பெற்ற தந்திரோபாயங்களும் கொள்கைகளின் பிரயோக வடிவங்களே.

தூய தங்கத்தை வைத்து நகை செய்ய முடியாது. தற்போது ஏற்பட்டுள்ள பண வீக்கத்திற்காக பணப் பெறுமதி அதிகரிப்பதற்காக அதை சேமித்து வைத்திருக்கலாம். ஆனால் வாழ்க்கைத் தேவைக்காகப் பயன்படுத்துவதற்கு நகைகளாக்குவதென்றால் குறிப்பிடத்தக்க அளவு செம்பைக் கலக்க வேண்டும். செம்பைக் கலந்தால் தான் தங்கத்தை நகையாக்கலாம். அதாவது வாழ்க்கைக்குத் தேவையான நிலைக்குக் கொண்டு வரலாம். அதில் தங்கத்தின் தூய்மை கெடாமல் செம்பைக் கலக்க வேண்டும்.

அப்படித்தான் ஒரு கொள்கையை செயலுருப்படுத்துவதற்கும் தந்திரோபாயங்கள் அவசியம். உலகில் தோன்றிய பெரும்பாலான அரசியற் கூட்டுக்கள் தந்திரோபாய ரீதியிலானவை. நிரந்தரமானவையல்ல. நிரந்தரமான கூட்டுக்கள் மிகவும் அரிது. கூட்டு என்றாலே அது ஒரு தந்திரம் தான். அதில் நெளிவு சுளிவு இருக்கும். விட்டுக்கொடுப்பு இருக்கும். நெகிழ்ச்சி இருக்கும்.

இவ் அரசியல் சூழ்நிலையில் புதிய அரசியல் கட்சியான நல்லாட்சிக்கான தேசிய முன்னணி எந்த வழிமுறையைக் கடைபிடிக்கப் போகிறது? அதன் கூட்டு எவ்வாறு அமையப் போகிறது? எந்த அணியோடு இவர்கள் பயணிக்கப் போகிறார்கள்? என்பதும், அல்லது சுயதீனமாக தனித்து பயணிக்கப் போகின்றார்களா? என்பதும் முக்கிய கேள்விகளாகும்.

மேலும், அமையப் போகின்ற பாராளுமன்றத்தில் தனக்குக் கிடைக்கின்ற ஆசனத்தைக் கொண்டு அல்லது தான் இணைந்து பயணிக்கின்ற ஆசனத்தை எந்த கூட்டுக்கு ஒத்துழைக்கப் போகிறார்கள்? இவைகளுக்கு அப்பால் சுயாதீனமாக இலங்கைத் தேசத்தின் முக்கிய குரலாக பாராளுமன்றத்தில் ஒலிக்கப் போகின்றார்களா? அல்லது அனைத்தையும் ஒதுக்கி வைத்து விட்டு, மௌனியாக அனைத்தையும் அவதானிக்கப் போகின்றார்களா? பொறுத்திருந்து அவதானிப்போம்.

## தலைவர்களில்... (11 ஆம் பக்கத் தொடர்)

இலங்கை இரு கட்சிமுறை உள்ள ஒரு நாடாகவும் பெரும்பான்மை சிங்கள மக்கள் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக கடந்த காலத்தில் இருந்தாலும் அண்மைக் கால அரசியல் மாற்றங்களில் சிறுபான்மைக் கட்சிகளான டீ.என்.ஏ, மு.கா, அ.இ.ம.கா போன்ற சிறுபான்மைக் கட்சிகளின் வகிபாகம் தவிர்க்க முடியாதுள்ளதை நாம் அவதானிக்கலாம். எனவே இலங்கையர் என்ற வகையில் இக்கட்சிகளுக்கும் நாட்டு நலனில் முக்கியமான வகிபாகம் உண்டு என்பதை தட்டிக் கழிக்க முடியாது.

இந்த வகையில் டீ.என்.ஏ ஆசனங்களை கொண்டு இலங்கை பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாகச் செயற்படுகிறது. ஆனால் டீ.என்.ஏ தனது எதிர்க்கட்சி அரசியல் செயற்பாட்டில் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுத்தல் என்ற நோக்கத்தையும் தாண்டி நாட்டின் பொதுவான அரசியலில் அதன் வகிபாகத்தில் பாரிய ஒரு இடைவெளியை விட்டதாகவே மக்கள் நோக்குகின்றனர். அத்தகைய அரசியல் நெருக்கடியில் டீ.என்.ஏ. யின் வகிபாகம் முக்கியமானது.

இவ்வாறே முஸ்லிம் அரசியல் கட்சி[illegible]களும் கடந்த காலத்தில் ஆட்சி மாற்றத்திற்காக முக்கிய வகிபாகத்தை கொண்டிருந்தமையாலும் ஆட்சி மாற்றத்திற்கான பேரம் பேசலில் சமூக நலன்கள், நாட்டு நலன்கள் முக்கியம் பெறாமல் கட்சி நலன் முற்படுத்திய அரசியல் நகர்வே அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இருந்தாலும் இன்றைய அரசியல் சூழ்நிலையில் முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாடு திருப்திகரமானதாக இருந்ததோடு கடந்த கறைகளுக்கான ஒரு பரிகாரமாகவும் பயன்படுத்திக் கொண்டனர். இருந்தாலும் இந்த நிலைப்பாடுகளில் இன்னும் [illegible] ரவை வழங்கும் போது அதில் நாட்டின் நலன் எது முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளது. தான் சார்ந்த சமூக நலன் எவ்வளவு முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளது என்ற விடயங்களில் வெளிப்படைத் தன்மையோடு சமூகத்திற்கு விளங்கப் படுத்த வேண்டும்.

இறுதியில் இக்கட்டான இந்த அரசியல் நெருக்கடி மிகுந்த காலத்தில் பொறுப்புள்ள அரசியல் தலைவர்களாக விட்டுக் கொடுப்புடன் செயற்பட்டு நாட்டின் பொருளாதாரமும் ஜனநாயக விழுமியங்களும் பாதுகாக்கப்படுவதற்கு இவர்கள் முன்வர வேண்டும். இல்லாவிட்டால் நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வது மட்டுமல்லாமல், பெரும் அரசியல் முரண்பாடுகளும் வன்முறையும் தோன்றுவதற்குக் காரணமாக அமையலாம்.

இந்த இக்கட்டான நிலையில் எல்லா விடயங்களையும் அரசியல் தலைமைகளிடம் மட்டும் பாரம் சாட்டி விடாமல் நாட்டின் புத்திஜீவித்துவ சமூகமும் பிரஜைகளும் உண்மைகளை கண்டறிந்து பொருத்தமான தலைமைகளுக்கு ஆதரவினை நல்கி பலப்படுத்தி நாட்டை அராஜக சூழலில் இருந்து மீட்டெடுக்கும் போராட்டத்தில் இணைந்து கொள்வோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## 30 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா

# நுஸ்ரத் பானுவுக்கு 02 வெள்ளிப் பதக்கங்கள்

ஒக்டோபர் இறுதியில் மாத்தறை கொடவில மைதானத்தில் நடந்து முடிந்த 30 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில் திருகோணமலை மாவட்டம் சார்பில் ஏ. நுஸ்ரத் பானு 20 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கான தட்டெறிதலில் 26.09 மீற்றர் எறிந்து வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார். தொடர்ந்து 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான குண்டெறிதல் போட்டியிலும் அவர் 9.23 மீற்றர் எறிந்து வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்துக் கொண்டார்.

திருகோணமலை ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவியான இவர், குண்டெறிதல், தட்டெறிதல், பளுதூக்கல் போட்டிகளில் மாகாண மட்ட சாதனைகள் பலதும் படைத்துள்ளார்.

20 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கிடையிலான 4 X 100 மீட்டர் அஞ்சலோட்டப் போட்டியில் அம்பாறை மாவட்டம் தங்கப் பதக்கத்தை வென்றது. மொஹமட் மஸ்பூத் தலைமையில் யூசுப் ரகீப், அஸாத் கான், சம்லி ஆகியோரடங்கிய சாய்ந்தமருது பிரதேச இளைஞர் அணியே முதற் தடவையாக தங்கம் வென்றது.

20 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான 4x400 மீட்டர் அஞ்சலோட்டப் போட்டியிலும் அம்பாறை அணி வெள்ளிப்பதக்கம் வென்று சாதனை படைத்தது. இஜாஸ், ரிஸ்வான், அஸ்லம், ரகீப் ஆகியோர் இந்த அணியில் இடம் பிடித்திருந்தனர்.


20 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தலில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஏ.பி.எம். நதீர் வெள்ளிப் பதக்கம் வென்றார். 20 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் திரு கோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த எச்.எம். ரிஹான் வெள்ளிப் பதக்கம் வென்றார். 20 வயதுக்கு மேற் பட்ட ஆண்களுக்கான 110 மீட்டர் சட்ட வேலி ஓட்டத்தில் அம்பாறை மாவட் டத்தைச் சேர்ந்த ஏ.ஜே. சிப்கார் அஹமட் வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

இதன்படி இம்முறை கிழக்கு மாகா ணத்தைச் சேர்ந்தவர்களே 30 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா வை ஆக்கிரமித்திருந்தனர். இவை தவிர இன்னும் பல போட்டிகளிலும் கிழக்கு மாகாணப் போட்டியாளர்கள் கலந்து கொண்ட போதிலும் அவர்களால் இம்முறை சோபிக்க முடியவில்லை.

20 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான போட்டிகளில் 10,000 மீட்டர் ஓட்டப் போட்டியில் யூ.எல்.எம். பயாஸ் (மட்டக்களப்பு) 07 ஆம் இடத்தையும், குண்டெறிதலில் எம்.எப்.எம். பாஹிம் (மாத்தளை) 04 ஆம் இடத்தையும், நீளம் பாய்தலில் ஐ.எம். ஆஷிக் (அம்பாறை) 07 ஆம் இடத்தையும், என்.எம்.ரியாஸ் கான் (அம்பாறை) 08 ஆம் இடத்தையும், 200 மீட்டர் ஓட்டத்தில் எம்.யூ.ஏ. ஷாமில் (அம்பாறை) 05 ஆம் இடத்தையும், 800 மீட்டர் ஓட்டத்தில் எம்.எம். மிஸ்ரத் (மட்டக்களப்பு) 06 ஆம் இடத்தையும், எம்.எம். இஜாஸ் (திருகோணமலை) 08 ஆம் இடத்தையும், 110 மீட்டர் சட்ட வேலி ஓட்டத்தில் ஏ.எம்.எம். ரிஸ்வான் (அம்பாறை) 05 ஆம் இடத்தையும், ஈட்டி எறிதலில் எம்.ஏ.ராஸிக் அஹமட் (அம்பாறை) 08 ஆம் இடத்தையும், 100 மீட்டர் ஓட்டத்தில் எம்.யூ.ஏ.ஷாமில் (அம்பாறை) 05 ஆம் இடத்தையும் பெற்றிருந்தனர்.

20 வயதுக்குக் கீழ் ஆண்களுக்கான போட்டிகளில் உயரம் பாய்தலில் எம்.ஆர்.எம்.ரிம்ஸான் (திருகோணமலை) 08 ஆவது இடத்தையும், குண்டெறிதலில் எம்.எஸ்.இஷ்பாக் அஹமட் (திருகோணமலை) 05 ஆம் இடத்தையும் பெற்றிருந்தனர்.

வெளிவந்து விட்டது




Published by:
Salamah Publication
No. 1 A, Hill Castle Place, Bandaranayaka Mawatha, Colombo 12 Contact: 0777 386364








MFCD நிறுவனத்தின் அனுசரணையில் 'அனர்த்தங்களின் போதான தயார் நிலை' பயிற்சிப்பட்டறை ஏறாவூர் அல் ஜுப்ரிய்யா வித்தியாலயத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, மொனறாகலை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த தன்னார்வ தொண்டர்கள் 100 பேர் இப் பயிற்சிப் பட்டறையில் கலந்து பயன்பெற்றனர். அனர்த்தங்களின் போது அரச நிறுவனங்களை எவ்வாறு தொடர்பு கொள்வது என்ற தலைப்பில் அஷ்ரப் ஹூசைன் அவர்களும் , தீயணைப்பு முகாமை மற்றும் மீட்பு தொடர்பிலான பயிற்சியை எம்.ஆர்.எம்.ரில்வான் அவர்களும் வழங்கினர். இந் நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக ஷூஊஇச நிறுவனத்தின் தலைவர் ஹனான் ஹூசைன் மற்றும் திட்டமுகாமையாளர் ஹஸ்ரிம், ஏறாவூர் நகர சபையின் தவிசாளர் ஐ. வாசித் அலி, ஆகியோர் கலந்து கொண்டதோடு ஊர் பிரமுகர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர். குறித்த பயிற்சி நெறியில் கலந்து கொண்டவர்களுக்கான சன்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டன. இப்பயிற்சி பட்டறையை ஏறாவூர் ஸலாமா பேரவை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.







மீலாதுந் நபியை முன்னிட்டு கரிட்டாஸ் அமைப்புடன், நீர்கொழும்பு ஜமாஅதுஸ் ஸலாமா கிளை இணைந்து நீர்கொழும்பு பொது வைத்தியசாலையின் ENT அறையை (No.2) சுவர் வர்ணம் பூசி, சிரமதானப் பணி மேற்கொண்டனர். சர்வமதத் தலைவர்களின் உரைகளும் இடம்பெற்றன. இதன்போது நீர்கொழும்பு ஜமாஅதுஸ் ஸலாமா கிளையினால் வைத்தியசாலை வார்டிற்குத் தேவையான கட்டில் சீலைகளும் வழங்கப்பட்டன.










மீள்பார்வை வாரத்தை முன்னிட்டு ஹெம்மாதகம பிரதேசத்தில் நடத்தப்பட்ட நிகழ்வுகள் ஹெம்மாதகம அல் அஸ்ஹர் கல்லூரியின் அறிஞர் சித்தி லெப்பை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. பிரதம அதிதியாக மீள்பார்வையின் முன்னாள் பிரதம ஆசிரியரும் தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வருகை தரு விரிவுரையாளருமான சிராஜ் மஷ்ஹூர் கலந்து சிறப்பித்தார்.

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org